பக்கங்கள்: முப்பத்து இரண்டு + 10

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை (30.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 338



17

காற்றில் கரைந்துவிட்ட பயங்கரவாத பூச்சாண்டி



23

நாடறிந்த நாட்டாரிசை கலைஞர்



29

தொடரும் இலங்கையின் சோகம்

# மகனை ஒரு மாத காலத்துக்குள் மீட்டுத் தராவிட்டால் தற்கொலை

## செய்வேன் எனப் பரிதவிக்கிறார் குருநகர் தாய் மனித உரிமைகள் ஆணையர் முன் கண்ணீர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30

2007ஆம் ஆண்டு இராணுவத்தினர் கைது செய்த தனது மகனை இன்னும் ஒரு மாதத்துக்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மீட்டுத் தரத் தவறினால் தற்கொலை செய்துகொள்வேன் என்று குருநகரைச் சேர்ந்த தாய் நேற்று ஆவேசத்துடன் தெரிவித்தார். அதிகாரிகள் முன்பாக இதனை அவர் கூறும்போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பிராந்தியக் கிளையின் ஏற்பாட்டில் சிவில் சமூகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ். நகரில் உள்ள விடுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தாய் ஒருவர் மனித உரிமைகள் ஆணையாளரிடம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். கடந்த நான்கு வருடங்களாகத் தனது மகனைத் தேடி அலைந்தும் பல்வேறு இடங்களிலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்தும் எந்தப் பதிலும் கிடைக்காத நிலையில் தான் விரக்தி

பக் 31

# எரிபொருள் விலை நள்ளிரவு முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.30

எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவுமுதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 12 ரூபாவாலும், டீசல் ஒரு லீற்றருக்கு 10 ரூபாவாலும், மண்ணெண்ணெய் விலை லீற்றருக்கு 8 ரூபாவாலும் அதிகரித்துள்ளது. (ஓ 15)

# இன்று காற்றுடன் மழை பெய்யலாம்

கொழும்பு, ஒக்.30

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்று கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. மழை பெய்யும் போது தற்காலிகமாக கடும் காற்று வீசக் கூடும், வடக்கு, கிழக்கு, தென் கிழக்கு, தென் பகுதிகளில், கடல் பகுதிகளில் அடிக்கடி மழை பெய்யும். கடற் பகுதியில் வட கிழக்குத் திசையில் மணிக்கு சுமார் 30-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். ஏனைய கடற்பிரதேசங்

பக் 31

# இலங்கைத் தமிழருக்குச் சொந்தமான நாடு

## சுதர்சன நாச்சியப்பன் உதயனுக்குக் கருத்து

கொழும்பு, ஒக். 30

இலங்கை தமிழர்களுக்குச் சொந்தமான நாடு என்று கருத்துத் தெரிவித்தார் இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன்.

உலகளாவிய நடவடிக்கைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் மாநாட்டுக்காக இலங்கை வந்துள்ள சுதர்சன நாச்சியப்பன் கொழும்பில் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்த போது இதனைக் கூறினார்.

"இலங்கை முழுவதும் தமிழர்களுக்குச் சொந்தமானது என்ற சிந்தனையுள்ளவன் நான். அந்த நாட்டில் சிங்களவர்கள், இஸ்லாமியர்கள் மற்ற மதத்தைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள் என்பதுதான் எனது பார்வை. இலங்கை என்பது தமிழகத்தின் இதயம் என்று நான் நினைக்கிறேன். அப்படியான ஒரு புத்தகத்தையும் எழுதிக் கொண்டிருக்கிறேன். அது மிக விரைவில் வெளிவரப் போகிறது. எனவே இதில் எனக்கு மாற்றுக் கருத்து எதுவும் கிடையாது" என்றார் நாச்சியப்பன்.

இலங்கைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை அழைத்துச் சென்னையில் நடத்திய மாநாட்டின் மூலம் பல விடயங்களை ஒத்த குரலில் இந்திய அரசிடம்

பக் 31

# இன நல்லிணக்கம் ஏற்படுத்த பொதுநலவாய விளையாட்டு

## ஆஸ்திரேலியாவில் வைப்புக் கோட்டார் ஜனாதிபதி

பேர்த், ஒக்.30

இலங்கையில் போருக்குப் பின்னான காலத்தில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த, அம்பாந்தோட்டையில் பொது நலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை 2018இல் நடத்துவது முக்கியமானது

பக் 31

# பான் கீ-மூன் - கூட்டமைப்பு சந்திப்பு நடைபெறும் சாத்தியம் ஏதுமில்லை

## நியூயோர்க்கில் இருந்து சவேந்திர சில்வா பேட்டி

கொழும்பு, ஒக். 30

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ-மூனைச் சந்திப்பதற்கான எந்த வாய்ப்புக்களுமில்லை. ஐக்கிய நாடுகள் சபை வரை அவர்கள் செல்லக்கூடும். ஆனால் ஐ.நா. செயலரைச் சந்திக்கமாட்டார்கள். எங்களுக்குத் தெரியாமல் அவர்களின் சந்திப்பு இடம்பெற அறவே வாய்ப்பு இல்லை"

இவ்வாறு நேற்றுத் திட்டவட்டமாகக் கூறினார் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா.

பக் 31

# போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## கொமன்வெல்த் மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர்

பேர்த், ஒக்.30

போர்க்குற்றங்கள் தொடர்பாகப் பொருத்தமான விசாரணைகள் நடத்த இலங்கைக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெறும் கொமன்வெல்த் மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்றைய அமர்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

கொமன்வெல்த் உலகில் மிகப் பெரியதொரு அமைப்பு. உலகின் மூன்றில் ஒரு பங்கு சனத்தொகையையும், 6 கண்டங்களின் 54 நாடுகளையும் கொண்ட மிகப் பெரிய வலையமைப்பு.

இந்த வலையமைப்புக்குப் பலமான பெறுமானம் இருக்க வேண்டும்.

மதிப்பாய்ந்தவர்களின் குழுவின் அறிக்கை இந்தப் பெறுமானத்தை குறிப்பாக உரிமைகள், சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய

பக் 31

# வவுனியா ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நேற்று காரசாரமான வாக்குவாதம்

## அமைச்சர் றிஷாத் - கூட்டமைப்பின் எம்.பிக்கள் இடையே

வவுனியா, ஒக்.30

வவுனியா, பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் றிஷாத் பதியுதீனுக்கும் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதம் நடந்துள்ளது.

நேற்றுச் சனிக்கிழமை வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டமைப்பின் சார்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோதராதலிங்கம், சிவசக்திஆனந்தன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

கூட்டம் ஆரம்பமானதும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூட்டத்துக்கு வவுனியா நகர சபைத் தலைவர்

பக் 30

திருச்சி மற்றும் சென்னை பயணச் சீட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள..

Call 0777380557 0773629519

AiRMARK Travels & Tours IATA

புத்தம் புதிய டிசைன்களைக் கொண்ட டைல் வகைகளுக்கு




நவீன் செரமிக்
Naveen Ceramic

#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 0033 / 021 222 0044

#5. ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 4777 / 021 222 4888

Metro Engineering (Pvt) Ltd

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com



அனைத்து மாவட்டங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய காலநிலை நிலவும் சாத்தியம்

# நாவாந்துறை மக்கள் மீதான தாக்குதல் விசாரணை டிசெம்பருக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். நாவாந்துறையில் கிறீஸ் மனித சர்ச்சையைத் தொடர்ந்து இராணுவத்தினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட 61 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான வழக்கு விசாரணயை உயர் நீதிமன்றம் டிசம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

பிரதம நீதியரசர் ஷிராணி ஏ. பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என். ஜி. அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் இம்மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அடுத்தவிசாரணை டிசம்பர் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர்களில் ஒருவரான இருதயநாதன் வீனஸ் ரெஜி, தனது மனுவில் பிரதிவாதிகளாக பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய, பாதுகாப்புப் படைகளின் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, பொலிஸ் மா அதிபர் என். இலங்கக்கோன், இராணுவத்தின் 51 ஆவது படையணித் தளபதி வெல்கம, 512 ஆவது பயைணியின் தளபதி அஜித் பள்ளவெல, பிரதி பொலிமா அதிபர் நீல் தலுவத்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், நெவில் பத்மதேவா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். சி.ஏ. பண்டார, யாழ். பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் நதீகா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார்.

தனது அடிப்படை உரிமைகள் மட்டுமல்லாது மொழி உரிமையும் மீறப்பட்டுள்ளது என்று ரெஜி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் சாதாரண பிரஜைகளைக் காயப்படுத்திய, கொலை செய்த, பொது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்திய பொதுவாக கிறீஸ் மனிதர்கள் என அறியப்பட்ட இனந்தெரியாத நபர்களின் அச்சுறுத்தலை எதிர்கொண்ட பல சம்பவங்கள் இடம்பெற்றமை குறித்து பரந்தளவு கரிசனைகள் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## மனித நேயத்துக்கான மக்கள் ஒன்றியம் யாழ். மாவட்டத்தில் புதிய அமைப்பு

### நேற்று உருவாக்கப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் மூலம் யாழ். மாவட்டத்தில் புதியதொரு ஒன்றியம் நேற்று உருவாக்கப்பட்டுள்ளது. யாழ். மனித நேயத்துக்கான மக்கள் அமைப்புகளின் ஒன்றியம் என்னும் பெயரில் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்:

தமிழ் பேசும் மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் பிரதிநிதிகளை இணைத்துக் கொண்டு எமது அமைப்பு செயற்படவுள்ளது.

இதன் இணைப்பாளராக தமிழரசுக் கட்சியின் சீ.வீ.கே. சிவஞானமும், செயலாளராக பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். தவபாலசிங்கமும், செயற்குழு உறுப்பினர்களாக சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சபா வாசுதேவக்குருக்கள் மௌலவி எம்.ஏ.எல் பைசர் (மதனி), அருட்தந்தை ரவிச்சந்திரன் கொட்டோடை மீனவர் சங்கத் தலைவர் காண்டீபன், பத்திரிகையாளர் பொன்ராசா, சனசமூக நிலையங்களின் செயலாளர் பொன். கனகரத்தினம், மக்கள் சக்தி அமைப்பின் உப தலைவர் அரியகுட்டி இந்திரராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஒ-15)

## இந்திய உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கு 10 ஆயிரம் சைக்கிள்கள்

இந்திய உதவித் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கு பத்தாயிரம் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக மாவட்ட ரீதியாக சைக்கிள்கள் ஒதுக்கீட செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து ஐநூறு சைக்கிள்களும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 2 ஆயிரம் சைக்கிள்களும் யாழ். மாவட்டத்துக்கு ஆயிரத்து ஐநூறு சைக்கிள்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்துக்கு 2 ஆயிரம் சைக்கிள்களும் வவுனியா மாவட்டத்துக்கு 2 ஆயிரம் சைக்கிள்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக இது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாக தகவல்கள் பெறப்பட்டு இவை வழங்கப் படவுள்ளன என்று கூறப்பட்டது.

பெண்களைத் தலைமைத் துவமாகக் கொண்ட குடும்பங் கள், மாற்று வலுவுள்ளவர்களைக் கொண்ட குடும்பங்கள் பாடசாலை செல்லும் அதிக பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் மற்றும் தொழில் முயற்சிக்கு சைக்கிள்கள் தேவையான வறிய குடும்பங்களுக்கு இவை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# அரசு வார்த்தை அளவில் தீர்வை வரையறுக்காது தமிழருக்கு நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும்

## வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் ரணில்

கொழும்பு, ஒக். 30

அரசு வார்த்தை அளவில் இனப்பிரச்சினைத் தீர்வை வரையறுக்காமல் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேபோல், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அதிகாரப்பகிர்வுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இணக்கம் தெரிவிக்க வேண்டியதன் அவசியத்தையும் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு திட்டத்தையும் முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு வழங்குமென்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நடவடிக்கைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அமர்வில் பங்கேற்கும் முகமாக கொழும்புக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்துள்ளது.

உலகிலுள்ள அனைத்து நாடாளுமன்றங்களுக்கும் இதனை விட அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே தனதும் தனது கட்சியினதும் எண்ணமென ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு நாடாளுமன்றத்தினூடாகத் தீர்வைப் பெறவேண்டிய அவசியம் தமக்குள்ளது எனவும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அரசும் மீண்டும் பேச்சுகளை ஆரம்பித்ததையிட்டு தாம் மகிழ்ச்சியடைகிறார் எனவும், இந்த வருட இறுதிக்குள்ளாவது அதற்கான உறுதியான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசு தமது வார்த்தை அளவில் இதனை வரையறுக்காமல் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையில் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வினை வழங்குவதை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் ரணில் தெரிவித்துள்ளார்.

# நிகழ்வுகள்

**பொதுக்கூட்டம்**

யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கப் புணரமைப்புச் செயற்றிட்டம் தொடர்பான பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வர்த்தக வங்கிக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல வர்த்தக வங்கி ஊழியர்கள், தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

**செயலமர்வு**

வடமராட்சி வலய ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

**விழிப்புணர்வு நிகழ்வு**

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு ''நீரிழிவை வெற்றி கொள்வோம்'' எனும் தொனிப் பொருளாலான விழிப்புணர்வு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை கர்லை 7 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கழகங்களின் சர்வதேச ஆளுநர் பிரியந்த பெர்ணான்டோ கலந்து கொள்வார். நிகழ்வில் இலவச மருத்துவப் பரிசோதனைகளும் இடம்பெறும். (ம-122)

**நிர்வாக சபை தெரிவு**

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (ம-250)

**பரிசளிப்பு விழா**

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி க.சரவணபவன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-26)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.30

கிளிநொச்சி கனகபுரம் றோயல் கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் விருந்தினராக கிளிநொச்சிக் கல்வி வலய ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜவும், சிறப்பு விருந்தினராக கரைச்சி கோட்டக்கல்வி அதிகாரி ஆ.அமிர்தலிங்கம், வைத்திய கலாநிதி மா.ஜெயராசா ஆகியோரும் கௌரவ விருந்தினராக கியூடெக்-கரித்தாஸ் கிளிநொச்சிப் பணிப்பாளர் அருட்தந்தை யாவிஸ் அடிகளார், பே.திருச்செல்வன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிக்வாக மாணவர்களின் கலைநிகழ்வும் இடம்பெறும். (த-23)

# வலுவிழந்தோர் உற்பத்தி செய்யும் பொருள்களை சந்தைப்படுத்த சமுதாயத்தின் ஒத்துழைப்பு அவசியம்

## வைத்திய கலாநிதி சிவராஜா வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், ஒக். 30

வலுவிழந்தோர் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கு சமுதாயம் சார்ந்தவர்களின் ஒத்துழைப்புக் கட்டாயம் தேவை.

இவற்றை ஊக்குவிக்கும் போது மாற்று வலுவுடையோர்களின் திறன்கள் மேலும் விருத்தியடையும். மாற்றுவலுவுடையோர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும் நோக்கில் உருவாக்கப்பட்ட வலுவிழந்தோர் சங்கத்தின் பணிகளுடன் பொதுமக்களும் ஒன்றிணைந்து சேவை வழங்க முன்வரவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வைத்திய கலாநிதி ந.சிவராஜா.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று சனிக்கிழமை ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள சங்கக் கட்டத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் கலந்து கொண்டு மாற்றுவலுவுடையோர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி, விற்பனை நிலையம் என்பவற்றைத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மாற்றுவலுவுடையோர்கள் பங்குபற்றிய விநோத உடைப் போட்டி, சிறப்பு நாடகம், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக சங்கத்தின் 21 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு மலர் வெளியீடும், பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றன.

இதேவேளை -

### இரு தினங்களுக்கு கண்காட்சி

யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி தொடர்ந்து 2 நாள்கள் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வலுவிழந்தோர்கள் ஒன்றிணைந்து உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக் கொண்டு கண்காட்சிக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களை தயார் செய்து கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக ஆடைகள், கடித உறைகள், அழகுசாதனப் பொருள்கள், வாழ்த்து மடல்கள் போன்றன இதில் வைக்கப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமையும், நாளை திங்கட்கிழமையும் இந்தக் கண்காட்சி இடம்பெறும்.

அத்துடன் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உற்பத்திப் பொருள்களை பொது மக்கள் கொள்வனவு செய்யமுடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-313)

# கலகங்களை அடக்க விரைவில் மிளகுத் துப்பாக்கி அறிமுகம்

கலகங்களை அடக்க உயிராபத்தை ஏற்படுத்தும் ரவைகளைக் கொண்டுள்ள துப்பாக்கிப் பாவனைக்குப் பதிலாக மிளகைக் கொண்டு தயாரிக்கப்படும் மிளகு வாயுவை வெளியேற்றும் ரவைக் குண்டுகளைக் கொண்டுள்ள மிளகுத் துப்பாக்கிப் (peper gun) பயன்பாட்டைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

பெருமளவு மேற்குலக நாடுகளில் கலகங்களை அடக்குவதற்கு ஏற்கனவே இந்த துப்பாக்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சுத்திகரிக்கப்பட்ட மிளகினால் உற்பத்தி செய்யப்படும் வாயுவை உள்ளடக்கி இந்த ரக ரவைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த வாயு ஒருவரது முகத்தில் படுவதால் சுமார் ஒரு மணித்தியாலம் வரையிலும் அதிகளவில் கண்ணீர் வெளியேறுவதன் காரணமாக கலகங்களை அடக்குவது இலகுவாகிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பயன்பாட்டில் உள்ள கண்ணீர்ப் புகைக் குண்டுகளை விட செயற்றிறன் மிக்க மிளகுத் துப்பாக்கியைப் பயன்படுத்துவதால் கலகங்களை அடக்கும் போது உயிரிழப்புக்கள் ஏற்படமாட்டா.

அண்மையில் இந்த மிளகுத்துப்பாக்கி கொழும்பில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-22)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் 5 நாள்கள் ஆய்வுகூடச் சேவை

தென்மராட்சி, ஒக். 30

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய சாலையில் ஐந்து நாள்கள் ஆய்வு கூடம் இயங்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

தற்போது வாரத்தில் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வைத்தயசாலைக்கு வரும் நடமாடும் ஆய்வுகூட வாகனத்தில் பணிபுரியும் ஆய்வுகூட உத்தியோகத்தர் இங்கு பணியாற்றி வருகிறார். புதன் மற்றும் வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் நோயாளர்கள் ஆய்வுகூட தேவைக்கு தனியார் ஆய்வுகூடத்தில் அதிகரித்த கட்டணம் செலுத்தி பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக நோயாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆய்வுகூட உத்தியோகத்தரை வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் சாவகச்சேரி வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் கடமையாற்றுமாறு பணித்துள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளர்கள் வாரத்தில் ஐந்து நாள்கள் ஆய்வுகூட சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்படுகின்றது. (ஒ-207)

விரைவான பிரித்தானிய பட்டப்படிப்பு




CTH
CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

Hotel Management
Tourism Management

O/L → Foundation (4 Months) → A/L → Diploma (9 Months) → Advanced Diploma (9 Months) → BSc (Hons) Degree (12 Months)

Postgraduate Diploma in Hospitality & Tourism Management
Qualification leads to MSc or MBA, Recognition in the Industry & Migration Opportunity

தொ. எண்: Prashanth - 0773 211 266

UCB Roches Heriot Watt ECU University of Sunderland Hotel School Sydney Middlesex University TVU London

Thames College
153 1/1, High Level Road, Nugegoda
011 5737307 / 011 2825895
info@thamescollege.lk
www.thamescollege.lk

# மாணவருக்கு பாதணிகள்

தென்மராட்சி, ஒக். 30

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 100 வறிய மாணவர்களுக்கு பிரான்ஸில் வசிக்கும் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட பாதணிகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நுணாவில் அறவழி நிலையத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வ.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரான்ஸிலிருந்து வருகை தந்துள்ள க.முத்துக்குமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பாதணிகளை வழங்கவுள்ளார்.

மேற்படி பாதணிகள் பெறுவதற்குத் தெரிவான மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறவழி நிலையச் செயலாளர் எம்.கே.ஜீவகதாஸ் அறிவித்துள்ளார். (ம-207)

NALRAVI
SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்

NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

Head Office
527 2nd Floor
Galle Road Colombo 6
Tel 0112 363656 Fax 2360004

Jaffna Branch
62/20 3rd Floor
Stanley Road Jaffna
Tel 021 221 9 221

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE ... NALBON INSTITUTE OF ENGLISH STUDIES ...)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 13 | | 29 |
| 03 | | 09 |
| 1938 | | 2011 |



அமரர்

## மயில்வாகனம் பாக்கியலட்சுமி

கடந்த 29.09.2011 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு உதவிகள் புரிந்தோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அழைப்புக் கிடைக்கப் பெறாதோர் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

27/5, புதுவீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானாம்பாள் இரத்தினம்



நாரந்தனை வடக்கு, தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும் பெரியதம்பிரான் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பாள் இரத்தினம் நேற்று (29.10.2011), சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-முத்தாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், லோகநாதன் (லண்டன்), ரகுநாதன் (பிரான்ஸ்), கமலநாதன் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி (பிரான்ஸ்), கமலகுமாரி, மாலா (பிரான்ஸ்), கலைச்செல்வன் (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் (ஆசிரியர்-யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரி), அருட்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், ராணி (லண்டன்), சந்திரகலா (பிரான்ஸ்), சந்தானலட்சுமி (பிரான்ஸ்), தியாகராசா (பிரான்ஸ்), பரராஜசிங்கம், நாதன் (பிரான்ஸ்), பிறின்சி (பிரான்ஸ்), செந்தமிழ்ச்செல்வி, வசந்தமாலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராசாம்பாள், அமரசிங்கம், தியாகராசா, இன்பக்கிளி ஆகியோரின் சகோதரியும், நிராஜ், பிரதீப், நிஷா, சுஜா, நிஷாந், காயத்திரி, சந்தோஷ், மோகனியா, கோகிலன், யசோகிலா, சகானா, ஸ்ரெபி, ஸ்ரீவ், கஜிந், அபிநயன், ஜனனன், நிதன், நிது, நிலான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரியானா, மயூரி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியதம்பிரான் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.ரவிச்சந்திரன்
(மகன்).

## திருமதி குகநேசன் மாலினி

சுன்னாகம், முத்துக்கிருஷ்ணர் வீதியைச் சேர்ந்த திருமதி குகநேசன் மாலினி நேற்று (29.10.2011), சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசிங்கம்-இரத்தினாம்பிகை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்-புனிதவதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குகநேசனின் அன்பு மனைவியும், கணநாதனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.10.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் வளவு,
சுன்னாகம்.

தகவல்:
வாசுகி சிவகுமாரன்
(சகோதரி).

# 'காஸ்' மணம் வீச வாகனத்திலிருந்து குதித்த இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக்.30

வாகனத்தில் 'காஸ்' சிலிண்டர்களை ஏற்றிச்சென்ற சமயம் அதில் 'காஸ்' மணம் வீச அது வெடிக்கப் போகின்றது என நினைத்து வாகனத்திலிருந்து கீழே குதித்தார் இளைஞர். படுகாயமடைந்து அவர் சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். கடந்த சில நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்த அந்த இளைஞர் கடந்த வியாழக்கிழமை மரணமானார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி (மயிலங்காவில்?), இரணைமாதாப் பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராஜா ஜெனி (வயது-22) என்ற இளைஞரே மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அவரைக் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். கிளிநொச்சி நீதிவானின் உத்தரவுக்கமைய போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சடலம் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-4)

**New Electronic Scales**
**புதிய மின்னியல் தராசு**

05Kg-1900/=, 30Kg-8500/=, 100Kg- 18,000/=, 300Kg-19,500/=, With Licence, Kg 30-17,000/=
One Year Guaranteed ஒருவருட உத்தரவாதம்.
0723233652

**ஆள்கள் தேவை**

சிட்டை எழுதுநர், விற்பனையாளர், காசாளர்.
ஞாயிறு மு.ப. 10 மணிக்கு நேரில் (இருபாலாரும்) வரவும்.

**பேப்பர் ஹவுஸ்,**
**300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**கூலர் வாடகைக்கு உண்டு**

2000 KG ஏற்றக்கூடிய கூலர் வாகனம் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 021 4923254**

**அறைகள் வாடகைக்கு உண்டு**

பிறவுண் வீதி, 1ஆம் ஒழுங்கை, கந்தர் மடத்தில் ஆண் மாணவர்கள், அலுவலகர்கள் (Rep's) சகல வசதிகளுடன் கூடிய அறைகள் உண்டு.

**தொடர்பு: 0779578244**

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

45 நாள்கள் நிரம்பிய Doberman நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0774669669**

**வீடு விற்பனைக்கு**

695/25, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த வீடு உடனடி விற்பனைக்கு உண்டு.

**விலை:** ரூபா 65,00,000 தரகர் தேவையில்லை, பரப்பு ஒன்று, சுற்றுமதிலுடன் சகல வசதிகளும் உண்டு.

**தொடர்பு: 0775084611**

**விற்பனைக்கு**

ஒரு வயது நிரம்பிய ஜேமன் செப்பேட் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான காலிக் குயின் குட்டிகளும், பொக்கட்ஸ் பெனியர் குட்டிகளும், 6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 3 மாதம் பூர்த்தியான லான் பொமேரியன் ஆண் குட்டியும், வான்கோழி, மணித்தாரா, வெள்ளடியான், 4 மாதச் சினையுடைய யமுனாபாரி ஆடும் விற்பனைக்குண்டு.
**தொடர்பு- வி.மதுரன்,**
இல.209, பலாலி றோட், கோண்டாவில், ராஜா [illegible] முன்பாக.

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம், அத்தியடி அம்பலவாணர் வீதியில் 2 பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0779239334**

**அறையும் காணியும் விற்பனைக்கு**

யாழ். நகர், வண்ணார்பண்ணை சிவன்கோயிலுக்கு அண்மையில் K.K.S. வீதியில் அறையும், கிணற்றுப் பங்குடன் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 6751649**

# கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரியின் ஆசிரியர் இ. ரவிச்சந்திரன் அவர்களின் அன்புத் தாய்*

## திருமதி இரத்தினம் ஞானாம்பாள்

*அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# மரண அறிவித்தல்கள்

## சீனியப்பா சிவலிங்கம்



உடுவில் கிழக்கு, சோமராந் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும், கந்த உடையார் வளவு, நாகதம்பிரான் கோயில், ஞானவைரவர் கோயில் தர்மகர்த்தாவும், முன்னாள் பூசகருமாகிய சீனியப்பா சிவலிங்கம் நேற்று (29.10.2011) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியப்பா- முத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், நாகலிங்கத்தின் அன்புச் சகோதரரும், நா. சோதிலிங்கம், நா.சந்தியலிங்கம் (அப்பன்), ஆனந்தலிங்கம், நாளினி ஆகியோரின் சிறிய தந்தையும், மகேஸ்வரா, கலாவதி, கலாநாயகி, சசிகலா ஆகியோரின் மாமனும், திவிசா (லண்டன்), துஷானன் (லண்டன்), கயனுகா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமராந்தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
சி. நாகலிங்கம் (குஞ்சியப்பன்)
சகோதரர்.

## தம்பையா கணேசமூர்த்தி

(சுருவில்-கணேஷ் பத்தர்)



சுருவிலைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கணேசமூர்த்தி (சுருவில்-கணேஷ் பத்தர்) கடந்த (28.10.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் அன்னலட்சமி தம்பதியரின் அன்பு மருமகனும், டெய்சிராணியின் (கிளி) அன்புக் கணவரும், பிரகலாதன் (லதன்), சுபாசினி, கமலினி (றுச்சா) ஆகியோரின் தகப்பனும், கஜேந்திரன் (மலேசியா), சசிகரன் ஆகியோரின் மாமனும், அபிஷன், யனிஸ்றியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/A, சீனியர் லேன், கலட்டி,
வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னப்பா இராசரெத்தினம்

(சின்னத்துரை - மண்டை தீவு-8)



மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா இராசரெத்தினம் நேற்று (29.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும், வேல்விழி, மலர்விழி (பிரதேச செயலகம், வேலணை), பரதன், அருள்விழி (பிரான்ஸ்), பரணிகரன் (பிரதேச செயலகம், பூநகரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகுலராஜன், சுதாகர் (ப.நோ.கூட்டுறவுச் சங்கம், காரைநகர்), சிந்துஜா, மனோரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், தரன்யா, லாவண்ஜா (பிரான்ஸ்), கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகி அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உளநலம் இழந்தோர் நிலை உயர...

போருக்குப் பிந்திய காலத்தில், கடந்த சுமார் இரண்டரை வருட காலமாக வடக்கு, கிழக்கு வாழ் மக்களை வாட்டி வரும் பாதிப்புகளில், குடும்ப மற்றும் சமூகத் தாக்கங்களில், உளநலம் குன்றியோர் நிலையும் ஒன்றாகும். மனித நேயத்தையும் மனிதாபிமானத்தையும் பின்னுக்குத் தள்ளி போரில் வெற்றி காண்பது ஒன்றை மட்டுமே இலக்காகக் கொண்டு களமாடப்பட்ட வடக்கிலேயே - வன்னியிலேயே - ஒப்பீட்டளவில் உளநலம் பாதிப்புற்றோர் எண்ணிக்கை மிகமிக அதிகம். வன்னி மக்களும் குடாநாட்டு மக்களும் குடும்ப மற்றும் இரத்தத்தின் இரத்த உறவினர்கள் என்பதால் உளநலம் குன்றியோர் எண்ணிக்கை யாழ். மாவட்டத்திலும் உயர்ந்து நிற்கிறது.

மனிதனைப் பிடிக்கும் பொல்லாத வியாதியான உளநலப் பாதிப்பு, அதனால் பாதிக்கப்படுவோரை இரண்டு வழிகளில், வகைகளில், வாழ்க்கையில் குன்றச் செய்கிறது. உளநலம் பாதிக்கப்படும் ஒருவரின் உடல் நலமும் கெட்டுப் போகிறது. உளநலம் குன்றுதலின் வீரியம் அதிகரித்துச் செல்ல, நாளாந்தம் உயர்ந்து செல்ல, உடற்சுகம் பெருமளவு பாதிப்புறுகிறது. பல நோய்கள் பெருகுகின்றன. உளநலக் குறைவுக்கு, அது உண்டாகிய உடனுக்குடன் ஆற்றுப்படுத்தத் தவறின், உரிய மருந்துவகைகளுடான சிகிச்சை பெறாவிடில் உடல் வியாதிகள் பல்கிப் பெருகுவது தவிர்க்க முடியாதவையாகி விடும்.

அதனால் உளநலக் குறைவை, பாதிப்பை உடல் நோயை விட இரண்டு மடங்கு அக்கறையுடனும் கவனிப்புடனும் ஆற்றுப்படுத்துவது அவசியம் என்பர் மருத்துவர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போர் முப்பது வருடங்களாக நீண்டு சென்றதால், ஓயாது தொடர்ந்ததால், மக்கள் எல்லா வழிகளிலும் நொந்து நூலாகிப் போயுள்ளனர். அவர்களுக்குப் பல தரப்பட்ட இழப்புகள், வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத, அளவுக்கு மிஞ்சிய இழப்புகள் உண்டாகின; உண்டாக்கப்பட்டன.

பல்வகைசார் அந்த இழப்புகளால், அவற்றைத் தாங்க முடியாது உளத் தாக்கத்துக்கு ஆளானோரின் முழுமையான புள்ளி விவரம் இன்னமும் வடக்கில் எடுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

போர் பெரிய அளவில் தொடங்குவதற்கு முன்னரே, வடக்கு, கிழக்கில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் என்ற போர்வைக்குள், சந்தேகத்தின்பேரில் என்ற முத்திரையுடன், பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் அரசினால் சிறைகளுக்குள் அடைக்கப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு ஆண்டுகள் பல கடந்தும் பெரும் எண்ணிக்கையான தமிழ் இளையோர் குற்றப்பத்திரிகை எதுவும் தாக்கல் செய்யப்படாமலேயே சிறைவாழ்வு நடத்துகிறார்கள். அதனால் அவர்கள் மட்டுமன்றி அவர்களது பெற்றோர்களும் உறவுகளும் நடைப்பிணங்களாக வாழ்கிறார்கள். தமது பிள்ளைகள் எதிர்காலச் சிற்பிகளாக விளங்கி, சாதனைகள் புரிந்து வாழ்வர் என்று எதிர்பார்த்த பெற்றோர்கள் துவண்டு மனம் நொந்து, உளநலம் பாதிக்கப்பட்டு அதன் விளைவாக உடல் நலமும் கெட்டு நூலாகி நொந்து போயுள்ளனர்.

ஒட்டு மொத்தத்தில், தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் வயது வேறுபாடின்றி உளநலம் பாதிக்கப்பட்ட நோயாளிகளாக மாறியுள்ளனர். இவர்களை ஆற்றுப்படுத்தி, குணமாக்கி மீண்டும் சமூகத்தில் ஏனையோருடன் ஒன்றிணைக்க வேண்டிய தேவை உண்டு. அரசாங்கம் அதில் போதிய அக்கறை காட்டிச் செயற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. வேண்டுமானால் உளநலம் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வில் தனக்கு அக்கறை உண்டு என்று காட்டிக் கொள்வதற்காக அள்ளிக் கொடுக்காவிடினும் கிள்ளித் தெளித்தேன் என்று காட்டுவதற்காக சிறிதாக எதனையும் செய்யக் கூடும்.

அனைத்துலக மட்டத்தில், மக்களின் உளநலம் பேணுதல் முக்கிய பேசுபொருளாக விளங்குவதைக் காணலாம். மிகப் பல நாடுகள் உளநலம் பாதிப்புற்றோரின் நிலையை மேம்பாடடையச் செய்வதில் முனைப்புடன் செயலாற்றி வருகின்றன. அங்கெல்லாம், துறைசார் நிபுணர்கள், அரச சார்பற்ற, அரசு சார்பு நிறுவனங்கள் ஒன்றிணைந்து சமூக நலனுடன் செயற்பட்டு வருவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

உளநலம் பேணுவதில் தமிழர் பிரதேசங்களில், முந்திய காலத்தை விட பலப்பல மடங்கு அக்கறை கொள்ள வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் இப்போது அச்சேவையில் இங்கு ஈடுபட்டுள்ளது. அதே போன்று மற்றும் உலகளாவிய நிறுவனங்களை இனங்கண்டு, எங்கள் மக்களை உளநலப் பாதிப்பிலிருந்து மீட்க அர்ப்பணிப்புடன் செயற்படுத்துவதற்கு விசேட அமைப்புகள் தோற்றுவிக்கப்பட வேண்டும். இது விடயத்தில் இங்குள்ள வைத்தியர் பெருமக்களும், சமூக நலன் விரும்பிகளும் மக்கள் மேம்பாட்டை முன்வைத்துச் செயற்படுவது காலத்தின் மிகப் பிரதான தேவையாகும். மக்கள், எதிர்காலச் சந்ததியினர் நலன் நாடிச் செயற்பட முனைந்தால் இது இயலாத, முடியாத காரியமல்லவே.

# யாழ். மாவட்டத்தில் காணிப் பதிவு சில மாதங்களுக்கு பிற்போடப்படலாம்

## ஆயினும் அரசு அதை நடைமுறைப்படுத்தியே தீரும்

சண்டிலிப்பாய், ஒக்.30

யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ள காணிப்பதிவு சிலருடைய எதிர்ப்பினால் சில மாதங்களுக்குப் பிற்போடப்படலாம். ஆனால் அரசு இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியே தீரும். எனவே மக்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இத் திட்டத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கிக் காணிப் பதிவை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வடமாகாணக் காணி உதவி ஆணையாளர் கே.மகேந்திரன் வலி.தென் மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற காணிப்பதிவு சம்பந்தமான கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கிராம உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காணி உதவி ஆணையாளர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

நாங்கள் அரசின் கீழ் வேலை செய்யும் அதிகாரிகள். அரசு வகுக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது எமது கடமையாகும். 1998 ஆம் ஆண்டு காணிப் பதிவுச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் இத்திட்டம் தென்னிலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்துக்கு மட்டும் இது அமுல்படுத்தப்படவில்லை. உங்களின் நன்மைக்காகவே காணிப்பதிவு இடம்பெறுகின்றது. இதன்மூலம் மக்கள் மத்தியில் நிலவிவரும் உறுதிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இரு வருடங்களுக்குள் காணி சம்பந்தமான ஆவணங்கள் சகல விவரங்களுடனும் சுருக்கமான முறையில் கிடைத்துவிடும் காணிகளுக்கு இலக்கங்களுமிட்டு எல்லைகளும் போடப்படும். கோயில் காணி, வயல் காணி, பொது நிறுவனங்களின் காணி உட்பட சகல காணிகளும் பதிவு செய்யப்படும்-என்றார்.

(த-115)

# மீனவருக்கு ஓய்வூதியம் வழங்கும் புதியதொரு திட்டம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 30

கடல்தொழில்ாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டம் ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் கடல்தொழிலாளி ஒருவர் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபா வரை ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

இலங்கை வங்கி, கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துடன் இணைந்து இந்த ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கடல்தொழில் அமைச்சின் கட்டடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே கடல்தொழில் அமைச்சர் ராஜித சேனாரட்னவினால் இந்தப் புதிய திட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தப் புதிய திட்டத்துக்கு முன்னர் நடைமுறையில் இருந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலம் கடல்தொழிலாளி ஒருவர் 4 ஆயிரம் ரூபா வரை ஓய்வூதியமாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 5 ஆயிரத்து 591 பேர் மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளனர். அவர்களில் 184 பேர் 4 ஆயிரம் ரூபா வரையிலான ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் குடும்பங்கள் கடல்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(த-14)

# வடக்கில் புதிதாக எவருமே குடியமர்த்தப்பட மாட்டார்கள்

## அமைச்சர் பஸில் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30

வடக்கில் இடம்பெறும் மீள் குடியமர்வு நடவடிக்கையின்போது புதிதாக எந்தவொரு குடும்பங்களும் குடியமர்த்தப்படமாட்டாதெனவும், குடியிருப்புக்களில் முன்னர் குடியிருந்தவர்கள் மட்டுமே குடிமர்த்தப்படுவார்களெனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கிலுள்ள காணிகளில் வேறு இனத்தவர்கள் குடியமர்த்தப்படுவதாக எழும் குற்றச்சாட்டுக்களைத் தான் நிராகரிப்பதாகவும், அது, இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சியொன்றே எனவும் அமைச்சர் பஸில் மேலும் தெரிவித்தார்.

இதுவரை வடக்கில் இடம்பெயர்வுக்குஉள்ளான ஒரு இலட்சத்து 78 ஆயிரம் பேர் மீளக் குடிமர்த்தப்பட்டுள்ளதாகவும், அவர்களுள் ஆயிரத்து 36 சிங்களக் குடும்பங்கள் மாத்திரமே குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களும் முன்னர் வவுனியாவில் குடியிருந்தவர்களேயெனவும், அவர்கள் முன்னர் வசித்துள்ள பிரதேசங்களிலேயே மீண்டும் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஊடகவியலாளரொருவர் எழுப்பிய வினாவுக்குப் பதிலளித்தபோதே அமைச் சர் இதனைத் தெரிவித்தார்.

(த-22)

# புண்ணிய பூமிகளை அறிவிக்கும் அதிகாரம் பௌத்த சாசன அமைச்சிடம்

கொழும்பு,ஒக்.30

புனிதமாகப் போற்றப்படும் இடங்களை புண்ணிய பூமி என வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிப்பதற்கு நிர்மாணங்கள், பொறியில் சேவைகள், வீடுகள் மற்றும் பொது வசதிகள் அமைச்சிடம் ஏற்கனவே இருந்த அதிகாரங்கள் பௌத்த சாசன மற்றும் மதங்கள் செயற்பாட்டு அமைச்சுக்கு வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான சட்ட மூலம் அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாகப் பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.


சட்ட மூலங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட மூலம், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசன மதச் செயற்பாடுகள் அமைச்சுக்கு உரிமையாக இருந்த புண்ணிய பூமித்துறை, இதற்கு முன்னர் நகர அபிவிருத்தி மற்றும் புண்ணிய பூமி அமைச் சுக்குச் சொந்தமாகியிருந்ததுடன் பின்னர் அமைச்சுப் பொறுப்புக்களின் மீளாய்வின் போது அது நிர்மாணங்கள், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. (த-22)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் குகனேந்திரன்

### (குமார் அண்ணை)



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் குகனேந்திரன் நேற்று (29.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- தங்கப்பிள்ளை தம்பதியரின் செல்வப் புதல்வனும் சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான முத்தையா- பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் பராசக்தி(லண்டன்), புனிதவதி (லண்டன்), காலஞ்சென்ற றஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பராசக்தி (சங்குவேலி), சுபத்திராதேவி (கனடா), சாந்தினி(கனடா), சிறீதரன்(கொலன்ட்), காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், ஆனந்தராசா, சந்திரநாயகம் ஆகியோரின் மைத்துனரும் பிறேமிகா (கனடா) சித்திக்கா(கனடா), நிலானி(கனடா) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் துஷ்யந்தி(மிதுலா-லண்டன்), தர்சினி (லண்டன்), கஜேந்தி ரன்(லண்டன்), சுதர்சன்(லண்டன்), தர்சிகா(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அபிஷேன், கஜாங்கி, ஷாய்மீரன், பிருந்தன், குருசரன், ஷகேன், ஷஸ்ருதி, அனிர்வன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புவனேஸ்வரி(மனைவி),
பராசக்தி (00441702434548).
புனிதவதி (00441702554522).

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

# லயன்ஸ் கழகங்களின் இலங்கைக்கான ஆளுநர் யாழ்ப்பாணம் வருகை

வடமராட்சி,ஒக்.30

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இலங்கைக்கான ஆளுநர் லயன் பிரியந்த பெர்ணாண்டோ இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

நல்லூர் லயன்ஸ் கழகம் சேர் பொன் இராதநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் நிகழ்வு ஒன்றில் ஆயிரம் தென்னங்கன்றுகளையும் மற்றும் பயன்தரும் மரங்களான எலுமிச்சை, மா, பலா, கொய்யா போன்ற மரங்களையும் பொது மக்களுக்கு ஆளுநர் வழங்குவார்.

வழங்கப்படும் தென்னங்கன்றுகளில் 500 தென்னங் கன்றுகள் காரைநகரைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து கைதடியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு போட்டோக்கொப்பி இயந்திரத்தையும் அவர் வழங்குவார். (ம-236)

# வயோதிபருக்கு உடுபுடைவைகள்

வடமராட்சி,ஒக்.30

தொண்டமானாறு செல்வச்சந்தி கோயிலில் தங்கியுள்ள 70 வயோதிபர்களுக்கு தீபாவளி தினத்தன்று உடுபுடைவைகள், படுக்கை விரிப்புக்கள் என்பன சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

உறவினரால் கைவிடப்பட்டு சந்நிதி முருகனே தஞ்சம் என கோயில் சூழலில் வாழ்ந்து வரும் இந்த வயோதிபர்களுக்குத் தினம் மூன்று வேளைகளிலும் சந்நிதியான் ஆச்சிரமம் உணவுகளை வழங்கி வருகின்றது.

ஆண்கள்,பெண்களைக் கொண்ட இந்த வயோதிபர்களுக்கு வருடந்தோறும் உடுபுடைவைகளை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த வருடமும் தீபாவளி தினத்தன்று சந்நிதியான் ஆச்சிரம பொறுப்பாளர் அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் உடுபுடைவைகள், படுக்கை விரிப்புக்களை வழங்கினார்.

(ம-236)


# ஐடியல் அக்கடமி

## சீரணிச் சந்தி – சண்டிலிப்பாய்

## பரிசளிப்பு விழா -2011

இடம் : ஐடியல் வளாகம் (சீரணி நாகம்பாள் மணி மண்டபம்)
காலம் : இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 1.30 மணிக்கு

பிரதம விருந்தினர் : பேராசிரியர் கலாநிதி தீ. வேல்நம்பி
(பீடாதிபதி – முகாமைத்துவ, வணிக கற்கைகள் பீடம் – யாழ்.பல்கலைக்கழகம்)
திருமதி சஜீதா வேல்நம்பி (B.A)

சிறப்பு விருந்தினர்கள் : கலாநிதி ஆறுதிருமுருகன்
(அதிபர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
அருட்திரு J.A. ஜேசுதாஸ் அடிகளார்
(அதிபர் யா/ இளவாலை ஹென்றியரசர் கல்லூரி)
திரு. k. விமலன்
(அதிபர் – யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)
திரு. மா. முரளி
(நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம்– சண்டிலிப்பாய்)

மாணவர்கள் பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சண்டிலிப்பாய்

தலைவர்
V.N.பத்மநாதன்
இயக்குநர் - ஐடியல் அக்கடமி
மற்றும் ஐடியல் சமூகத்தினர்


# கண்ணீர் அஞ்சலி




தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்
கு.பிறேமகாந்தன் அவர்களின் அன்புத்
தந்தையார் வைரமுத்து
குலவீரசிங்கம்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்,
சரசாலை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்



## தம்பு சண்முகசுந்தரம்

### (செட்டி)

(ஓய்வுபெற்ற அரச மரக்கூட்டுத்தாபன ஊழியர்)

இலந்தைக்குளம் வீதி, அரியாலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சண்முகசுந்தரம் நேற்று 29.10.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் குணநாயகியின் அன்புக் கணவரும் ஹரிதாஸ் (அபிவிருத்தி உதவியாளர், யாழ். மாவட்ட செயலகம்), பிறேமதாஸ்(உரிமையாளர் - ஆறுமுகம் ஸ்ரோர்ஸ்) கஜந்தினி, குணதாஸ் (பிரதம தபாலகம், யாழ்ப் பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்துஜா(யாழ். மாவட்ட செயலகம்), அசோக்குமார் (ஆசிரியர்-யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ் சென்றவர் களான பாலசுந்தரம் (மயில்வாகனம்) சோம சுந்தரம் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தேவசுந்தரம் மற்றும் கனகம்மா, மனோகரன், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தையல்நாயகி, சின்னத்துரை, சதாசிவம் , குணவதி, இராஜேஸ்வரி மற்றும் இரத்தினசிங்கம், சண்முகநாதன், வரதலட்சுமி, பத்மேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் இல. 51/1, இலந்தைக் குளம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அரியாலை (9902) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜேஸ்வரி கந்தசாமி (பாப்பா ரீச்சர்)

### (ஓய்வுபெற்ற ஆசிரியை )



கரணவாய் வடக்கு, கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமகாவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி கந்தசாமி 28.10.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் இளையதம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகப்பர்-சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் நாகப்பா கந்தசாமி (ஓய்வு பெற்ற நீதிமன்றப் பதிவாளர்- பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும் Dr.க.அரவிந்தன் (பிரதி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் - மன்னார்), Dr. க.உமாசங்கர் (சத்திர சிகிச்சை நிபுணர் - மன்னார் வைத்தியசாலை) க.இந்திரராஜ் (திட்ட முகாமையாளர், சேவாலங்கா மன்றம்), Dr.செ.பிரிந்திகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி அ.யசோதா, Dr. உ.நிருபா (குழந்தை நல வைத்திய அதிகாரி - மன்னார் வைத்தியசாலை), திருமதி இ.தேவகி (ஆசிரியை -வவுனியா), Dr. க.செந்தூரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் அ.கார்த்தி கேயன், அ.கீர்த்தனன், அ.வேணுகன், உ. அபிஷா, உ.அபினாஷ், இ.சங்கரி, செ.ஆர்த்திகன், செ.அட்சரா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற யோ.சிவபாக்கியம் மற்றும் Dr. இ.பரமசிவம் (ஓய்வுபெற்ற வைத்தியர்), திருமதி சோ.புவனேஸ்வரி, தி.இ.செல்வராசா (கனடா), Dr. இ.கனகரத்தினம், காலஞ்சென்ற இ.இராதாகிருஷ்ணன், இ.பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற யோகலிங்கம், திருமதி க.தவனேஸ்வரி, திருமதி ப.செல்வதி, ப.சோமாஸ்கந்தராசா, திருமதி இ.கமலாவதி, திருமதி செ.நாகேஸ்வரி (கனடா), திருமதி பா.நளாயினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.10.2011 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
கணவர் நா. கந்தசாமி,
பிள்ளைகள்.

கரணவாய் வடக்கு,
கொற்றாவத்தை
(7995)


# யாழ்- கொழும்பு பிரயாணிகளுக்கு புதியதோர் உதயம்

## "லங்கா ராணி" (டேனுஷா ரவல்ஸ்)

முழு சொகுசு பஸ் சேவை (A/C)



பாதுகாப்பு
சொகுசு
விரைவு

| | புறப்படும் நேரம் | சென்றடையும் நேரம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 8.00 PM | 5.30 AM |
| கொழும்பு | 8.00 PM | 5.30 AM |

செல்லும் வழிகள் : மானிப்பாய் ⇆ யாழ்ப்பாணம் ⇆ கொழும்பு ⇆ தெகிவளை

தொடர்புகளுக்கு : (ஆசனப் பதிவுகளுக்கு) M.சுதாகரன் Hotline - 0779584335
பிரதீபன் - 0774939343

# தடைசெய்த மீன்பிடி உபகரணங்களின் பாவனையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

## பலாலியில் திங்களன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.30

தடை செய்யப்பட்ட கடல் தொழில் உபகரணங்களைப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை யாழ்.மாவட்டக் கடல் தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பலாலி இராணுவப் படைத் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ரவீந்திர விஜே குணரட்ணவுக்கும் யாழ். மாவட்ட கடல்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரனுக்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

அரசினால் தடைசெய்யப் பட்டவை என அறிவிக்கப்பட்டுள்ள கடல்தொழில் உபகரங்களைக் கொண்டு தொழில் செய்யும் மீனவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இதில் ஆராயப்படவுள்ளது. அத்துடன் கடல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கான 'பாஸ்' நடைமுறை தொடர்பாகவும் இங்கு ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

கடல் வளங்களுக்கு அழிவை உண்டுபண்ணும் கடல்தொழில் முறைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்குக் கடற்படையின் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கடற்படையினர் கோரவுள்ளதாக யாழ்.மாவட்டக் கடல்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மீனவர் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (த-14)

# சிறு குற்றங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.30

கரவெட்டி பகுதியில் அரச சாராயத்தை அனுமதியின்றி விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் குறித்த நபருக்கு 3 மாத சிறைத் தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தார்.

இதேவேளை - வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியில் அரச சாரயத்தை உடமையில் வைத்திருந்து அதனை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிறிதொரு சந்தேகநபர் செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் வைத்துப் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் குறித்த நபருக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (த-319)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.30

பிரதான வீதியில் மதுபோதையில் நின்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு சந்தேக நபர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கரவெட்டி திரு இருதயக்கல்லூரிக்கு அண்மையில் பிரதான வீதியில் மது போதையில் நின்றார் என்ற குற்றச் சாட்டின் பேரில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதேவேளை துன்னாலைப் பகுதியில் பிரதான வீதியில் மதுபோதையில் நின்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிறிதொரு சந்தேகநபரும் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இருவரும் நெல்லியடிப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் திருமதி நந்தசேகரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் இருவருக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை, நெல்லியடி பிரதான வீதியில் போக்குவரத்துக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் கனரக வாகனத்தை நிறுத்தி வைத்திருந்த திருகோணமலையைச் சேர்ந்த நபர் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் சந்தேக நபருக்கு 1000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (த-319)

# நெடுந்தீவில் பயிர்ச்செய்கை மும்முரம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

தற்போது பெய்துவரும் மழையைத் தொடர்ந்து நெடுந் தீவில் விவசாய நடவடிக்கைகளைத் துரிதமாக்குவதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். அங்குநெல் உற்பத்தியில் விவசாயிகள் நாட்டம் கொண்டுள்ளதுடன் வெங்காயம் மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கைகளிலும் அவர்கள் அக்கறை கொண்டுள்ளனர். மேற்கு சாராப்பிட்டி, கோட்டைக்காடு பகுதிகளில் விவசாய உற்பத்தி நடவடிக்கைகள் கூடுதலாக இடம் பெறுகின்றன. (த-7)

# பாஷையூரில் மருத்துவ முகாம் 300 பேருக்கு மூக்குக் கண்ணாடி



யாழ்ப்பாணம்,ஒக்.30

கொழும்பு 'வோட்டர்ஸ் மீற்' லயன்ஸ் கழகமும் நல்லூர் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் நேற்று சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் பங்கு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் சுமார் 300 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமை லயன்ஸ் கழகத்தின் 306 'பி' 1 மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ மங்கல விளக்கினை ஏற்றிவைத்து ஆரம்பித்து வைத்தார்.

மருத்துவ முகாமில் நீரிழிவு நோய் பரிசோதனை, கண் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் 300 பேருக்குக் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் ஆங்கில, சுதேச வைத்தியர்களினால் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. 65 மாணவ, மாணவிகளுக்குப் பாடசாலை உபகரங்கள் மற்றும் போசாக்கு பால்மா என்பன வழங்கப்பட்டன.

வறிய மாணவர் ஒருவருக்கு சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டது. மேற்படி நிகழ்வில் உதவி மாவட்ட ஆளுநர் லயன். றஞ்சித் பெர்னாண்டோ, 'வோட்டர் மீற்' லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன்.ஏ.ஏ.சந்திரராசா, நல்லூர் லயன் கழகத்தின் தலைவரும் தொழில் அதிபருமான ஈ.எஸ்.பி.நாகரத்தினம், தேசமான்ய இம்மானுவேல் ஆனால்ட் மற்றும் வோட்டர்ஸ் மீற் லயன்ஸ் கழகம், நல்லூர் லயன்ஸ் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (த-23)

# வைத்திய முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.30

இலவச நடமாடும் வைத்திய முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தகவல் வழிகாட்டல் மத்திய நிலையம், யாழ்.முஸ்லிம் நிபுணர்கள் அமைப்பு, சமூக கல்வி மேம்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டிலேயே இந்த நடமாடும் சேவை இடம்பெறுகிறது. புத்தளம் ஜமா அதே இஸ்லாமி குவைத் வைத்திய சாலை அனுசரணையுடன் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்று நாள்கள் இடம்பெறும் இந்த வைத்தியமுகாம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. (த-14)

# வடபகுதிக் கடலில் பிடிக்கப்படும் அனைத்து மீன்களும் கொள்வனவு

## மீன்பிடி அமைச்சர் உறுதியளிப்பு

வடபகுதிக் கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்படும் மீனினங்கள் சிறிது, பெரிது என்ற வேறுபாடின்றி அனைத்தும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உறுதியளித்துள்ளார் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்தின.

கடந்த 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், யாழ். மாவட்டக் கடற்தொழிலாளர் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

மீன் கொள்வனவு பற்றிக் கடற்தொழில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

வடபகுதி மீனவர்கள் தமது மீன் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற நிலைமை இல்லை என அறிய முடிகிறது. எனவே மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் அனைத்தும் சிறியது, பெரியது என்ற வேறுபாடின்றி கொள்வனவு செய்யப்படும். மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஊடாக இவற்றைக் கொள்வனவு செய்து சந்தை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். இதற்கென சவுதி அரேபிய அரசுடன் கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்யப்படவுள்ளது. அதன் மூலம் 3 ஆயிரம் கோடி ரூபா கிடைக்கவுள்ளது. - என்றார். (த-14)

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் சிறுவர் உரிமைகள் செயலமர்வு

நாவற்குழி,ஒக்.30

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் 'சிறுவர் பாதுகாப்பு உரிமைகள்' என்னும் தொனிப்பொருளிலான செயலமர்வு கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமாகிய ஏ.ஈ. ஆனந்தராஜா, ஏனைய அதிகாரிகள், யுனிசெவ் அதிகாரி ஷர்மிலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வுக்கான நிதி அனுசரணையை யுனிசெவ் அமைப்பு வழங்கியது. யாழ். மாவட்டத்தில் முதலாவது நிகழ் வாக இது கோப்பாய் பிரதேச செயலகத்திலேயே அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சமூக சேவை அதிகாரி, சிறுவர் நன்னடத்தை அதிகாரி, கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஏனைய வெளிக்கள அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் பங்கெடுத்தனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.கனகராஜா சிறுவர் பாதுகாப்பு உரிமைகள் பற்றிய கருத்துக்களைக் கூறினார்.(த-121)

# முற்றவெளியில் தேங்கியுள்ள வெள்ளம்



யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ்.முற்றவெளியில் கொட்டப்பட்ட கிரவல் கற்கள் மற்றும் கழிவு மணல் என்பன உரிய வகையில் சீர்செய்யப்படாததனால் அந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டை புனர்நிர்மாணப் பணிகளின்போது அங்கிருந்து அகற்றப்பட்ட கிரவல் கற்களும் கழிவு மண்ணும் முற்றவெளியில் கொட்டப்பட்டன.

இவை குவியலாகப் போடப்பட்டுள்ளன. அவற்றைப் பரவி சீர்செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவ்வாறு இடிபாடுகள் குவியல் குவியலாக உள்ளதால் அவற்றின் இடையே தற்போது மழை வெள்ளம் தேங்கியுள்ளது.

தொடர்ந்து பலத்த மழை பெய்யும் பட்சத்தில் இந்தப் பகுதியில் பெருவெள்ளம் ஏற்பட்டு கே.கே.எஸ்.வீதியை ஊடறுத்து வெள்ளம் பாயக்கூடிய நிலையும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அந்தப் பகுதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படக்கூடிய அபாயமும் ஏற்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-26)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2012

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2012 ஆம் திகதி முதல் 31.12.2012 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக) | - ரூ 500.00 |
| கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி | - 01.11.2011 தொடக்கம் 18.11.2011 முற்பகல் 10.00 மணிவரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் | - 18.11.2011, நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - 18.11.2011, பிற்பகல் 2.30 மணிக்கு |

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2011 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக் காரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகளிக்கலாம்.

குறிப்பு

1. கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் பிணை ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருட்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்த வித கட்டணங்களும் அறவிடக் கூடாது.
3. சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக் கூடாது.
4. சபையின் கடைகளில் இறைச்சி, கருவாடு, கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.
5. சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதத்தினையும் இணைத்தல் வேண்டும்.
6. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% VAT, 2%NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
7. கேள்வி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மீதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரையான 8 மாத காலப் பகுதிக்குள் 2012 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.
8. கேள்விப் பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கே உரியது.
10. கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்த வித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

### இறைச்சிக்கடை குத்தகை

| தொ. இல | இறைச்சிக்கடை | கடை இல | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 2% தே.க.அ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 109, 263. 00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல. 02 | 36, 383. 00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 03 | 97, 020. 00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 04 | 132, 825. 00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 05 | 60, 638. 00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 06 | 60, 638. 00 |
| 7 | பண்ணை கோழிக்கடை | இல. 07 | 48, 510. 00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல. 08 | 48, 510. 00 |
| 9 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 109, 148. 00 |
| 10 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல. 02 | 161, 700. 00 |
| 11 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 103, 373. 00 |
| 12 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல. 02 | 102, 795. 00 |
| 13 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 60, 638. 00 |
| 14 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 133, 403. 00 |
| 15 | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 31, 185. 00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 103, 373. 00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 02 | 127, 050. 00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 03 | 78, 829. 00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 04 | 80, 850. 00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 05 | 64, 103. 00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 06 | 80, 850. 00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 07 | 80, 850. 00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 08 | 80, 850. 00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல. 09 | 80, 850. 00 |
| 25 | நாவாந்துறை கோழிக்கடை | இல. 10 | 11, 550. 00 |
| 26 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல. 11 | 11, 550. 00 |
| 27 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல. 12 | 11, 550. 00 |
| 28 | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 225, 225. 00 |
| 29 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 24, 255. 00 |
| 30 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 103, 950. 00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 01 | 157, 658. 00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 02 | 157, 658. 00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 03 | 157, 658. 00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 04 | 157, 658. 00 |
| 35 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 05 | 157, 658. 00 |
| 36 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 06 | 157, 658. 00 |
| 37 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல. 07 | 157, 658. 00 |
| 38 | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | இல. 01 | 28, 875. 00 |

### பொதுச் சந்தைக் குத்தகை

| தொ. இல | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 2% தே.க.அ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1, 732, 500. 00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 4, 042, 500. 00 |
| 3 | குருநகர் மீன் சந்தை | 10,000.00 | 1, 212, 750. 00 |
| 4 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 727, 650. 00 |
| 5 | நாவாந்துறை மீன் சந்தை | 10,000.00 | 548, 625. 00 |
| 6 | அரியாலை மீன் சந்தை | 1,000.00 | 115, 763. 00 |
| 7 | பாசையூர் மீன் சந்தை | 2,000.00 | 115, 500. 00 |
| 8 | கச்சேரி நல்லூர் வீதி - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 121, 275. 00 |
| 9 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 60, 638. 00 |
| 10 | பஸ் நிலைய கடைகளுக்கு கிழக்கு பக்கமாகவுள்ள து.ச.வண்டி பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 151, 200. 00 |
| 11 | புங்கன் குளம் சந்தை | 2,000.00 | 11, 550. 00 |

மேலதிக விவரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*மாநகர சபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*28.10.2011*

*திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா*
*மாநகர முதல்வர்,*
*மாநகரசபை, யாழ்ப்பாணம்.*


## அழகுக்கலை கருத்தரங்கு

முதல் முறையாக யாழ். மண்ணில்
NEW ANU BEAUTY CLINIC
இல் அழகுக்கலை தொடர்பான அறிமுகக் கருத்தரங்கு. வீட்டில் தயாரிக்கக் கூடிய Pack, Make-Up, புருவம் வடிவமைத்தல், வெண்மை தரும் Facial, Oil Massage, பேன், பொடுகு மூலிகை சிகிச்சை...

**06.11.2011 காலை 9.00 மணி**
**வீரசிங்கம் மண்டபம்**

யாழ்ப்பாணம். கட்டணம் 1500/= தமிழ்மொழி மூல பயிற்சியும், சான்றிதழ்கள் வழங்கப்படும். இறுதிக் கருத்தரங்கு (13/11/2011)

அழகுக்கலை நிபுணர்
**Dr. (Mrs) Anu Kumaresan,**
Ad.Dip in B.T.H.D Cosmetalogist (India),
City & G ills (UK) Arts & Crafts (India),
Member of S.L.A.H.A.B.
மேலதிக தொடர்பு
NO- 0772099546, 0772099456, 0777408443

## சேவை

**பணத்தினை கொடுத்து ஏமாறாதீர்கள்!**

நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளுக்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்வோம்!

**Student Visa / Visit Visa / Tourist Visa / Business Visa / Dependent Visa / Settlement Visa / Visa refused** ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம். அனுபவமுள்ள ஆலோசகர்கள், சட்டத்தரணிகளால் ஆலோசனைகள் வழங்கப்படும். மாணவர்கள் இயலுமானவரை பெற்றோர்களுடன் வாருங்கள்.

**Worldwide Educational Consultants**
Worldwide Educational Consultants
# 527, Galle Road, Colombo - 06. Sri Lanka
Mobile : 0771 953 366 / 0778 526 178
Tel : 0112 361 951

## The Home Builders

உங்கள் விருப்பத்திற் கேற்ப வாஸ்த்து முறைப்படி
தரமான மனைகளை அமைப்பதற்கு
இப்போதே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்



நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பினால்:
பிரியங்கனி : 0779253305
மார்க் : 0789595380

**இலவச சலுகைகள்:**

- உங்கள் கனவு இல்லங்களின் மாதிரி வடிவங்களை இலவசமாக பெற்றுத்தருவோம்
- உங்கள் கனவு இல்லத்திற்கான அனைத்து துறைகளின் அனுமதிகளை பெற்றுத்தருவோம்

உங்கள் இடத்திற்கே வந்து அவசியமான விபரங்களைப் பெற்றுத்தருவோம்


## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்
திரு.கு.பிறேமகாந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**வைரமுத்து குலவீரசிங்கம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**யா / மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.**

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் கல்லூரியின்
ஏற்றமிகு விஞ்ஞான ஆசிரியர்
**ஜெயரூபாவின்**
அன்பு மிக்க தந்தை
*அமரர்*
**பொன்னு சிவலிங்கம்**
*(திருநகர் - கிளிநொச்சி)*
அவர்களின் அமரத்துவ செய்தி கேட்டு சிந்துகின்றோம் கண்ணீர் செலுத்துகின்றோம் அஞ்சலி

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி,
கிளிநொச்சி.
(9854)

*அதிபர், ஆசிரியர்கள்,*
*கல்விசாரா ஊழியர்கள்.*

# தர்ம ஆஸ்பத்திரி என்று அழைக்கப்பட்ட காரணம்?

அசை போட ஒரு விடயம்

அசை போடுவதென்பது மாமிச உண்ணிகள் அல்லாத சில வகை மிருகங்களுக்கே தனிப்பட்ட வகையில் அமைந்துள்ள உணர்வு அல்லது செயற்பாடு ஆகும். உண்ட உணவை மீண்டும் வாய்க்கு கொண்டு வந்து ஆர அமர பற்களால் அரைத்து மென்று விழுங்குவதை இது குறிக்கும். அதற்கேற்றாற்போல் அவைகளுக்கு வயிறும் குடல்களும் அமைந்துள்ளன.

இந்த மாதிரி அமைப்பு மனிதனுக்கு கிடையாது. அப்படி அமைந்திருப்பின் எவ்வளவோ பயனுள்ள மனித வேலை நேரங்கள் பாழடிக்கப்பட்டிருந்திருக்கும். சம்பள உயர்வு, மேலதிக நேர சம்பளம் மற்றும் விடுப்பு காலம் அதிகரிப்பு என்ற போராட்டங்களுடன் அசை போடுவதற்கான நேரம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற வகையிலும் மனிதர்கள் போராட்டங்களில் இறங்கியிருப்பார்கள். மனிதனின் இந்தப் போராட்டக் குணத்தை அறிந்து தான் உணவை அசை போடாமல் நேரடியாகவே ஜீரணித்துக் கொள்வதற்கான வசதியை ஆண்டவன் அவர்களுக்குப் படைத்தளித்து விட்டான் போலிருக்கிறது.

உணவை அசைபோடாது போனாலும் மனிதன் தன் சிந்தனையை, எண்ணங்களை, எதிர்காலத் திட்டங்களையெல்லாம் அசை போடக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கின்றான்.

படித்தவைகளை, கேட்டவைகளை, கண்ணால் பார்த்தவைகளையெல்லாம் ஓய்வாய் இருக்கும்போது அசை போடுபவர்கள் பெரும் சிந்தனையாளர்களாக, விஞ்ஞானிகளாக, தத்துவ மேதைகளாக ஏன் கண்டுபிடிப்பாளர்களாகவும் உயர்ந்திருக்கிறார்கள்.

**நாஸ்திகனும் ஆஸ்திகனும்**

விசாலமான ஆலமரமொன்றின் கீழே நிழலுக்காக இரண்டு பேர் படுத்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் நாஸ்திகன்-தெய்வ நம்பிக்கையற்றவன். மற்றவன் ஆஸ்திகன் தெய்வ நம்பிக்கை உள்ளவன். காற்றொன்று வீசிஓய்ந்தது. ஆலம்பழம் ஒன்று மரத்திலிருந்து கழன்று மல்லாக்காகப் படுத்திருந்த நாஸ்திகனின் கண்ணருகில் வீழ்ந்து தெறித்தது. அதனைக் கையில் எடுத்துக்கொண்ட நாஸ்திகன் நண்பனைப் பார்த்து, ''உன் கடவுளின் சமாந்தரமற்ற படைப்பினைப் பார்த்தாயா!, இவ்வளவு பெரிய ஆல மரத்தைப் படைத்து அதற்கு இந்தச் சின்னஞ் சிறிய காயைக் கொடுத்திருக்கிறான். அதேநேரம் மிகமெல்லிய பலவீனமான பூசணிக் கொடியைப் படைத்து பென்னம் பெரிய காயைக் கொடுத்திருக்கிறான்'' என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

ஆஸ்திகனான நண்பன் அவனைப் பார்த்து ''நீ இன்னொன்றையும் நினைத்துப் பார்க்க வேண்டும். பென்னம் பெரிய காயாக ஆலம்பழம் இருந்திருந்தால் அது உன் கண்ணடியில் வீழ்ந்த பொழுது உன் தலை சுக்கு நூறாகச் சிதறியிருக்கும். கண்ணும் முகமும் சப்பையாகிப் போயிருக்கும். எல்லாம் காரணகாரியத்தோடு தான் படைக்கப்பட்டிருக்கின்றன'' என்று கூறிமுடித்தான். நாஸ்திக நண்பன் மௌனமாகிவிட்டான்.

இவ்வாறு தான் அசை போடுவதிலும் மனிதனுக்கும்மிருகத்துக்கும்வேறுபாட்டை, வித்தியாசத்தை இயற்கை படைத்திருக்கிறது.

**தர்மாஸ்பத்திரி**

அரசு தரப்பிலான இலவச மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் காலத்தில் அவைகளை மக்கள் 'தர்மாஸ்பத்திரி' என்றே அழைத்துள்ளார்கள். வெள்ளைக்காரன் நம்மக்களுக்கும் நாட்டுக்கும் செய்துவிட்டுப்போன பல தீமைகளில் நன்மையான காரியங்களும் பல உண்டு. அவைகளில் ஒன்றுதான் ஆஸ்பத்திரி முறையாகும்.

இந்த 'ஆஸ்பத்திரி' என்ற சொல் எப்படி வந்தது என்று பார்த்தால் விசித்திரமாக இருக்கும். 'ஹொஸ்பிட்டல்' என்ற ஆங்கிலச் சொல்தான் பின்னர் ஆஸ்பத்திரி என்று மருவி இருக்க வேண்டும். பிளாஸ்டர் என்ற சொல் பிளாஸ்திரி என்று ஆனது போல் ஹொஸ்பிட்டலும் ஆஸ்பிட்டலாகி பின்னர் ஆஸ்பத்திரி என்று ஆகியிருக்க முடியும். சிங்களத்தில் 'இஸ்பிரித்தாலய' என்கிறார்கள். ஸ்பிரிட் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு இது உருவாகியிருக்கலாம். பொதுவில் புதிய இடங்களுக்கும் பொருள்களுக்கும் பொதுமக்கள் தாங்களாகவே பெயர்களைச் சூட்டி விடுவார்கள். அதற்கு சில காரணங்களும் இருப்பதுண்டு.

சிகிச்சையும் மருந்தும் இலவசமாகவே வழங்கப்பட்டதால் மக்கள் அதனைத் தர்மாஸ்பத்திரி என்று பரிவோடு அழைத்தார்கள். கல்வியும் அரசியல் விழிப்பும் மக்கள் மத்தியில் விரிவடைந்த பிறகு தான் இந்த ஆஸ்பத்திரிகள் தங்கள் வரிப்பணத்தில் இருந்துதான் நடத்தப்படுகின்றன என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படலாயிற்று.

மக்கள் வரிப் பணத்திலிருந்து தான் அரசுகள் இது போன்ற பல்வேறு பொதுக் காரியங்களுக்கு பணம் செலவிடுகின்றன. நம் மாணவர்கள் கற்றுத் தேர்ந்து டாக்டர்களாகவும் தொழில் நுட்பவியலாளர்களாகவும் பொறியியலாளர்களாகவும் வருகிறார்கள். ஆனால் இவர்களில் அனேகர் பிற்காலத்தில் மக்களை மறந்து விடுகிறார்கள். நாட்டை மறந்து விடுகிறார்கள். பணம் பணம் என்று அலைகிறார்கள். சுரண்டுகிறார்கள், வெளிநாடுகளுக்குப் பறந்து உழைக்க விரும்புகிறார்கள்.

இருந்தும் தாம் பிறந்த மண்ணையும் தமக்குதவிய மக்களையும் மறக்காமல் இங்கேயே போதிய வருமானம் கிடைக்காவிட்டாலும் அரும்பணிபுரியும் டாக்டர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் பொறியியலாளர்கள் இருக்கவே செய்கிறார்கள். அப்படியானவர்கள் இலைமறைகாய்களாக இருந்தும் பணி புரிகிறார்கள். இவர்கள் இன, மத, மொழி, சாதி உயர்வு தாழ்வு வேறுபாடுகளைக் கவனிப்பதில்லை.

அப்படியானவர்களை மக்கள் மறப்பதில்லை. மகான்களாகப் போற்றுவார்கள்.

மலையகத்தில் இரத்தினபுரி பகுதியில் பெரிய தோட்டமொன்று இருக்கிறது. அதன் நிர்வாகியாக இருந்த தோட்ட துரையை அப்பகுதி மக்கள் 'கடவுள் துரை' என்று அழைப்பார்கள். பொதுவில் தோட்ட துரைமார் ஈவிரக்கமற்ற சர்வாதிகாரிகள் போலவே நடந்து கொள்வதுண்டு. மாறாக இந்த வெள்ளைக்காரர் தொழிலாளர்களுடன் அதிகம் பேசிக் கொள்ளாது போனாலும் தொழிலாளர்களிடம் கருணையோடு நடந்து கொள்வாராம். அதனால் அவரை கடவுள் துரையென்றே அழைத்தார்கள்.

வட்டுக்கோட்டை கிராம ஆஸ்பத்திரி ஒன்றில் மருந்தாளர் ஒருவர் இருந்தார். நோயாளிகளுக்கு அவர் மருந்து வழங்கும் முறையே அலாதி ''இதுகாலமை ஒன்று இரவுக்கு ஒன்று, இதுகாலையில் மட்டும் இரண்டு. இது தேவைப்பட்டால் மட்டும் எடுக்கலாம்'' என்ற முறையில் இருக்கும் அவர் குளிசை வழங்கும் முறை.

அவர் கையால் மருந்து வாங்கி கொள்வதை சில கிராம மக்கள் பெரிதும் விரும்பினார்கள். மருந்தை எழுதிக் கொடுக்கும் டாக்டரை விட மருந்தைக் கலந்து கொடுக்கும் மருந்தாளரின் கைராசியைப் பற்றி அவர்கள் அதிகம் அக்கறை கொண்டார்கள்.

இன்னொரு பகுதியில் மருத்துவமனையில் மருந்தாளராய் இருந்த ஒருவர் பிற்காலத்தில் அப்பகுதியில் மருத்துவராகவே மாறியிருந்தார். காரணம் மக்கள் அவரது கைராசியில் வைத்திருந்த நம்பிக்கையாகும்.

''மகராசன் கையால் எதை வாங்கி உண்டாலும் நோய் குணமாகிவிடும்'' என்று கூறியவர்கள் உண்டு.

**கண்ணுக்கு லேசர் சிகிச்சை**

கண் அறுவை செய்துகொண்ட நண்பர் ஒருவர் இப்பொழுதெல்லாம் நவீன முறையில் (லேசர் சிகிச்சை) கண் அறுவை நடைபெறுவதைக் கூறி வியந்தார். சுமார் பத்து நிமிடங்களில் அறுவை முடிவடைந்து விடுகிறது. ஆனால் அறுவைக்கு முன்பும் பின்பும் டாக்டர்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறையும், முயற்சியும் பாராட்டுக்குரியது என்றார் அவர்.

மூன்று நாள்கள் ஆஸ்பத்திரி விடுதியில் இருந்தேன். ஒருநாள் கூட கண் டாக்டர் எவரும் விடுதியில் வந்து நோயாளிகளைப் பார்க்கவில்லை என்று கவலைப்பட்டுக் கொண்டார் இன்னொருவர்.

வேறு நோய்களென்றால் ஸ்டெதஸ் கோப்புடன் கட்டில் தோறும் வந்து நோயாளியை டாக்டரால் பார்க்க முடியும். கண்ணோயைப் பார்க்க கட்டில் கட்டிலாக கருவிகளை டாக்டரால் தூக்கிக் கொண்டு வரமுடியுமா? அதனால் தான் டாக்டர் இருக்கும் அறைக்கு கண் நோயாளர்களை அழைத்துச் செல்கிறார்கள் என்று கூறிச் சிரித்தார் மற்றவர்.

■ ரம்யன்

நாட்டு வைத்தியத்தில் நம் மக்களுக்கு அதிக நம்பிக்கை உண்டு. அது போலவே கடந்த காலத்தில் பேர்போன நாட்டு வைத்தியர்கள் நம் மத்தியில் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் இப்போது மறக்கப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் விசாரித்தால் அவ்வாறான பேர்போன வைத்தியர்களைப் பற்றியும் அவர்களின் வைத்திய முறைகளைப் பற்றியும் மக்கள் கூறுவார்கள்.

இப்பொழுது எதிலுமே மக்கள் வேகமான முடிவுகளை எதிர்பார்ப்பதால், நாட்டுவைத்தியத்தில் அக்கறை குறைந்து விட்டது. மேன் நாட்டு வைத்தியத்தையே நாடிச் செல்கிறார்கள்.

நாட்டு வைத்தியர்களும் ஆயுள் வேதம் மற்றும் சித்த வைத்தியம் படித்தவர்களும் கூட மேற்கத்திய மருந்துகளை வழங்க முற்படுகிறார்கள்.

உள்நாட்டு வைத்தியத்தில் சிறந்த மருந்துகளும் பயன்களும் உண்டு என்று வாதிடும் நம்மவர்கள் அவைகளின் வளர்ச்சியிலும் ஈடுபடுவது அவசியமாகும். ஆட்சியிலிருப்பவர்கள் இதற்கென்று அதிக அக்கறை கொள்ள வேண்டும்.

உள்நாட்டு வைத்திய முறைகளை மக்கள் நாடி செல்லாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அவைகளைத் தீர்த்து வைக்க யார் முயற்சிக்கிறார்கள்? அரசாங்கமும் எது எதற்கோ மில்லியன் கணக்கில் பணத்தைக் கொட்டுகிறது. இந்தத் துறையை மேம்படுத்தவும் ஆராய்ச்சிகளை விஸ்தரிக்கவும் இன்னும் அதிகமாகச் செலவுசெய்யலாம். இத்துறையில் ஈடுபடும் மருத்துவர்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு வருமானம் சிறப்பாக இருக்குமானால் அதில் அக்கறையுடன் ஈடுபடுபவர்களும் அதிகரிப்பார்கள் அல்லவா? ✱

# 97 வயது நிறைவில் சிவாச்சாரிய மணி சிவஸ்ரீ பா.சண்முகரத்தின சர்மா

கொழும்பு ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியாரும் அகில இலங்கை சிவப்பிராமண சங்கத் தலைவருமான சிவஸ்ரீ பா.சண்முகரத்தினம் சர்மா தனது 97 ஆவது வயதை நிறைவு செய்து மேலும் சிவப்பணிகளைச் செய்து வருவது சிவனடியாராகிய நாம் பெற்ற புண்ணியமும் அவருக்குக் கிடைத்துவரும் இறைஆசியுமே ஆகும். குருக்கள் என்றுமே இனிய முகத்துடனும் தூய்மையான உள்ளத்துடனும் சேவையாற்றும் பண்பாளர்.

அப்பர் பெருமான் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று கூறியது போல் விநாயகப் பெருமானின் தொண்டை, முழுமையான ஈடுபாட்டுடன் செய்து வருகிறார். பிராமண சமூகத்தின் மிகவும் ஆதியான அகில இலங்கை சிவப்பிராமண சங்கம், ஸ்ரீ கானசபை ஆகியவற்றின் தலைவராகவும் பல ஆண்டுகளாகச் சேவையாற்றுகின்றார். ஏனைய சங்கங்களின் வளர்ச்சியிலும் அவரது கரிசனை நிறையவே இருந்து வருகின்றது.

சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலர் பெருமான் அவதரித்த யாழ்ப்பணத்து நல்லூர் நன்னகரில் பாலசுப்ரமணியக் குருக்களுக்கும் சாரதா அம்பாளுக்கும் மகனாகப் பிறந்தார்.

இவர் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் கல்விகற்றார். சிதம்பர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதக் கல்வியைக் கற்றுத் தேர்ச்சிபெற்று கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானப் பணியில் ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தில் தேவஸ்தானப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இவரது தந்தையார் இறைவனடி சேர்ந்தார்.



அதன்பின் தாயாருடன் ஸ்ரீ பால செல்வவிநாயகர் ஆலயப் பணிக்கு அழைக்கப்பட்டார். இவர் செல்வ விநாயகருக்குப் பணி செய்து வந்தபோது 1942 ஆம் ஆண்டு ராஜலட்சுமிஅம்மாவைக் கரம்பிடித்தார். குருக்களுக்கு விநாயகப் பெருமானின் திருவருளால் எட்டு ஆண் பிள்ளைகளும் 3 பெண் பிள்ளைகளும் கிடைத்தனர்.

ஸ்ரீ பால செல்விநாயகர் ஆலயத்தில் தற்போது பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.

ஆலயத்துக்கான கோபுர அமைப்பு நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. விநாயகப்பெருமானின் புனர் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவுறவும் தனது மேற்பார்வையின் கீழ் கும்பாபிஷேகப் பணிகள் சிறப்பாக நடைபெறவும் வேண்டும் என்பதும் அவரது வேணவாவாகும். இலங்கையில் பல இடங்களில் குருமார் பயிற்சிகளும் பரீட்சைகளும் நடைபெற்று வருகின்றன. சிவாச்சாரியார் சிரேஷ்ட பிரிவில் தோற்றி ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று முதலாவதாகச் சித்தியடைந்தார்.

முன்னாள் அமைச்சர் தேவநாயகம் அவர்கள் சமாதான நீதிவான் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளார். 2009 ஆம் ஆண்டில் மாண்பு மிகு ஜனாதி பதி அவர்களால் குருக்களுக்கு தேசமான்ய பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**குப்பிளான் அருளானந்தர்**
(கொ/தொண்டர் வித்தியாலயம்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வன் பிரபாகர் மிறோசன்**
(சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.சென்.ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்று 154 புள்ளிகளைப் பெற்றுசித்தியடைந்தநாவலடி அரியாலையைச் சேர்ந்த எமது மிறோசனைப்பாராட்டி மேலும் பல சித்திகளைப் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

நாவலடி, அரியாலை.
அப்பா பிரபாகர், அம்மா ஏரிகா, தங்கைமார் [illegible]

## கட்டடம் வாடகைக்குத் தேவை

தற்பொழுது யாழ்.நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது நிதி நிறுவனத்துக்கு யாழ். நகரின் பேருந்து நிலையத்தில் இருந்து 1 Km தூரத்துக்குள் 600 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கட்டடம் வாடகைக்குத் தேவையாக உள்ளது. கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**SEEDS (GTE) LTD**
No.45, Rawathawatta Road,
Moratuwa
T.P: 0115444666-281, 0718018308
0777299267

## அமெரிக்க வீஸா லொத்தர்

அமெரிக்காவில் குடியேறும் விஸாக்கள் லொத்தர் மூலம் வழங்கப்படவுள்ளன. முடிவுதிகதி 05/11/2011 முன் கிடைக்கும்படி விண்ணப்பப்படிவங்களை சாதாரண அல்லது SPEEDPOST தபாலில் அனுப்பவும். விண்ணப்பிக்க விரும்புவோர் அழைக்கவும்.

**Tel: 0775811106**
BBSNETTING, 3/14, PINWATTA ROAD, DEHIWALA.

## நெல்லிக்கிரஸ், நல்லெண்ணெய் அடைப்பவர்களின் கவனத்துக்கு!



நல்லெண்ணெய், நெல்லிக்கிரஸ் அடைப்பவர்களுக்குத் தேவையான கிளியர் (CLEAR) பிளாஸ்ரிக் போத்தல் (750 ml.) எம்மிடம் விற்பனைக்கு உண்டு.
*தொடர்பு: சிவா நறுமணப்பூங்கா*
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P.: 0212222567**

## விழிநீர் சொரியும் ஈராண்டில்..

தோற்றம்:
13.01.1950



மறைவு:
21.10.2009

**அமரர்**
**செல்லமுத்தர்**
**திருலோகச்சந்திரன்**
**(மணி)**
*(விமலா ஸ்ரூடியோ உரிமையாளர்)* *திதி: சதுர்த்தி*

பிரிவின் துயரை சுமந்து ஆண்டு இரண்டு ஆகிவிட்டது
தந்தையே எங்கள் ஆருயிர் அப்பாவே
விண்ணையே நோக்கி நீங்கள் விரைந்திட்டதால்
விழிகள் நித்தம் கண்ணீரால் நிறைகிறது
கண்ணின் மணிபோல் எம்மை காத்தீர்களப்பா
ஆறாது அழுதாலும் தீராது அப்பா உங்கள் குணங்கள்
தேறாது மனம் என்றும் தேறாது கனவினில் நினைவலைகள்
கூறாது போனது போனதும் உயிர்களின் உடனிருந்து
மாறாது மாற்றாது ஆண்டுகளின் அஞ்சலிகள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றென்றும் உங்கள் நினைவுடன்
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
மனைவி: இ.விமலா
பிள்ளைகள்: [illegible]

## பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

ஸ்பிறே பெயின்ரிங், பிளேற்றிங் (மொப்பிங்), கண்ணாடி வகைகள் பொலிசிங், பைபர் மோல்டிங் என்பன நவீன தொழில் நுட்பமுறை மூலம் செய்து கொடுக்கப்படும்.
**வரனி கபி பிளாஸ்ரிக் வார்ப்புத்தொழிலகம்**
286/2, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
**தொ.பே: 0773512591**

## மணப் பெண் அலங்காரப் பொருள்கள்

மணப் பெண் அலங்காரத்தை மேலும் மெருகூட்டக் கூடிய வகையில் சகல விதமான பொக்கே, சடைநாகம் முதலிய பூவேலைகள், அழகு சாதனப் பொருள்கள் என்பன கனிஸ், கனடா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பிரபல்யம் பெற்றவாறும் தரமான முறையில் தயாரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777206829, 0112448743

## நிர்வாகி தேவை

ஸ்ரீ செண்பக விநாயகர் கோவில் சிங்கப்பூர் Administrator தேவை. வயது 30 - 60 தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இந்து சமய அறிவாற்றல் உடைய கணினிப் பயன்பாடு accounts தெரிந்த பொறுமையான குணம் ஆகிய தகுதிகள் கொண்டவர் A leval சான்றிதழ்களுடன் nara@meenara.com இல் விண்ணப்பிக்கவும்.
**தொ.பே: 6597539583**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974 ஆம் ஆண்டு அனுசம் 2 ஆம் பாதம் மூன்று சுற்று கிரகபாவம் 37 ½ செவ்வாய்க் குற்றமற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அழகிய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: விளம்பர இல. 4191
மே/பா,361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

கண்டுக்குளி விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0776146434

## காணி விற்பனைக்கு

கண்டிக்குழி, விதானையார் வீதியில் கண்டிக்குழி மகளிர் கல்லூரிக்கும்,பரியோவான் கல்லூரிக்கும் (St Johns College)அண்மையில் 3 பரப்பும் 1 ½ குழி விஸ்தீரணமுடைய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:0774951662

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3 ½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. (காணி பிரித்தும் கொடுக்கப்படும்)
தொடர்புக்கு:0776146434

## Cert.Medical Assistant

4-6 Months
வைத்தியர்களிடமே நேரடியாக கற்கும் குறுகியகால பகுதி நேர பாடநெறி. வேலைவாய்ப்புடன் ஆர்வமுள்ள அனைவருக்கும்.

**Knowledge Universe** No 75,Temple Road,Jaffna. www.kugroup.info
Professional Education by Graduate Professionals
K.U.Education - "Practical and Result Oriented." Tel:0776458253

## ரோயல் குளுக்கோஸ்

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P: 0777277670





ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணம்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
[illegible] ரோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேர்ட்டினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக் கொள்ளவும்.

## எங்கள் கடைக்கு ஏற்றது

**SAM4S**
பலதரப்பட்ட மாதிரிகளில் பெறுக் கொள்ளலாம் விலை ரூ. 22,372/= இருந்து
இலக்ரோனிக் கேஸ் ரெஜிஸ்டர்
மிகவும் குறைந்த விலையில் அதிக சிறப்பம்சங்களுடன்
ஒரு வருட உத்தரவாதம்
நாடு முழுவதும் விற்பனைக்கு பிந்திய சேவை



அழையுங்கள்
0773 143444
0770 222999

BUSINESS MACHINES
Co (Pvt) Ltd
#1, Lake Crescent, Colombo - 02.
Tel : 011 2304380 / Fax : 2304381
E-mail : sales @biz-machines.com / Web : www.biz-machines.com
55 வருட அனுபவம் வாய்ந்த முதல் நிறுவனம்

## ESOL Diploma in English

City & Guilds Approved Centre

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



**Our Lecturers**
1. Mr.K.NAGARAJAN, B.A (cey)
M.A (Kelaniya) TKT (Cambridge, UK)
a. 15 வருடங்கள் கிறுத்துவ பல்கலைக்கழக English போதனாசிரியராக இருந்தவர்.
b. 20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகை தரு ENGLISH tutor ஆக இருப்பவர்.
c. Served as a tutor for the promotion of the Quality Improvement of Teachers by Secretary for Education chaired by the State Secretary for Education.
2. Mr.J.Sahayathasan
M.A (English Language) University of Sydney
M.A (English Literature) University of Sydney

**Why City & Guilds English Qualifications?**
Recognized by UK Universities and UK Border Agency
Directly Linked to the Common European Framework
Certificate for Lifetime

A/L முடித்த மாணவர்கள் அதிஉயர்ந்த English அறிவைப் பெற City & Guilds இன் B1, B2 மட்டங்களில் அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தை படிக்க முடியும்.
B2 , C1 , மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரியில் பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds இன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர்.
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

**IELTS** புதிய வகுப்புக்கள் 05.11.2011 இல் ஆரம்பமாகும்
நேரம் - Sat & Sun 8.30 - 11.30

**U.K. வீஸாவுக்கான**
**A1,A2 English Courses**

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே
எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியை பெற்ற எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 07.11.2011 | 07.11.2011 |

**Registration : Rs 500/= Course Fee :100 /= per hour**

**வகுப்புகள் 07.11.2011 ஆரம்பம்**

## CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887

# போரால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு வீட்டுத்திட்டம் வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.30

போரால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவேண்டும் என்று துணுக்காய் வலய அதிபர்கள் நாமல் ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.





மாங்குளம், துணுக்காய் கல்வி வலயத்துக்கு வருகை தந்த அம்மாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் துணுக்காய் வலயக் கல்வி அதிபர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:

* பதில் அதிபர்களை நிரந்தரமாக்குதல்
* போரால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்க வேண்டும்
* 10 வருடமாகப் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல்.
* பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான விடுதிகளை அமைக்க வேண்டும்
* கஷ்ரப் பிரதேசத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் கடன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களை பெற்றுத்தர வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளைக் கேட்டறிந்த நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் வாரங்களில் வலயக் கல்வி அலுவலக ரீதியாக அதிபர்கள், ஆசிரியர்களின் குறைகளைக் கேட்டறிவதோடு மாணவர்களின் கல்வி செயற்பாட்டின் முன்னேற்றத்துக்கும் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

மாங்குளத்தில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையம், மாங்குளம் ஆதார வைத்திய சாலையின் ஆண், பெண், உள நோயாளர் விடுதியை திறந்து வைத்ததோடு, வைத்திய விடுதி, தாதியர் விடுதி ஆகிய வற்றையும் திறந்து வைத்தார். (ம-425-311)

## சேதமடைந்த வீதியால் சிரமமடையும் விவசாயிகள்

கிளிநொச்சி, ஒக்.30

கிளிநொச்சி, பூநகரி தம்பிராய் சந்தியில் இருந்து கறுக்காய்த் தீவு சந்தி வரையான செட்டியகுறிச்சி ஊடாகச் செல்லும் 4 கிலோ மீற்றர் வீதி மிகவும் குன்றும் குழியுமாகவும் சேறும் சகதியுமாகவும் காணப்படுகின்றது.

இதனால் கறுக்காய்த்தீவு செட்டியகுறிச்சி மக்கள் மிகவும் இடையூறுகளுடன் பயணிக்கும் நிலையில் உள்ளனர்.

இந்த மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் இந்த வீதி தொடர்பாக எவரும் கவனம் எடுக்கவில்லை. உரிய அதிகாரிகளிடம் இது தொடர்பாக முறையிட்டும் எந்தவிதமான முடிவும எடுக்கப்படவில்லை.

இந்த வீதி சீரின்மையால் கறுக்காய்தீவு, செட்டியகுறிச்சி, கொல்லகுறிச்சி கமக்கார அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்கு உர வகைகள், விதை நெல், விவசாய உபகரணங்கள், மாட்டு வண்டிகள், உழவு இயந்திரங்களைக் கொண்டு செல்வதிலும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-406)

## மழை நீரைச் சேமித்து குடிதண்ணீராக்கும் மக்கள்

கிளிநொச்சி, ஒக்.30

குடிதண்ணீருக்காக அலைந்து திரியும் பூநகரிப் பிரதேச மக்கள் மழை காலம் ஆரம்பித்துள்ளதால் மழை நீரைச் சேகரித்து சுடுநீராக்கி குடிப்பதற்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

அடிப்படை வசதிகள் அனைத்தும் வழங்கப்படும் என்று கூறி சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட பூநகரிப் பிரதேச மக்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படும் குடிதண்ணீர் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரிப் பிரதேச சபையால் இரு தினங்களுக்கு ஒரு தடவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் சமையல் உட்பட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதியதாக இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் நல்ல தண்ணீர் உள்ள கிணற்றைத் தேடி பல மைல் தூரத்துக்கு அலையும் நிலைமையும் காணப்படுகிறது.

குடிதண்ணீருக்கு அலைந்து திரிந்த மக்களுக்கு மாரிகாலம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது.

அரசால்வழங்கப்பட்ட கூரைத் தகடுகளைப் பயன்படுத்தி குடிசைகளை அமைத்து வாழும் மக்கள் மழை பெய்யும் போது கூரைவழியே வழிந்தோடி வரும் மழை நீரைச் சேகரித்து வடிகட்டி சுடுநீராக்கிப் பாவித்து வருகின்றனர்.

இப்பிரதேச மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்று பல்வேறு தரப்பிலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியா, ஒக்.30

மறைந்த பேராசிரியர் சிவத்தம்பிக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தால் கௌரவம் வழங்கப்படவுள்ளன.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது கலாநிதி கந்தையா சிறிகணேசன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

பேராசிரியர் சிவத்தம்பி எங்களுக்கு கிடைத்த மகத்தான சொத்து. இவர் எழுதிய நூல்கள் இன்று கடல் கடந்து உள்ளது. வெளிநாடுகளிலும் உள்ள பல் கலைகழகங்களில் ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவரைப் பற்றி நாங்கள் நிறையப் பேச வேண்டும். அறிய வேண்டும்.

எனவே இவரைக் கௌவரம் செய்யும் நிகழ்வு ஒன்றை மிகவும் சிறப்பான முறையில் வெகு விரைவில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும்- என்றார். (ம-421)

## வாடியடியில் பஸ்தரிப்பிடம் அமைக்குமாறு கேட்கும் பயணிகள்

பூநகரி, ஒக்.30

பூநகரி வாடியடிச் சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் இன்மையால் பயணிகள் விசனம் அடைந்துள்ளனர்.

மக்களை மீள் குடியமர்த்தி இரண்டுவருடங்கள்கடந்தநிலையிலும் இந்த நிலை காணப்படுகின்றது.

இந்தப் பிரதான சந்தியூடாக மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பூநகரியின் முக்கியமான இடங்களுக்கு பஸ் சேவை நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்தச் சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகள், பாடசாலை மாணவர்கள், அரச அரச சார் பற்ற நிறுவனப் பணியாளர்கள் கொழுத்தும் வெயிலில் காய்ந்தும் கொட்டும் மழையிலும் நனைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்தோடு நோயாளர்கள், முதியவர்கள், பஸ்தரிப்பிடம், ஆசனங்கள் இன்மையால் அவதிப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை கொண்டு செயற்படுவார்களா என்று பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-406)

## விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.30

கிளிநொச்சி,பூநகரி கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் விவசாயிகளும் இம்முறை பெரும்போக நெற் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

மீள்குடியமர்ந்து இரண்டு வருத்திலும் மேற்கொள்ளப்பட்ட பெரும்போகச் செய்கையிலும் மானிய உரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மானிய உரம் விநியோகிக்கப்படுவதால் விவசாயிகள் பெரிதும் நன்மை அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-406)

## புலமைப் பரிசில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவ நிகழ்வு

அக்கராயன், ஒக்.30

முல்லைத்தீவு ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற கதிர்மகன் வசிகரன் (167-புள்ளிகள்) பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை அதிபர் திருமதி மே.விக்னராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்திரனராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கலந்து கொண்டார்.

சித்தியடைந்த மாணவருக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பரிசில்கள் வழங்கியதுடன் யாழ். வர்த்தகர் ஒருவர் சைக்கிள்களையும் கையளித்தார்.

அத்துடன் பரீட்சையில் 100 புள்ளிகளைத் தாண்டிய மாணவரும் மதிப்பளிக்கப்பட்டதுடன் ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழவில் பாராட்டுரைகளை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சுந்தரமூர்த்தி, அக்கராயன் மகாவித்தியாலய முதல்வர் த.கண்ணபிரான், உமைபுரம் பாடசாலை அதிபர் சிவகுமாரி, கிராம அலுவலர் துளசி, துணுக்காய் வலய ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கினர். இந்த நிகழ்வில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-410)

## மாணவர்கள் மன அழுத்தங்களில் இருந்து விடுபட உளநல செயற்பாடுகள் அவர்களுக்கு அவசியம்

கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

அக்கராயன், ஒக்.30

மாணவர்கள் மன அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கு உளநலச் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

இவ்வாறு தெரிவத்தார் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா .

அக்கராயன் மகாவித்தியாலயம், அக்கராயன் ஆரம்பவித்தியாலயம் இணைந்து நடத்திய "உளநன்னிலை மகிழ்வூட்டல்" செயற்பாட்டில் கலந்து கொண்டு உதையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்கள் மன அழுத்தங்களுடன் கற்க முடியாது. மாணவர்களின் மன நிலையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு கல்வியில் ஊக்கம் பெற முடியும்.

மன அழுத்தங்களுடன் இருக்கும் மாணவர்களைத் தொடர்ந்து படி, படி என்பதில் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை. மாணவர்கள் மன அழுத்தங்களில் இருந்து விடுபட உளநலச் செயற்பாடுகள் அவசியமாகிறன எனவும் தெரிவித்தார்.

அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் மாணவர்களுக்கு பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன. (ம-410)

# Metro Travels

## விசேட விமானக் கட்டணங்கள்



| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | Rs.12800 |
| Colombo-Tiruchirapally-Colombo | Rs.13600 |
| Colombo-Doha | Rs.24500 |
| Colombo-London | Rs.42500 |
| Colombo-Toronto | Rs.81000 |
| Colombo-Singapore-Colombo | Rs.30500 |
| Colombo-Frankfurt | Rs.50000 |
| Colombo-Milan | Rs.38000 |
| Colombo-Rome | Rs.55500 |
| Colombo-Paris | Rs.50000 |
| Colombo-Zurich | Rs.40000 |

All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance.
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404, 0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm



## மணமகன் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம் வயது 28, மருத்துவ பட்டதாரி நல்ல தோற்றம், பொது நிறம் சுமாரான உயரமுடைய பெண்ணுக்கு பட்டதாரி மணமகன் தேவை. தகுதியுடையோர் ctmb2011@gmail.com இற்கு சாதகக் குறிப்பு, புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.



மாணவர்களே உங்களுக்கான அரிய இறுதி சந்தர்ப்பம்.



# UK Top-Up Degree

from Buckinghamshire New University
bucks

## B.Sc. (Hons) in Computing

Entry Options
- BCS Diploma
- Edexcel HND
- NCC-IAD
- NIBM Higher Dip
- HNDIT-ATI

Investment : Rs. 460,000

FLY IN FACULTY LECTURERS FROM UK ARRIVE ON THE 11th NOVEMBER

Register before 31st October 2011

Duration 8 months

Conducted @ ESOFT

For More Information Contact
Esoft Computer Studies
17/1, Brown Road Jaffna.
TP: 021-2224142



Bachelor of Information Technology(BIT)
External Degree
OF
University Of Moratuwa

யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



முக்கிய திகதிகள்
விண்ணப்ப இறுதி நாள் : 30-11-2011
பதிவுகளுக்கான இறுதி நாள் : 15-12-2011
தொடக்கம் : ஜனவரி 2012

### HNDIT- ATI

SLIATE-HNDIT Completed students can now join this degreewith exemption of 16 modules (10 in level 1,6 in level 2)

2011 A/Level எழுதிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ESOFT
Esoft Computer Studies
17/1, Brown Road
Jaffna.
TP: 021-2224142 Hotline: 077-3099308


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# கலைப்பீடம்

### புதிய கல்வியாண்டு செயற்பாடுகள் ஆரம்பம் 2010/2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2010/2011 இல் கலை, சட்டம், இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறிகளுக்குத்தெரிவுசெய்யப்பட்டு பதிவை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2010/2011 இற்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு (Orientation Programme) பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும்.

| | |
|---|---|
| கலை, சட்டம் | 08.11.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி (இடம்: கைலாசபதி கலையரங்கம், பல்கலைக்கழக பிரதான வளாகம்) |
| இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் | 09.11.2011 புதன்கிழமை காலை 9மணி (இடம்: இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம்) |

மாணவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கலைப்பீட ஏனைய அனைத்து மாணவர்களுக்குமான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் எதிர்வரும் 31.10.2011 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும்.

28.10.2011 பதிவாளர்


## விற்பனைக்கு

56 அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் மேல்மாடி வீடு மற்றும் கச்சாய் வெளி பிள்ளையார் கோயில் அருகில் 6 ஏக்கர் தென்னங்காணி மற்றும் புலோப்பளை பிரதான வீதிக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0779592051



Dandugama

LKR.400,000/- per perch

Adjoining Negambo Road and near Katunayaka Airport
- Flat land of 19 perches
- Water, Electricity, Telephone facilities
- Clear deeds
- Road with 20 feet width

பணத்தேவைக்காக அவசரமாக விற்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : 0777498527




# அந்தியேட்டி, ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



## ஞானப்பிரகாசம் மகேந்திரன்

(பெயின்ரர் தங்கராசா)

*மலர்வு: 18.04.1951*
*உதிர்வு: 03.10.2011*



கடந்த 03.10.2011 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் வெளிநாடு, உள்நாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் மற்றும் இன்றுவரை எமக்கு பல்வேறு வகைகளில் ஆறுதலும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (31.10.2011) திங்கட்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் 02.11.2011 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப்பெறாதோர் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.*

[illegible] குடும்பத்தினர்


OPPORTUNITIES

TOKYO SUPER
TOKYO SUPER MIX READY MIXED CONCRETE
NIPPON CEMENT

Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following positions based in Northern Province.

## PLANT MANAGER
### READY MIXED CONCRETE PLANT

The ideal candidate for this position should be a graduate possessing a degree in B.Sc. Engineering (Civil), (Mechanical) or equivalent with a minimum of 5 years experience in the construction industry. Being in overall charge you would see to all engineering, production and marketing of the business. Previous exposure in a similar capacity would be an added advantage.

Age below 50 years.

The chosen candidate would be entitled to an attractive salary, medical benefits along with other perquisites and a company maintained vehicle.

## ASSISTANT QUALITY CONTROLLER
### READY MIXED CONCRETE PLANT

The ideal candidate for this position should possess BSc in physical science (chemistry as one subject) or equivalent with a minimum of one year experience in the similar field. Being in overall supervision, you would see to all functions of quality assurance and production of the plant. Previous exposure in a similar capacity would be an added advantage.


Age below 30 years.

The chosen candidate would be entitled to an attractive salary, along with other perquisites.

Applications with names and addresses of 2 non-related referees should be sent by post or e-mail to reach the under mentioned within 7 days.

**Manager - HR & Administration,**
**TOKYO CEMENT CO. (LANKA) PLC.**
No. 469 1/1, Galle Road, Colombo 03.
E-mail: jeyaraj@tokyocement.lk

# தலைமைத்துவத்தில் பக்கஞ்சாராப் பண்பு



நாடு என்பது எப்படி அமைய வேண்டும் என்ற வினா பலரிடம் உள்ளது. எல்லா வகையான உணவுப் பொருள்களும் நிறைந்து உழவர் பெருமக்களும் இல்லறம், துறவறம் என்கின்ற அறவழியில் தவறாத பெருமக்களும் பிறருக்குப் பயன் நல்கும் செல்வர்களும் சேர்ந்திருப்பதே 'நாடு' என்கிறார் வள்ளுவர். தெய்வப் புலவரின் இந்த எண்ணப் பாங்கு இலட்சிய நாட்டிற்குரிய பண்பு என எண்ணத் தோன்றுகின்றது. இயல்பாகச் செயற்படும் நாடு இத்தகைய உயர்பண்புக் கூறுகளை உள்வாங்கி நடக்க முயல்வதே 'நாடு' நல்லாட்சி வழியில் பயணிக்க வாய்ப்பளிக்கும்.

பண்டைய இலக்கியகாரர் அரசை மையப்படுத்திக் கூறிய சிந்தனைகள் நல்லாட்சியை அவாவியதன் வெளிப்பாடுகளே. இவை தற்காலத்திலுங்கூட நிறுவனங்களை மையப்படுத்திய தலைமைத்துவத்துக்கும் வழிகாட்டுவதாக அமையும்.

பெரிய புராணத்தில் சேக்கிழார் காட்டும் சோழநாடு நீதிநெறியில் உச்சம் பெற்றுத் திகழ்கின்றது. இதனைச் சான்றுபடுத்த மநுநீதி கண்ட சோழனின் கதையைக் கையிலெடுக்கிறார் சேக்கிழார்.

மநுநீதிகண்ட சோழனுடைய ஒரே மகன் வீதிவிடங்கன். தவமிருந்து பெற்ற பிள்ளை. இளவரசனாகிய வீதிவிடங்கன் ஒரு நாள் தேரில் உலாவருகின்றான். திடீரெனப் பசுக்கன்று ஒன்று தேர்க்காலின் இடையிற் புகுந்துவிடுகின்றது. விபத்தில் நசியுண்டு இறந்துவிடுகின்றது. இந்த நிலையில் தாய்ப்பசு மநுநீதி கண்ட சோழனிடம் வந்து நீதி கேட்டு நிற்கின்றது.

**இலக்கியக் காட்சி – 108**

பசுக்கன்றைக் கொன்ற பழியில் இருந்து விடுபடுவதற்கான பிராயச்சித்தங்களை மநுதர்மசாத்திரங்கள் உரைத்துள்ளன. அவற்றைக் கைக் கொள்வதன் மூலம் பாவங்களை நீக்கிக் கொள்ளலாம் என மந்திரிமார் உரைக்கின்றனர். அவர்கள் கூறிய பிராயச்சித்த வழிமுறைகளைக் கேட்ட சோழ அரசன் துடித்துப் போகின்றான்.

நாட்டில் வாழும் மக்களுக்கு ஐந்து வழிகளில் அச்சுறுத்தல்கள் நேரலாம். அரசனால், நாட்டில் சமகாலத்தில் வாழும் குடிமக்களால், தீமை விளைவிக்கக் கூடிய பகைவர்களால், திருடர்களால், பிற உயிரினங்களால் ஆபத்துக்கள் நேர வாய்ப்புக்கள் உள்ளன. இத்தகைய ஐந்து அச்சங்களையும் நீக்கி அறத்தை வழுவாமல் நடத்துபவனே உண்மையான அரசன். இத்தலைமைத்துவச் சிந்தனையை வெளிப்படுத்தும் முகமாக சோழனின் வார்த்தைகள் முழங்குகின்றன.

*மாநிலம் காவலன் ஆவான்*
*மன் உயிர் காக்கும் காலை*
*தான் அதனுக்கு இடையூறு*
*தன்னால் தன் பரிசனத்தால்*
*ஊனம்மிகு பகைத்திறத்தால்*
*கள்வரால் உயிர்கள் தம்மால்*
*ஆனபயம் ஐந்தும் தீர்த்து*
*அறம் காப்பான் அல்லனோ*

வட நூற் சாத்திரங்கள் விதித்த அறக்கருத்துக்களைப் புறந்தள்ளிவிட்டு தமிழர் காட்டும் அறம் பற்றிய சிந்தனையைச் சேக்கிழார் முன்வைக்க விழைகின்றார். பசுக்கன்றைக் கொலை செய்தால் அப்பாவம் நீங்கிவிட வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளக் கூடிய பிராயச்சித்தங்கள் பற்றி அரசன் பிரஸ்தாபிக்கவில்லை. அவன் பாவப்பட்ட தாய்ப்பசு வின் பக்கத்தில் இருந்து பிரச்சின்னையை அணுகுகின்றான். இதனால் தன்மகன் என்று கூடப் பார்க்காமல் வீதிவிடங்கனைத் தேர்க் காலில் இட்டு நசிக்குமாறு ஆணையிடுகின்றான்.

இத்தகைய பக்கம் சாராத பண்பையே வள்ளுவரும் வலியுறுத்துகின்றார். சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் நடுநிலை காத்தல் வேந்தனுக்குரிய முக்கிய இயல்பு ஆகும். இதனாலேயே அவன் 'இறை' எனப்பட்டான்.

ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து எவரிடத்தும் தாட்சண்யம் காட்டாது நடுநிலை நழுவாது நின்று அந்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனை வழங்குவதே நீதியாகும். இதனை

*ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்து செய்வஃதே முறை* என்றார்

வள்ளுவர். நிர்வாகவியலில் வள்ளுவர் முன்வைத்த பக்கஞ்சாராப் பண்பும் மநுநீதிச் சோழன் அதனைக் கைக்கொண்டதாகச் சேக்கிழார் காட்டும்விதமும் உள்ளுந்தோறும் நயக்கத்தக்கன.



**ச.லலீசன்**
(விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

# விடிவுக்கான உதிர்வுகள்



**சிறுகதை**

அன்றைய புதினப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த சுந்தரின் மனம் திக்கென்று வெடித்து விடும் போலிருந்தது. பத்திரிகையின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் கொலை, கொள்ளை, பலி என்று சம்பவங்களால் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்டில் எப்போதுதான் நிரந்தர அமைதி தோன்றி நாமெல்லாம் நிம்மதியாய் வாழப் போகிறோம் என்றவனுக்குப் ''பத்திரிகையாளர் பரமசிவம் சுட்டுக் கொலை'' என்ற தலையங்கம் சற்றே தூக்கி வாரிப் போட்டது. இது உண்மையா அல்லது வேறு யாராவது.. பரமசிவமோ.. ஆவலின் உந்தலால் மேலும் பத்திரிகையைத் தொடர்ந்தான். ''பொதுக் கூட்டமொன்றில் செய்தியைச் சேகரித்த பின் தன் மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்த வேளை இனந்தெரியாத நபர்களால் வீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்'' என்று செய்தி தொடர்ந்தது. சுந்தரால் எதுவும் செய்ய முடியவில்லை.

உள்ளம் பதறிப்போக புதினப் பத்திரிகையுடன் ம்னைவியை நோக்கி ஓட எத்தனித் போது யாரப்பா நம்ம பரமசிவமோ என்று சோகம் ததும்பிய குரலில் சுந்தரை நோக்கி விரைந்தாள் சுந்தரால் எதுவும் பேச முடியவில்லை. இருந்தாலும் வார்த்தைகளை வரவழைத்துக் கொண்டு அங்கும் இங்கும் தடுமாறிக் கொண்டிருந்தவனுக்கு கண்ணில் இருந்து நீர்வடிய ஆரம்பித்தது. பால்ய நண்பனான பரமசிவம் சுந்தரின் உயிர்த்தோழன்.

பள்ளிப் பருவம் முதல் ஒன்றாகவே இணை பிரியாத நண்பர்களாய் இருவரும் சேர்ந்திருந்தனர். பாடசாலைவிட்டு பல்கலைக் கழகம் சென்ற பின்னர் பரமசிவத்தை இடையிடையே குசலம் விசாரித்துக் கொள்வதுடன் இருவரினதும் நட்பு நின்றுவிடவில்லை.

சுந்தர் வேலை விடயமாக வெளியூர் சென்றதும் அடிக்கடி இருவரும் தொடர்பு கொள்வதுண்டு. ஆனாலும் நட்புக்கு இலக்கணமாய் இருவரையும் இணைத்துக் கொள்ளலாம் ''என்ன நடந்தது உங்களுக்கு''? என்று மனைவி சுரேகாவின் குரலை கேட்டதும் சுய நினைவு வந்தவனாய் மனைவியின் பக்கந்திரும்பினான் சுந்தர். ''என்ன இருந்தாலும் இந்த தேசத்திலை எமக்கு நிம்மதி என்பது மருந்துக்கும் கிடையாதப்பா. பத்திரிகைத் தொழில் ஒரு நாட்டின் புத்தி ஜீவிகளை மேலும் மேலும் வளர்ச்சியடையச் செய்யும் ஒரு சுதந்திரமான ஊடகத் தொழில். ஒரு பேனா முனையில் பிறக்கும் எண்ணக் கருக்கள் ஒரு விடியலுக்கான விதைகளைக் கூட தாவும் ஆற்றல் கொண்டவை. ஒரு பத்திரிகையாளன் நினைத்தால் ஒரு நாட்டையே உருவாக்கக் கூடிய உண்மைச் செய்திகளை ஊடகங்கள் மூலமாக உலகறியச் செய்யலாம். கத்தியின்றி ரத்தமின்றி பேனா முனையில் தன் கருத்துக்களை விமர்சிப்பவனுக்குக் கூட சுதந்திரமில்லையென்றால் ஊடகங்கள் யாவும் உமையாகிப் போன பின் உண்மையான பத்திரிகைச் சுதந்திரங்கள் நாட்டில் அருகத் தான் செய்கின்றன. ஊடகங்களுக்கு வாய்பூட்டுப் போடும் சுயாதீனங்கள் என்றும் உண்மைச் செய்திகளை வெளியிட மறுக்கின்றன.

ஒரு பத்திரிகையாளன் அஞ்சா நெஞ் சத்துடன் தீரம் மிக்க தற்துணிவுடன் தன் உயிரைக் கூட துச்சமென மதித்து களத்தில் குதிக்கிறான். ஒரு போராளியின் துவக்கு முனையிலிருந்து பாயும் ஒவ்வொரு ரவையும் ஒரு நாட்டின் சுதந்திரத்தை நோக்கிய படிக்கற்களைச் சமைக்கின்றன.

அந்தப் படிக்கற்களின் பாதச் சுவடுகளாக எழுந்து பரிணமிப் பது ஒரு பத்திரிகை ஊடகத்தின் உன்னத பணியால் தான்'' என்று சுந்தர் தன் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தான்.

தாளாத சோகத்தால் தன் நண்பனின் பிரிவை சுமக்க முடியாமல் சுந்தர் கூறிய வார்த்தைகள் அத்தனையும் நிதானத்துடன் கேட்டுக் கொண்டிருந்த சுரேகா கூட ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

பத்திரிகைச் சுதந்திரம் ஊடகங்களின் தனித்துவம், உண்மையான தேச விடுதலை, அது, இது என்று வாய்கிழியக் கத்தி வாய் வீரம் பேசுகிறார்கள். ஆனால் ஒரு ஊடகத்தை வளர்க்கின்ற சுயாதீன பத்திரிகை நிறுவனத்தைக் கூட குண்டுவீசி தாக்க முற்படுகின்ற குண்டர்கள் மத்தியில் இந்தச் சுதந்திரங்கள் வெறும் போலியானவையே பத்திரிகை கூட ஒரு சுதந்திரமான கட்டுப்பாடற்ற ஊடகந்தான்.

குண்டு வீசி அழித்தால் கூட அது உறங்குவதில்லை. மீண்டும் மீண்டும் எழும். எழுந்தால் கூட

**க.நாகேஸ்வரா, .**
**சண்டிலிப்பாய் மேற்கு சண்டிலிப்பாய்.**

தலை குனிவதில்லை. எத்தர்களின் ஈனச் செயலால் ஒரு போதும் அது அடங்கிப் போவதில்லை. ஊடகங்கள் உறங்குவதில்லை.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 30.10.2011 முதல் 05.11.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடர்

தேவையற்ற குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். சிறிய தவறுகள் பெரிய பிரச்சினையாகி விடுமோ என பயம் கொள்வீர்கள். வயிறு உபாதைகளுக்கு ஆள்படலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். கணவன், மனைவி உறவில் அடிக்கடி சலசலப்புகள் ஏற்படலாம். சகோதரர்கள் வழியில் தொல்லைகள், சிரமங்கள் உண்டாகும். அவர்களை நம்பி எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். எதிலும் கவனம் அவசியம்.

### இடபர்

தேவையற்ற அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச்செலவு போன்றவற்றைச் சந்திக்கலாம். கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட சச்சரவுகள் நீங்கி, அவரால் ஆதாயம் பெறலாம். சில விடயங்களில் மரியாதைக் குறைவையும் சந்திக்கலாம். தேவையான பணத்தைப் புரட்டிக் கொள்வீர்கள். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். சகோதரர்கள் நலன் கருதி சில காரியங்களைச் செய்வீர்கள். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள்.

### மிதுனர்

மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடி கொள்ளும். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். நீண்டதூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். வேலைப்பளு அதிகரிக்கும். குதர்க்கமான, குறும்புத்தனமான பேச்சுக்களால் தொல்லை களுக்கு, மனஸ்தாபங்களுக்கு ஆள்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பிள்ளைகளால் செலவுகள் நேரும். பணவரவுகளைப் பெறலாம்.

### கடகர்

குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்கவும், பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றவும் கணிசமான தொகையைச் செலவிடலாம். சில முக்கியமான வேலைகளில் தடங்கல் ஏற்படலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். எதிர்பார்த்த பண வரவுகள் கைக்கு கிடைக்கும். சோர்வு, சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாகப் பல காரியங்களைச் செய்வீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அலைக்கழிப்புகளும், பதற்றங்களும் உருவாகும். சிலருடன் தேவையில்லாமல் கோபம், சண்டைகளில் ஈடுபடவும் நேரிடலாம். நிம்மதியைக் குலைக்கும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். குழப்பம், தடுமாற்றம் நேரும். சோர்வு ஆள்கொள்ளும். சுகமான அனுபவம் உண்டு.

### சிங்கர்

நண்பர்கள் சந்திப்பாலும், பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறவும் வாய்ப்பு உண்டு. குதர்க்கமாகப் பேசி மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு, அதிகமாகச் செலவாகலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கும். தேவையான பணத்தை எந்த வகையிலாவது புரட்டிக் கொள்வீர்கள். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உத்தியோக ரீதியான நெருக்கடிகள் அதிகரிக்கும். சகோதரர்கள் வழியில் திடீர்ச் செலவுகள் உண்டாகலாம். மனதின் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். நீண்ட நாளைய பிரச்சினை தீர்வுக்கு வரும். கடன் மிகுதிகள் வசூலாகும். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கடும் பிரயத்தனம் செய்வீர்கள்.

### கன்னி

மனம் ஒரு நிலைப்படாமல், ஏதோ ஒரு விடயத்தை நினைத்து அலைபாய்ந்து கொண்டிருக்கும். சில விடயங்களுக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காகச் செலவாகலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு. உங்களின் கோபம், வேகத்தைத் தூண்டும் வகையில் சில விடயங்கள் நடக்கலாம். இருந்தாலும், திட்டமிட்ட சில வேலைகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பொழுதுபோக்கு விடயங்களாலும் சந்தோஷம் அடைவீர்கள். எந்தக் காரியமும் நினைத்த வேகத்துக்கு முடியாமல் இழுத்தடிக்கலாம். எந்தளவுக்குப் பணம் வருகிறதோ, அதே அளவுக்கு செலவுகளும் உண்டாகும். குடும்பத்தினரின் ஆசைகளை நிறைவேற்றி வைக்க கணிசமான பணத்தைச் செலவிடலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். சகோதரர்களால் நன்மை அடையலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம்.

### துலார்

ஆதாயகரமான பண வரவுகளைப் பெறலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை நண்பர்கள் கொடுக்கலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களைச் செய்துவிட்டு அவதிப்படுவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்ய நினைப்பீர்கள். அடிக்கடி உணர்ச்சி வசப்படும் சூழ்நிலை உருவாகும். சிறிய பிரச்சினைகளைக் கூட பெரிய அளவில் கற்பனை செய்து ஆத்திரப்படுவீர்கள். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள், அவரின் அதிருப்திக்கு ஆளாகலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். யாருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுக்க வேண்டாம்.

### விருச்சிகர்

சில முக்கியமான காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். மனதுக்கு உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். பண வரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். அவசரமாக, உடனே முடிக்க வேண்டிய வேலைகளால் அலைக்கழிப்புகள், நெருக் கடிகள் தொடரும். அத்துடன் ஒரு வேலை முடியும் முன்னரே, அடுத்த வேலைகள் தோன்றி, உங்களை ஓய்வெடுக்க விடாமல் செய்யலாம். நேரத்தில், தேக ஆரோக்கிய விடயங்கல் அக்கறை அவசியம். தந்தையின் தேவைகளை நிறை வேற்றி வைப்பது, மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வது போன்ற வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களைப் பயன்படுத்தி மற்றவர்கள் காரியம் சாதிக்கலாம். எந்த விடயத்திலும் உடனுக்குடன் முடிவெடுக்க முடியாமல் தவிக்கலாம்.

### தனுசு

தேவையற்ற செலவுகளைச் செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் அல்லது சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். எதிர்பார்த்த பண வரவுகள் எளிதில் வந்து சேரும். கடன் கேட்ட இடத்திலும் கிடைக்கும். வேலைப்பளு கூடினாலும், அதற்கேற்ற வகையில் வருமானத்தை பெருக்கி, பழைய பிரச்சினைகளை எல்லாம் சமாளிப்பீர்கள். கடந்த காலத்தில் இழந்தவற்றை எல்லாம் மீட்கும் வாய்ப்பு உருவாகும். ஆதாயகரமான பண வரவுகளைப் பெறலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு, கொண்டாட்டத்தால் சந்தோஷம் உண்டு. செலவு, அலைச்சல் உண்டு. மறதியால் அவதிப்படலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். செலவு, அலைச்சல் நேரும்.

### மகரர்

வீண் செலவுகள், அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து, அதனால் அவதிப்படலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். கணவன், மனைவி உறவில் அடிக்கடி விரிசல் உண்டாகலாம். கூட்டுத் தொழிலும் திருப்தி தரும் வகையில் இருக்காது. கலைஞர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வழக்கத்துக்கு மாறாக, கூடுதல் ஆதாயம் பெறும் சூழ்நிலை உருவாகும். எதிர்பார்த்த சில காரியங்கள் மட்டுமின்றி, எதிர்பாராத சில காரியங்களும் நடக்கலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.


### கும்பர்

அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிட்டும். முடிவுகள் எடுப்பதில் குழப்பம், கவனக்குறைவு, தண்டச் செலவு, பயணங்களில் தடை, தாமதம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். எந்த வேலைகளையும் எளிதில் முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவுப் பெண்கள் சிலரின் சந்திப்பு நிகழும். நீண்டநாள்களாகச் செல்ல நினைத்த ஆலயங்களுக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். காரிய வெற்றி உண்டு.


### மீனர்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பொருள்கள் சேரும். உருப்படியான சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். உறவால் அனுகூலம் உண்டு. பிரியமான உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். அலைச்சல் இருந்தாலும், சில வேலைகளைத் திட்டமிட்டபடி முடிப்பீர்கள். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால், சந்தோஷம் அடைவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பழைய நண்பர்கள் மூலம், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள், தொழில் ரீதியான சிரமங்கள், தொல்லைகள், கடன் பிரச்சினைகள், வழக்கு விவகாரங்களில் சிக்கல்கள் போன்றவற்றைச் சந்திக்கலாம். எதிலும் கவனம் அவசியம். மதிப்பு, கௌரவம் பாதிக்கப்படும்.




ஜெ.பானந்தன், தரம் 8 ஏ,
யா/இந்துக் கல்லூரி.



தே.பவித்திரன், தரம் 6ஏ,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ஜெ.பிரித்தா, தரம்5 ஈ,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



ஜெ.பானந்தன், தரம்8 ஏ,
யா/இந்துக் கல்லூரி.

# கப்பல் கடலில் மிதப்பது எப்படி?




பல தொன் எடையுள்ள சாமான்களையும் ஏற்றிக் கொண்டு செல்லும் கப்பல், தண்ணீரில் மிதப்பது எப்படி? கடலில் கப்பல்கள் எவ்வாறு மிதக்கின்றன என்று பார்ப்போம்.

ஒரு கப்பல் தண்ணீரில் இருக்கும்போது அதன் உடற்பகுதி ஓரளவுவரை தண்ணீரில் அமிழ்ந்திருக்கும். அதாவது, கப்பலின் எடைக்குச் சமமான தண்ணீர் இடம் பெயரும் வரை அதன் உடற்பகுதி தண்ணீரில் அமிழும். 10 ஆயிரம் தொன் எடையுள்ள ஒரு கப்பலின் உடற்பகுதி, அதே எடையுள்ள தண்ணீரை இடம்பெயரச் செய்யும். எனவே ஒரு கப்பலின் எடையைக் கூறுவதற்குப் பதிலாக, அது இடம்பெயரச் செய்யும் தண்ணீரின் எடையைக் கூறுகிறார்கள்.

கப்பல் கடலில் செல்லும் போது கடல் மட்ட நீர் இருக்க வேண்டிய இடம் கப்பலின் வெளிப்பக்கத்தில் கோடு இட்டு காட்டப்பட்டிருக்கும். இந்த நீர் மட்டத்துக்கு மேல் கடல் நீர் மட்டம் கூடினால் கப்பல் மூழ்கும் ஆபத்து உள்ளது. அதுபோல் இந்த நீர் மட்டத்துக்கு கீழ் கடல் நீர் இருந்தாலும் கப்பல் சரியக்கூடிய ஆபத்து உள்ளது. அதன்போது கப்பலின் கடல்நீர்மட்டத்திதைச் சரி செய்வதற்காக அடித்தளத்தில் நீர் நிரப்பி, நீர் மட்டத்தைச் சரிசெய்கின்றார்கள்.

கபிலன்
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.

# பச்சை நிறக் கடலாமைகள்



முதிர்ந்த பச்சை நிறக் கடலாமைகள் ஏறக்குறைய ஒரு மீற்றர் நீளமும் 250 கிலோகிராம் நிறையும் கொண்டவைகளாகக் காணப்படும். இவை இடத்துக்கு இடம் மாறும் இயல்பு கொண்டவை. குறிப்பாக அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம் ஆகிய பிரதேசங்களில் இந்த இன ஆமைகளைக் காணலாம். இந்த வகை ஆமைகளை மனிதன் தமது உணவுத் தேவைக்குப் பயன்படுத்துகிறான். இதன் சுவைக்காக அதனைத் தேடிப்பிடித்து கொன்று சுவைப்பர். பச்சைநிறக் கடலாமைகள் பெரும்பாலும் மாமிச உண்ணிகளாக உள்ளன. சிலவேளைகளில் தாவரங்களில் உள்ள விஷத் தாவரம் எது என்று அறியாமல் அவற்றை உண்டு ஆபத்துக்களிலும் இவை மாட்டிக் கொள்வதுண்டு. அவற்றைப் பிடித்து உண்ணும் உயிரினங்கள், மனிதரும் இறப்பது உண்டு.

நிலா

# முதல் 20 மொழிகள்

- மாண்டரின் (சீனம்)
- ஸ்பானிய மொழி
- ஆங்கிலம்
- அராபி
- வங்க மொழி
- ஹிந்தி
- போர்த்துக்கீச மொழி
- ரஷ்ய மொழி
- ஜப்பானிய மொழி
- ஜேர்மன் மொழி
- பிரான்ஸ்
- வூ மொழி (சீனம்)
- ஜாவா மொழி
- கொரிய மொழி
- வியட்நாமிய மொழி
- தெலுங்கு மொழி
- யூவே மொழி (சீனம்)
- மராட்டி மொழி
- தமிழ் மொழி
- துருக்கி மொழி

நிலா

## விடை தெரியுமா? 131

### உங்களுக்கும் பரிசில்கள்

1. இலங்கையின் புனித மலை என அழைக்கப்படுவது எது?
2. கொழும்பில் கரையும் விற்றமின் எது?
3. பரப்பளவில் ஏழாவது இடத்தில் உள்ள நாடு எது?
4. கலிலியோ கலிலி எந்த நகரில் பிறந்தார்?
5. முசுட்டையின் தாவரவியற் பெயர் என்ன?

### விடைகள் 129

1. புளோரன்ஸ் நைற்றிங்கேல்
2. ஒக்ரோபர்-21
3. பொக்கா வளம்
4. சிட்னி
5. கராத்தே

### வெற்றி பெற்றோர் விவரம்

★ க.சாம்பவி, தரம் 12, யா/அந்தியார் இந்துக் கல்லூரி.
★ ச.ஐஸ்வர்யா, தரம் 8 கே, யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.
★ ப.யாழினி, தரம் 8 கே, யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.
★ க.நிசாந்தினி, தரம் 12, ஏ யா/அந்தியார் இந்துக் கல்லூரி.
★ அ.தயாசாகரி, தரம் 8 பி, யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 05.11.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## பொது அறிவு

1. விஞ்ஞான ரீதியாக மருத்துவத்தை அணுகிய கிரேக்க அறிஞர் யார்?
ஹிப்போகிரட்டீஸ்
2. ஹொலிவூட்டில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் எது?
In Old California
3. ரிப்பிளிக்கன் கட்சியின் சார்பாக அரசியலுக்கு வந்தவர், 1865 ஆம் ஆண்டு அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கிய அமெரிக்க ஜனாதிபதி யார்?
ஆபிரகாம் லிங்கன்
4. 75 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியின் வான்பரப்பில் தோன்றும் வால் நட்சத்திரம் எது?
ஹேலிஸ் வால் நட்சத்திரம்
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் யாது?
ராஜா ஹரிச்சந்திரா.

ப.யாழினி, 8 கே, யா/புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி.


# மூன்றின் மகிமை

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முக்கொடி | - | விற்கொடி, புலிக்கொடி, மீன்கொடி |
| முப்பொருள் | - | பதி, பசு, பாசம் |
| முப்பொறி | - | மனம், வாக்கு, காயம் |
| முக்கனி | - | மா, பலா, வாழை |
| மும்மலம் | - | ஆணவம், கன்மம், மாயை |
| மும்மூர்த்தி | - | சிவன், பிரம்மா, விஷ்ணு |
| மூவிடம் | - | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| முக்காலம் | - | இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| முப்பதி | - | கருவூர், உறையூர், மதுரை |
| முப்பிறப்பு | - | உம்மை, இம்மை, மறுமை |
| முக்குற்றம் | - | காமம், வெகுளி, மயக்கம் |
| மூவுலகம் | - | ஆதி, அந்தம், சொர்க்கம் |
| மும்மலை | - | கொல்லி மலை, நேரிமலை, பொதிகைமலை |
| முந்நதி | - | பொருநை நதி, காவிரி நதி, வைகை நதி |



மதி

# விடியல்



என் கண்களின் ஓரத்தில்
கனவுகளின் ஈரம்
குடிகொள்கின்றன
சுதந்திர தாகம்
என்னை சூழ்ந்து கொண்டதனால்
சூட்சுமங்களை
யாசித்தபடி
என் பயணங்களும்
தொடர்கின்றன
ஒவ்வொரு
மைல் கற்களையும்
தாண்டும் பொழுது
நம்பிக்கை
ஒளியொன்று
பிறக்கின்றது
நாளைய விடியலும்
என் கைகளில் தானென்று

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

# மறு ஜென்மம்...!



பிரிவு என்ற வார்த்தையால்
தீ மூட்டிச் சென்றவனே
காயப்பட்டது என் உயிர்
என்று அறியாமல்
வேடிக்கை பார்க்கின்றாய்
இன்னொரு ஜென்மம் ஒன்று
எனக்கு இருந்தால்
உன்னையே சுவாசிக்கும்
இதயம் கேட்பேன்
சேரும் வரம் இல்லை
என்றால் பிறக்கும்
வரம் எனக்கு
ஏனடா...!

ச.சோபியா,
புதுக்கோயிலடி.

# அன்புக்காய்



அவலங்கள் சுமந்தும்
அமைதி தேடி அலைந்தும்
அன்புக்காய் ஏங்கும்
அன்புள்ளங்கள் ஆயிரம்

மனிதங்கள் உயிர்த்தலுக்காய்
சுயநலங்கள் மறைதலுக்காய்
உள்ளத்தில் மறையாத காயங்களோடு
மௌனங்கள் தொடர புன்னகை
மட்டும் அவர்கள் மொழியாய்

தனிமைக்குள்ளே காலங்களை
கழிக்கும் அன்புக்காய் ஏங்கும்
உள்ளங்கள் தான் எத்தனை
இருளுக்குள்ளே ஒளிதேடும் முகங்கள்

ஆண்மைகளும் பெண்மைகளும்
ஆறாத மனங்களோடு ஆயிரம்
கண்ணீர் கதைகள் நிறைந்து
கிடக்கிறது மண்ணிலே புதைந்து

அன்புக்காய் நிம்மதிக்காய் அவர்கள்
காத்திருப்புக்கள் தொடர்கிறது
யார் கொடுப்பார் நிழல் என்று
மனதுக்குள் மற்றோரிடம் சொல்லி

ஆற தம் மனத் துயரைச்
சொல்ல எண்ணும் மனத்துடிப்பு

மனிதம் கொண்ட மனிதங்களே
அன்புள்ள புனிதர்களே உங்களிடம்
அன்பாகக் கேட்கிறோம் எம்மோடு
ஒன்று சேருங்கள் எங்கள் சோகம் தீர அன்புக்கதை
பேச வாருங்கள் அன்புக்காய் ஏங்கும் அன்புள்ளம்
மனதோடு மறையாது கிடக்கும் சோகம்.

திருமலையூர் பரணி.

# ஏதாவது பேசு



ஒளிபரப்பும்
நிலவினிலே
உனதுருவம் தெரிய
ஓடிவரும்
முகில்களிலே
என் நினைவை
அனுப்புகிறேன்
ஏதாவது பேசிவிடு
திசை மறந்த
எனக்காய்...!

பா.பொன்நிலவன்,
மீசாலை.

# மீண்டும் ஓர் ஜென்மம் நீர் எழுந்திட வேண்டும்

ஆண்டுகள் இருபத்தி நான்கு
அடியோடு கடந்தது
மாண்ட உம் நினைவுகள்
நீங்காமல் நிலைக்குது
வாழ்ந்த உம் காலங்கள்
பூமியில் குறைந்தது
விழ்ந்த உம் உடலங்கள்
சரித்திரம் படைக்குது

தோளோடு தோள் சேர்ந்து
வாழ்ந்தது இனிக்குது
தோழர் நீர் விழுந்ததோ
நினைவினில் கசக்குது
நோயாளர் நலம் நாடிய
உம் சேவை நிலைக்குது
நோயின்றி நீர் சென்ற
நிலையதோ கனக்குது

உறவென்று உம்மை நாம்
சொல்வதில் பெருமைதான்
உன் உறவுகள் கலங்குதல்
உண்மையில் கவலைதான்
உயிர் ஈய்ந்து உயிர் காத்த
உத்தமர் நீங்கள் தான்
ஊன் உடல் இல்லாது
நீடூழி வாழ்வது நீங்கள்தான்

மாண்டவர் மீண்டதில்லை
சரித்திரம் உண்மைதான்
மாண்டும் நீர் வாழ்வதோ
எங்களின் மனதில்தான்
மீண்டும் ஓர் ஜென்மம் நீர்
எழுந்திட வேண்டித்தான்
ஆண்டுகள் தொடர்ந்து நாம்
செலுத்துகிறோம் அஞ்சலி தான்

நீர் உயிர் ஈர்ந்த இடம்
யாழ். வைத்தியசாலைதான்
உம் நினைவிங்கு கூறுதல்
சாலவும் சிறப்புத்தான்
எம் மனம் தனில் மறையாதது
உம் நினைவு ஒன்றுதான்
எம் தீப மலரஞ்சலிகள்
என்றும் இங்கு உமக்குத்தான்

- பண்ணை நகர் நாயகன்

# கனவிலும் காத்திருக்கிறேன்...

இதயத்தில் உறக்கம்
அற்ற ஒப்பாரமான
இரு விதத் துடிப்புகள்
சிந்திப்புகள் அற்ற
சிதறிய என் காதல்
கற்பனைகள்

வரம்பு வரையறையன்றி
கட்டுக்கரை தாண்டிச்
சென்ற என் வாழ்வின்
எதிர்கால வர்ணனைகள்
தங்குமிட வசதி அற்று
தாவிச் சென்று
தரமுயர்ந்த தயவான
காதல் மயக்கங்கள்

எத்தனையோ நாள்
உன்னுடன் இணைந்தும்
வாழ்ந்திருக்கிறேன் உனக்குத்
தெரியாமலே உன்னில்
இருக்கிறேன் இப்போதும்
எப்போதும் என்றென்றைக்கும்
கனவில் கூட தூக்கமின்றி
உன் நினைவில்
பொழுது முடியும் மட்டும் என்
வாழ்வு மட்டும் நீ என்னோடு
நான் உன்னோடு அதனால்
தான் இத்தனை பேர்
உலகில் இருக்க

உன்னை மட்டும்
நான் காதலித்தேன் ஆனால்
நீ கேட்டுத் தான்
நான் உன்னைக் காதலித்தேன்
யார் கேட்டுக் கொண்டதால்
நீ என்னைக் காதலித்தாய்
கவிதையே இக் காரணம்
அறியக் கனவிலும்
காத்திருக்கிறேன்
ஏனெனில் கனவிலும் உன்
ஆக்கிரமிப்பு தயவாய்க்
கேட்கிறேன் ஏன் என்னை
மட்டும் காதலித்து
கழுத்தறுக்கிறாய்....

து. சக்தி, வேரவில்.



# உன் வரவு



நீ உன் காதலைச்
சொன்னதும் உனக்காக
பல ஜென்மம் காத்திருப்பேன்
என்றேன்
உலகத்துக்கும் உனக்கும் என்
மரணம் உண்மையானதாக
இருக்கலாம்

ஆனால் என் காதலும்
காத்திருப்பும் உண்மையே
பல வருடம் சென்றாலும்
என் நினைவுகளை
நீ மறந்தாலும்
என் கல்லறையில்
உறங்காமல் விழித்திருப்பேன்
உன் வரவுக்காக அல்ல
உன்னை வாழ வைப்பதற்காக....

ச.சோபியா

# காற்றில் கரைந்துவிட்ட பயங்கரவாதப் பூச்சாண்டி



**ஞாயிறு காரம்**

**சந்திரசேகர ஆசாத்**

இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பை இராணுவ ரீதியாகத் தோற்கடித்த பின்பு இலங்கை அரசு உலகிலேயே மிகப் பயங்கரமான ஓர் அமைப்பை முற்றாகத் துடைத்தழித்து விட்டதாகப் பெருமையடித்துக் கொள்வதை நாமறிவோம். அதுமட்டுமன்றி தமது வீர அனுபவங்களைப் பிற நாடுகளுக்குப் போதிப்பதிலும் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு சில நாடுகளின் இராணுவத் தளபதிகளை அழைத்துப் பயங்கரவாத ஒழிப்புப் பற்றி பாடம் நடத்தியமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

### போர்க்குற்ற எதிர்ப்பலையை திசை திருப்பும் செயற்பாடு

இந்த நடவடிக்கைகள் அடிப்படையில் இலங்கைப் படையினர் மேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களையும் எதிர்ப்பலைகளையும் திசை திருப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என வலியுறுத்துவதனூடாகவே அந்த நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அண்மையில் நெதர்லாந்தின் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இலங்கை அரசின் பயங்கரவாதப் பிரசாரத்துக்குத் தலையிடி கொடுக்கும் விதமாகவே அமைந்துள்ளது. இதை ஒரு சாதாரண தீர்ப்பு என்று சொல்லி விட முடியாது. இந்த வழக்கு தொடர்பாக நோர்வேயில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் முதற்கொண்டு பல்வேறு தரப்பினரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். பல சர்வதேச அளவிலான ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அதில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு ஆயுதக் கொள்வனவுக்கு நிதி சேர்த்தனர் என்ற ரீதியில் சிறு தண்டனைகள் வழங்கப்பட்ட போதிலும் அந்த வழக்கின் பிரதான தீர்ப்பு முக்கியமானது.

அதாவது விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்லவென்றும் அது ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு என்றும் அந்தத் தீர்ப்பில் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம் உட்பட ஏற்கனவே விடுதலைப் புலிகளைப் பயங்கரவார அமைப்பு எனப் பிரகடனம் செய்த நாடுகள் அந்த முடிவுகளை மீள்பரிசீலனை செய்யக்கூடும் என நம்பப்படுகிறது.

### தலையிடியான தீர்ப்பு

இதுவரை காலமும் விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக சர்வதேச மட்டத்தில் உருவகப்படுத்தி வந்த இலங்கை அரசுக்கு இந்தத் தீர்ப்பு ஒரு தலையடியாகவே விழுந்திருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அரபு லீக்கின் மாநாட்டின் போது ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதாவது உலகில் பயங்கரவாத அமைப்புகளுக்கும் விடுதலை இயக்கங்களுக்குமிடையேயான வேறுபாடுகள் இனம் காணப்பட வேண்டும் எனவும் விடுதலை அமைப் புகள் பயங்கர வாத முத்திரை குத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதுமே அது. ஆனால் அது தீர்மானம் எழுதுதாள் அளவில் மட்டுமே என்பதும் நடைமுறையில் உறங்கிப் போய்விட்டது என்பதும் துரதிர்ஷ்டமே.

ஆனால் நெதர்லாந்தின் நீதிமன்றம் ஒரு முறையான விசாரணை மூலம் விடுதலைப் போராட்டத்துக்கும் பயங்கரவாதத்துக்குமிடையேயுள்ள வேறுபாட்டை இனம் கண்டிருப்பது வரவேற்கத்தக்க ஆரம்பமாகும்.

இலங்கையின் சிரேஷ்ட அமைச்சரான டியூ. குணசேகர ஒரு முறை வழங்கிய பேட்டியொன்றில் பிரபாகரன்தான் பிரச்சினையின் காரணமென்றால் பிரபாகரனின் இறப்புடன் பிரச்சினைகள் முடிவுக்கு வந்திருக்க வேண்டும் எனவும் பிரச்சினைகள்தான் பிரபாகரனை உருவாக்கியது எனவும் பிரச்சினைகளின் அடிப்படை இனம் காணப்பட்டுத் தீர்க்கப்படும் போதே உண்மையான சமாதானத்தை எட்ட முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

> **பிரச்சினைகள்தான் போராட்டங்களை உருவாக்குகின்றன என்பதையும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் போது போராட்டங்களுக்கான தேவைகள் அற்றுப் போய்விடும் என்பதையும் இலங்கையின் சிரேஷ்ட அமைச்சரான டியூ.குணசேகர ஒருமுறை தெரிவித்திருந்தார். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பல்ல அது ஒரு விடுதலை அமைப்பு என்ற நெதர்லாந்து நீதிமன்றத்தின் தீர்ப்பு மிக மிக முக்கியமானதாகும்.**

அதாவது பிரச்சினைகள்தான் போராட்டங்களை உருவாக்குகின்றன என்பதையும் பிரச்சினைகள் தீர்க்கப்படும் போது போராட்டங்களுக்கான தேவைகள் அற்றுப் போய்விடும் என்பதையும் அவர் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ஆட்சியாளர்களோ பிரச்சினைகள் தொடர்பாகப் போராட்டங்கள் எழும்போது பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக அக்கறை காட்டுவதில்லை. மாறாகப் போராட்டங்களை வன்முறைகள் மூலம் அடக்க முயல்கின்றனர். அதன் காரணமாகப் போராட்டங்கள் விஸ்வரூபம் எடுத்துப் போர்களாக விரிவடைகின்றன. ஆனால் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நிலைத்திருக்க அழிவுகள் மட்டுமே மேலோங்குகின்றன. இத்தகைய அடக்குமுறைகளை நியாயப்படுத்தவே விடுதலை அமைப்புகளுக்கு பயங்கரவாத முலாம் பூசப்பட்டு மக்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

### அஹிம்சைப் போராட்டத்துக்கு கிடைத்த தீர்வு என்ன?

1956 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக அஹிம்சை வழியிலான போராட்டங்களையே நடத்தி வந்தனர். இதற்குப் பதில் - 1958, 1977, 1983 ஆகிய காலப் பகுதிகளில் இனக் கலவரம் என்ற பேரில் தென்னிலங்கையில் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பாகவே வழங்கப்பட்டது. 1961 இல் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் கூட இராணுவ வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

எனவேதான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் எடுத்துப் போராடுவதை விட வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தனர். இன்னும் சொல்லப் போனால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் ஆயுத அடக்குமுறை மூலம் வலிந்து ஆட்சியாளர்களால் ஆயுதப் போராட்டமாக உருமாற்றப்பட்டது.

1975 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் 1983 இன அழிப்புக் கலவரத்தின் பின்பே முனைப்புப் பெற்றது என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆனால் இளைஞர் குழுக்கள் நடத்திய சில ஆயுத நடவடிக்கைகளுக்கும் பதிலடியாக ஒரு பெரும் இன அழிப்பு அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள் மீது ஏவப்பட்டது. ஆரம்பத்தில் இளைஞர் குழுக்களை வேட்டையாடுவது என்ற பேரில் பல அப்பாவித் தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். விசாரணை எதுவுமின்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டனர். அரச படைகளின் இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியது. இதுவே ஏராளமான இளைஞர்களை ஆயுதப் போராட்டதை நோக்கி நகர்த்தியது.

### ஆயுதப் படைகளின் கொடுமைகள்

1984 இற்குப் பின்பு இந்த அரச பயங்கரவாதம் மிகப் பயங்கர வடிவை எடுத்தது. அதாவது அதிகாலையில் ஐந்தாறு ஊர்களைச் சுற்றி வளைத்து மக்களை ஒரு பொது இடத்தில் குவிப்பது, பின்பு அவர்களின் மேல் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அல்லது கட்டடங்களுக்குள் அடைத்து வைத்துவிட்டு குண்டு வைத்து கட்டடங்களைத் தகர்த்து மக்களை ஒரே இடத்தில் நூற்றுக்கணக்கில் கொல்வது போன்ற கொடுமைகள் ஆயுதப் படைகளால் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கில் கொக்கட்டிச் சோலை, வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, வீரமுனை, உடும்பன் குளம், குமாரபுரம், கிளிவெட்டி எனவும் வடக்கில் ஒதியமலை, வல்வெட்டித்துறை எனவும் அரச பயங்கரவாதப் படுகொலைகள் தொடர்ந்தன. அதுமட்டுமன்றி குருநகர் யாகப்பர் ஆலயம், நவாலி சென்.பீற்றர் ஆலயம், நாகர் கோயில், பண்டி விரிச்சான் பாடசாலைகள் எனப் பல மக்கள் கூடுமிடங்களும் விமானக் குண்டுகளுக்கு இலக்காகின. இதில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு அரச பயங்கரவாதம் பெரும் அழிப்பை மேற்கொண்டிருந்த வேளையில் சர்வதேச சமூகம் இவற்றைப் பொருட்படுத்தவில்லை. எனவே தமிழ் மக்கள் தம்மைத் தாமே பாதுகாக்கும் நிலை ஏற்பட்டது. எனவே ஆயுதப் போராட்டம் முனைப்படைந்தது. விடுதலைப் புலிகள் தரைப்படை, கடற்படை, விமானப்படை, புலனாய்வுப் படை என்பவற்றைக் கொண்ட வலுவான சக்தியாக வளர்ச்சி பெற்றனர். விடுதலைப் பிரதேசங்களை உருவாக்கிச் சொந்த நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தினர். ஆனால் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 இல் அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீதும் பென்டகன் மீதும் அல்குவைதா இயக்கம் நடத்திய தாக்குதலை அடுத்து அமெரிக்கா பல ஆயுதப் போராட்ட அமைப்புக்களைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய இலங்கை அரசு இராஜதந்திர உறவுகளைக் கையாண்டு விடுதலைப் புலிகளை அமெரிக்கா பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்யத் தூண்டி அதில் வெற்றியும் பெற்றது. அதைத் தொடர்ந்து வேறுபல நாடுகளும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக் கொண்டன. அதாவது இலங்கை அரசின் அரச பயங்கர வாதம் பொருட்படுத்தப்படாது ஒரு விடுதலைப் போராட்டம் பயங்கரவாதமாகத் திரிபுபடுத்தப்பட்டது.

இன்று போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என இலங்கை அரசின் அரச பயங்கரவாதம் அம்பலப்பட்டு நிற்கிறது. அப்படியான ஒரு சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பல்ல அது ஒரு விடுதலை அமைப்பு என்ற நெதர்லாந்து நீதிமன்றத்தின் தீர்ப்பு மிக மிக முக்கியமானதாகும்.

எப்படியிருப்பினும் இந்த நிலைமைகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். *

# ஏழாம் அறிவு




விமர்சனம்

தற்காப்புக் கலை, மருத்துவம் எனப் பல கலைகளில் புகழ்பெற்றவன் பல்லவ மன்னர்களில் ஒருவனான போதிதர்மன். இவன் சீன நாடு சென்றபோது அங்கு கொடிய வியாதியால் மக்கள் இறக்கின்றனர். அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு மருத்துவமும் எதிரிகளை வீழ்த்த தற்காப்புக் கலையும் கற்றுக் கொடுக்கிறான். இதன்மூலம் அவனது புகழ் நாடு கடந்து பேசப் படுகிறது. அவ னது கடைசிக் காலத்தைக் கழிக்க காஞ்சிபுரம் திரும்ப முடிவெடுத்த போது இந்தக் கலைகள் மற்ற நாடுகளுக்குப் பரவக் கூடாது என்று உணரும் சீன நாட்டினர் அவனுக்கு உணவில் விஷம் வைக்கின்றனர். அவர்களின் தவறை மன்னித்து அவர்களுக்காகவே அங்கு உயிர் துறக்கிறார் போதிதர்மன். அவரது உடலை அங்கு அடக்கம் செய்வதோடு அவருக்குக் கோவில் கட்டி வழிபடுகின்றனர். தமிழ் நாட்டில் ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவி சுபா, போதிதர்மனின் வரலாற்றை ஆராய்ந்து வியக்கிறார். அவன் வாழ்ந்த பகுதிக்குச் சென்று அவனது வம்சாவளி ரத்தத்தைச் சோதித்து அதே மரபணு உள்ள ஓர் இளைஞனைக் கண்டுபிடிக்கின்றாள். அவனைக் காதலிப்பது போல் நடித்து தனது ஆராய்ச்சிக்கு பயன்படுத்த முயற்சிக்கின்றாள். இந்திய நாட்டில் கொடிய வியாதியை உருவாக்கி அதற்கு மருந்து தேடித் தன் நாட்டிடம் கையேந்த வைக்கவும் அதன் மூலம் இந்தியாவை அடிமையாக்கவும் நினைக்கும் சீனா, போதி தர்மன் பற்றிய ஆராய்ச்சி செய்யும் மாணவியை ஒழித்துக் கட்ட எல்லாத் திறமையையும் கொண்ட ஓர் இளைஞனை இந்தியாவுக்கு அனுப்புகின்றது. போதி தர்மனின் வாரிசுக்கு அவள் தன்னிடம் காட்டுவது காதல் அல்ல, சோதனை என்று தெரியவரும்போது அதிர்ந்து போகின்றான். சர்வ வல்லமை பொருந்திய அந்த சீன நாசக்காரரை எதிர்க்க சுபா தரும் ஆராய்ச்சிக்கு உதவுவதோடு அந்த சீன இளைஞனால் நடக்க இருந்த ஆபத்துக்களை முறியடித்து வெற்றி கொள்கின்றான். போதி தர்மன் என்ற துறவி, சர்க்கஸ் கலைஞர் என இரண்டு வேடங்களில் நடித்து இருக்கிறார் சூர்யா. போதி தர்மனாக அறிமுகமாகிற காட்சியில் வியக்க வைக்கிறார் சூர்யா. முறுக்கேறிய உடம்பு, மிரள வைக்கும் பார்வை, பதற வைக்கும் சண்டை என அபாரமான திறமைகளை வெளிப்படுத்தி அந்தப் பாத்திரத்துக்கு வலிமை சேர்க்கிறார். அதேபோல சர்க்கஸ் கலைஞனாக ஆடிப்பாடி, காதல் கொண்டு விளையாட்டுப் பிள்ளையாகவும் கலக்குகிறார். பிறகு வில்லனைக் கண்டு அதிர்ந்து அவனைக் கண்டு ஓடும்போது சராசரி இளைஞனாகப் பளிச்சிடுகிறார். புலிகளின் தலைவர் பிரபாகரன் போல திருப்பி அடிப்பேன் என்று உரக்கப் பேசுகிற போது படத்தைப் பார்க்கின்ற ரசிகர்களுக்கு உரமேற்றுகின்றது. சண்டைக் காட்சியிலும் நடனத்திலும் அவரை அடிக்க முடியாது என்கிற அளவுக்கு அவரது திறமை பளிச்சிடுகிறது. ஆராய்ச்சி மாணவி சுபாவாக வரும் ஸ்ருதி,புலிக்குப் பிறந்தது பூனையாகாது என் பார்களே அதேபோல கமல் மகள் என்பதை நினைவுபடுத்துவதோடு அந்தப் பாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். சீன இளைஞராக வரும் Johnny, Tri Nguyen அடேங்கப்பா அதிரடி மிரட்டல்தான் அவரது பாவையும் சண்டையும் பயப்பீதியை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு காட்சியையும் வியக்க வைக்கும் அளவுக்குப் படமாக்கி இருக்கிறார் ஒளிப்பதிவாளர் ரவி. கே,சந்திரன். பாடல் இசையிலும் பின்னணி இசையிலும் ரதம் சேர்க்கிறது. ஹரிஸ் ஜெயராஜ்ஜின் இசையமைப்பில் பா.விஜயின் ''இன்னும் என்ன தோழா' என்கிற பாடல் மனதில் உற்சாகத்தை ஊட்டித் தைரியத்தை வர வைக்கிறது. ''செல்லலேலமா' பாடலில் இளமைத்துள்ளல் தெரிகிறது. காஞ்சிபுரத்தில் வாழ்ந்த போதிதர்மன் என்ற துறவிக்கு சீனாவில் கோவில் கட்டி சாமியாக வணங்கி வந்ததையும் அவரது வாழ்க்கையைத் தற்காலத்தில் நடக்கும் ஒரு கதையுடன் இணைத்துப் படமாக்கி இருக்கிறார் இயக்குநர். ஏ.ஆர்.முருகதாஸ். படமாக்கிய விதமும் கதை சொன்ன விதமும் தமிழர்களின் மனதில் திமிர் வரக் கூடியதாக அமைந்திருக்கிறது. தமிழர்களின் வீரத்தைக் காட்சிகளாக வெளிப் படுத்திய திறமை இயக்குநரையே சேரும்.

இந்தப் படத்தில் 'இன்னும் என்ன தோழா' பாடலில் எடுக்கப்பட்ட காட்சிகள் வன்னி இறுதிப் போரில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை வெளிப்படுத்தியும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை வெளிப்படுத்தியும் இருப்பது ஈழத் தமிழர்கள் பார்க்க வேண்டிய படமாக உள்ளது. போர் முனைகளில் புலிகளின் போராட்ட கள முனைக் காட்சிகள் பாடல்களில் பட்டுத் தெரிகின்றன.

இறுதிப் போரில் காயப்பட்டும், செத்த தமிழர்களின் இரத்தத்தைத் தொட்டுப் பார்க்கிறது 'ஏழாம் அறிவு'. படத்தைப் பார்க்கின்ற ஒவ்வொரு தமிழனுக்கும் ஆறு அறிவு இருந்து என்ன பிரயோசனம் என்று எண்ணத் தோன்ற வைக்கும் இந்தப் படத்தைப் பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் இருந்தாலும் ஏகோபித்த பாராட்டுப் பெற்று வருகிறது. தமிழர்கள் குறித்த விசனத்துக்குத்தான் தியேட்டரே அதிருகிறது. ஒட்டு மொத்த பார்வையாளர்களும் உணர்ச்சிவசப்பட வைக்கும் வசனத்தை ஒப்புக்கு ஒப்பிக்காமல் உணர்ச்சிப் பிழம்பாக உச்சரித்திருக்கிறார் சூர்யா. புத்தருக்கு இணையானவர் போதி தர்மர் என்ற வசனத்துக்காகவும் திருப்பி அடிக்கனும் என்ற வசனத்துக்காகவும் ஒன்பது நாடுகள் ஒன்று சேர்ந்து அடிப்பது வீரமல்ல துரோகம் என்ற உயர் வசனத்துக்காகவும் இந்தப் படம் சினிமா வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. வன்னி மக்களின் சோகம் ஒரு பெரிய வடுவாக மாறியுள்ளது. அதனை யாராலும் மறக்க முடியாத நிலையில் இந்தப் படத்தைப் பார்க்கின்ற போது இந்தக் கோரம் நிறைந்த நாள்கள் கண்களில் ஊஞ்சலாடும்.

- குமார்.

# உங்களை டெங்கு நோயிலிருந்து காப்பாற்றச் சில வழிமுறைகள்

யாழ்.குடாநாட்டில் டெங்கு வைரஸ் நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதாகச் சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியது அவசரமானதும் அவசியமானதுமான தேவை எழுந்துள்ளது.

மக்கள் இந்த நோயால் பீடிக்கப்படுவதைத் தடுப்பதற்குத் தனிப்பட்ட ரீதியில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் நோய் வந்தால் அதனைக் குணப்படுத்துவதற்குச் செய்ய வேண்டிய கருமங்களையும் குறிப்பு வடிவத்திலும் இலகு முறையில் வடித்துத் தருகிறோம்.



**டெங்குத் தொற்று என்பது என்ன?**

இது நுளம்பால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய், இது இரு வகையாக வெளிப்படும்.

டெங்குக் காய்ச்சல் Denque Fever, இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சல் Denque Haemorhagic Fever

**டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்**

சடுதியாக ஏற்படும் காய்ச்சல், கடுமையான தலையிடி, கண்ணின் பிற்பகுதியில் நோ, தசை, எலும்பு, மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ.

**இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சலின் குணங்குறிகள்**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் உறுப்புக்களில் இரத்தம் கசிதலும் அதிர்ச்சி நிலை ஏற்படும் நிலையிலும் சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாள்களில் காணப்படும் இந்த நிலை 5-6 நாள்கள் (103 பாகை - 105 பாகை) தொடரும். 3-4 நாள்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில் நோயாளிக்குப் பல வீனமான நிலை ஏற்பட்டு இயலாத்தன்மை ஏற்படும். இந்த நோய் மக்களிடையே சடுதியாகப் பெருகிப் பலரைத் தாக்கும் சக்தி கொண்டது.

**டெங்குக் காய்ச்சலை அடையாளம் காணும் வழிகள்**

சடுதியாக ஏற்படும் காய்ச்சல், கடுமையான தலையிடி குறிப்பாக நெற்றிப் பகுதிகளில், கண்களில் பிற்பகுதிகளில் கடும் நோவும் கண்களை அசைக்கும் போது நோவு கூடுதலும், உடலின் முழுப்பகுதிகளிலும் மூட்டுக்களி லும் நோ, ஓங்காளம், வாந்தியெடுத்தல்.

**கடுமையான டெங்கு, இரத்த தாக்க நிலை அதிர்ச்சி நிலையை எவ்வாறு இனங்காண்பது**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் கீழே தரப்படும் ஏதாவது 1 முதல் 2 வரையான குணங்குறிகள் இருப்பின் ஆபத்து நிலையாகக் கணிக்கலாம்.

1. கடுமையான தொடர்ச்சியான வயிற்று நோ அல்லது வலி, மூக்கு, வாய், முரசு, தோலின் அடியில் குருதி ஒழுக்குக் காணப்படுதல், அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல், மலம் கறுப்பு நிறமாக வெளியேறுதல், நாவரட்சி மற்றும் தண்ணீர் தாகம் ஏற்படல், வெளிறிய/ குளிர்ந்த நிலையில் தோல் காணப்படல்.

**நோயை இனங்காணும் முறைகள்**

சுலபமாகச் செய்யக் கூடிய ஆய்வு முறைகள் (Platelet Count, Pcv count, Tourniquet test, Haematocrit test, Denque test) எவ்வாறேனும் மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் இருப்பின் சிகிச்சையை உடன் மேற்கொள்ள வேண்டும்.

**சிகிச்சை முறைகள்**

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியம். ஆரம்பத்தில் சிகிச்சை மேற்கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும் உயிர் இழப்பையும் தவிர்க்கலாம். அஸ்பிரின் (Aspirin), புறுபென் (Brufen) கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அவை நோயை சிக்கலாக்கும். பரசெற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

கடுமையான வயிற்று நோ, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல், கடும் வியர்வை வெளியேறுதல், மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக் கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள். ஆகவே அந்தவேளையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.

**டெங்கு பற்றிய அடிப்படைத் தகவல்கள்**

1. Aedes வகை நுளம்பால் இந்த நோய்த் தொற்று ஏற்படலாம்.

2. ஒரு நோயாளியைக் கடித்த நுளம்பு ஒரு சுகதேகியைக் கடித்தால் அவருக்கு 5-7 நாள்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம்.

**நுளம்பு பெருகும் இடங்கள்**

நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப்போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும் தண்ணீர்த் தொட்டிகளிலும் மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும். தண்ணீரைத் தேக்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 7 நாள்களுக்கு ஒருமுறை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்துப் பெருகும்.

**நுளம்பு கடிப்பதைத் தவிர்த்தல்**

டெங்கு நுளம்பு பகலில் கடிக்கும். அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும், முழு நீள மேற்சட்டை மற்றும் கால்களைப் பாதுகாக்கும் வகையில் உடை அணிதல் வேண்டும் , நுளம்பு வராமல் தடுக்கும் மருந்து களைப் பாவித்தல், நுளம்புச் சுருள் மற்றும் அழிக்கும் இரசாயணப் பொருள்களைப் பாவித்தல் , நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல், குறிப்பாகக் குழந்தைகள், சிறார்களுக்கு) Permithrin மருந்து தெளித்த நுளம்பு வலைகள் மற்றும் கதவு, யன்னல் வலைகளைப் பயன்படுத்தல், நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல், நோயாளியிடமிருந்து ஏனையோருக்குப் பரவாமல் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

**நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல்**

டெங்குநோயைப் பரப்பும் நுளம்புகள் ஒவ்வொரு வீட்டின் சுற்றுப் புறத்திலுள்ள நீர் தேங்கும் இடங்களில் இருந்து பரவுகின்றன.அதனைத் தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு

அ) வீட்டுச் சூழலிலுள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல்.

ஆ) வீட்டுக்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல்.

இ) தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடி வைத்தல்.

ஈ) பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களைச் சுற்றுச் சூழலிலிருந்து அகற்றி அழித்தல்.

*மேலே தெரிவிக்கப்பட்டிருந்த முறைகளைக் கவனத்தில் எடுத்து நாம் எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.*

வைத்திய கலாநிதி
இ.தெய்வேந்திரன்
முன்னாள் பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர்

# நாடறிந்த நாட்டாரிசைக் கலைஞர்
# நடேசன் சிவசண்முகமூர்த்தி

மனிதனின் தோற்றத்திலிருந்து வளர்ச்சி வரை சமமான வளர்ச்சி கண்டு அவனிடமிருந்து பிரித்தெடுக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்து காணப்படுவது கலைகளாகும். இவற்றுள் மனிதனின் அனைத்து விதமான உணர்வுகளையும் படம் பிடித்துக் காட்டவல்ல கலைகளாக இருப்பவை நாட்டார் கலைகளே என்பதில் ஐயமில்லை. செந்நெறிக் கலைகளின் தாயாக விளங்குவது நாட்டார் வழக்கியற்றுகளே என்பது உலகோர் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். மண்வாசனை கொண்ட இக்கலைகள் பாடலாகவும் ஆடலாகவும் கருவி இசையாகவும் பல வகையாக எம்மை மகிழ்வித்து வருகின்றன. அந்த வகையில் ஈழத்தின் நாட்டார் இசைக் கலைஞராகக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருவதுடன் இசைச் சொற்பொழிவாளராகவும் எழுத்தாளராகவும் விளங்குபவர் கிராமிய இசையரசு நடேசன் சிவசண்முகமூர்த்தி.

காலம் சென்ற நடேசன் வள்ளியம்மை தம்பதியரின் மகனாக 08.02.1942 இல் சுழிபுரத்தில் இவர் பிறந்தார். நாட்டார் இசையில் வல்லவர்களாக விளங்கிய தனது பெற்றோரிடம் இக்கலையைக் கற்றுக்கொண்ட இவர் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையிலும் விக்ரோறியா கந்தவரோதயா கல்லூரிகளிலும் கற்றவர்.

திருமுறையிசை செவ்விசை போன்ற துறைகளிலும் ஈடுபட்டு வந்த இவர் தமிழ் சம்கிருதம் போன்ற மொழிகளில் பண்டிதர் கற்கை நெறியையும் பள்ளிப் பருவத்திலேயே நிறைவு செய்து 1963இல் பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று 1966இல் கலைப்பட்டதாரியாக உயர்வு கண்டார். பல்கலைக் கழகத்தில் கற்ற காலத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் தயாரிக்கப்பட்ட இராவணேசன், வாலிவதை, நொண்டி நாடகம் போன்ற கூத்துக்களின் பிற்பாட்டுப் பாடுபவராகவும் பிரதான ஏடாளராகவும் பணியாற்றி பல்துறை அனுபவங்களையும் பெற்றுக் கொண்டார்.

1967இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்க் கிராம சஞ்சிகை நிகழ்வின் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்ற இவர் ஏராளமான நாட்டார் இசை நிகழ்வுகளை அறிமுகம் செய்ததுடன் பொன்நொச்சிக் குளம் என்னும் சு.வேலுப்பிள்ளையின் நாடகத்தைத் தயாரித்து 160 பாகங்களாக வாரந்தோறும் ஒலிபரப்பித் தமிழ் நேயர்களின் வரவேற்பைப் பெற்றுக்கொண்டதுடன் சுயமாக இயற்றிய மெல்லிசைப் பாடல்கள் பலவற்றையும் வானொலி நிகழ்வுக்காகப் பாடியவர். இதன் பின் 1970இல் ஆசிரிய நியமனம் பெற்று சம்மாந்துறை மூதுர் பளை மகா வித்தியாலயங்களிலும் வட்டு. திருநாவுக்கரசு வித்தியாசாலை விக்ரோறியாக் கல்லூரி போன்ற கல்விச் சாலைகளிலும் தமிழ், சம்கிருதம், இந்து கலாச்சாரம், புவியியல் போன்ற பாடங்களுக்கான ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

1990ஆம் ஆண்டிலிருந்து ஆசிரிய ஆலோசகராகவும் பணியாற்றி 2002இல் ஓய்வு பெற்றவர்.

ஒன்பதாவது வயதில் இலங்கை வானொலி நிகழ்வுக்காக நாட்டார் பாடல்களைப் பாடத் தொடங்கிய இவர் தனது ஆழமான தேடலின் ஊடாகவும் கடின உழைப்பாலும் பல மணிநேரம் கொண்ட நாட்டார் பாடல் நிகழ்வுகளை வழங்கக் கூடிய அளவுக்குத் தன்னை வளப்படுத்திக்கொண்டார். 1966, 1974, 1987ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் நாட்டார் இசை நிகழ்வுகளையும் இத்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்து நாட்டார் கலைகளின் தனித்துவத்தை அனைவருக்கும் உணர்த்திய ஒருவராகவும் இவர் காணப்படுகின்றார்.

**சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்**

**16**

ஈழத்தில் தமிழர் வாழும் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று நிகழ்வுகளை வழங்கிய இவர் மலேசியா, சிங்கப்பூர், சுவிஸ், ஜேர்மன், லண்டன், பிரான்ஸ், இந்தியா, தாய்லாந்து போன்ற பல வெளிநாடுகளிலும் இத்துறையில் ஏராளமான நிகழ்வுகளை வழங்கிய பெருமைக்குரியவர்.

கனதியான குரல் வளம் கொண்ட இவர் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் நாட்டாரிசை நிகழ்வுகளையும் கருத்துரைகளையும் இன்று வரை சிறப்புடன் வழங்கி வருவதுடன் பல நாட்டாரிசை இறுவட்டுக்களையும் வெளியிட்டுத் தனது துறைசார்ந்த அனுபவத்தை நிலைநாட்டியுள்ளார்.

தமிழ் மொழியிலும் வட மொழியிலும் தேர்ச்சி கொண்ட இவர் இசைச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதிலும் வல்லவராகத் திகழ்கின்றார். திருமுருக கிருபானந்த வாரியார் ஈழத்துக்கு வருகை தந்திருந்த காலங்களில் அவருடன் தங்கியிருந்து இக்கலையைச் சிறு வயதிலேயே கற்றுத் தனது பதினாறாவது வயதிலிருந்து இசைச் சொற்பொழிவாளராகவும் பணியாற்றி வருகின்றார். சமய வரலாறுகளையும் புராண இதிகாச வரலாறுகளையும் அழகுறத் தமிழில் இசைச் சொற்பொழிவாக ஆற்றுகைப்படுத்தி வருவதுடன் நாடகம் கூத்து கவியரங்கம் போன்ற துறைகளிலும் ஈடுபாடு கொண்டவராகத் திகழ்கிறார். தனது பிள்ளைகளையும் கலைத்துறையில் வல்லவர்களாக உருவாக்கியிருக்கும் இவர் பலவிதமான பட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஒருவராகவும் காணப்படுகின்றார்.

மனிதனின் பிறப்பு முதல் இறப்புவரை வரும் அனைத்துச் சடங்குகளிலும் இசை என்னும் புனிதக் கலை இரண்டறக் கலந்து நிற்கின்றது. குறிப்பாக நாட்டார் இசை என்பது உணர்ச்சி பொங்கும் கலை வடிவமாகவும் செந்நெறிக் கலைகளை உலகிலே பெருகவைத்த விளை நிலமாகவும் விளங்குகின்றது. தாலாட்டிலிருந்து ஒப்பாரி வரையாக எம்மிடம்



இருக்கின்ற மரபு வழியான நாட்டார் பாடல்கள் இசைத் தமிழின் செழுமையையும் எடுத்துரைப்பனவாகக் காணப்படுகின்றன.

இக்கலையில் தற்கால இளம் சந்ததியினரின் ஈடுபாடு குறைவடைந்தே வருகின்றது. இசைக் கலைஞர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வோரும் இத்துறையின்பால் நாட்டம் அற்றவர்களாகவே இருந்து வருகின்றனர்.

நிறுவன மயப்படுத்தி நுண்கலைகளைப் பேணிப் பாதுகாக்கப் போவதாகக் கூறிக்கொள்ளும் உயர் நிறுவனத்தார் கூட நாட்டார் கலைகளை மதிப்பவர்

**சொவியான் தவமைந்தன்**

களாகத் தெரியவில்லை.

நான்கு ஆண்டுகள் இசை கற்கும் மாணவர்களுக்கு ஒரு நாட்டார் பாடலையாவது கற்பிக்கக் கூடிய வகையில் அவர்களது பாடத்திட்டம் அமைக்கப்படாமை கவலைக்குரிய விடயமாகும்.

ஆழகிய கட்டடங்களையும் மாணவர் எண்ணிக்கையையும் அதிகரிப்பதில் ஈடுபாடு கொண்டிருக்கும் உயர் அதிகாரிகள் தமிழர்களின் முதுசொத்தாக விளங்கும் நாட்டார் கலைகளை வளர்த்தெடுக்கவும் அவற்றை ஆவணப்படுத்தவும் முன்வரவேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ✱

# பூநாறி பட்டைக் குடிநீர் வயிற்றுப் பொருமலுக்கு சிறந்தது

**பூநாறி**

வேறு பெயர் பெருமரம், பீநாறி, பூதகரப்பான்
தாவரவியற் பெயர்- Sterculia Foetida
(ஸ்ரேகுலியா ஃபீற்றிடா)
குடும்பம் Sterculiaceae (ஸ்ரேகுலியேசியே)
சிங்களப் பெயர் லபு
ஆங்கிலப் பெயர் Stinking Sterculia

இது மிகவும் உயரமாக வளர்வதால் பெருமரம் எனப்படுகிறது. பூக்கள் ஒருவித துர்நாற்றம் வீசுவதால் பீ நாறி எனப்படுகிறது. நீண்ட தண்டு அடிப்புறத்தில் உதைப்பு வேர்களால் தாங்கப்படும்



கூட்டிலைகள். அங்கையுருவானவை. சிற்றிலைகள் நீள்வட்டமாகவும் நுனி கூராகவும் இருக்கும் பூக்கள் மஞ்சள், செம்மஞ்சள் அல்லது ஊதா நிறமாக பூந்துணரில் காணப்படும் கனிகள் சிவப்பு நிறம்.

இலை அல்லது பட்டையக் குடிநீர் செய்து பருகிவர சுரம் தணியும் சிறுநீர் நன்கு வெளியேறும்.

பட்டையைக் குடிநீரிட்டுக் கொடுக்க கழிச்சல், வயிற்றுப் பொருமல் என்பன நீங்கும்.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

இதன் விதையிலிருந்து எடுக்கப் படும் எண்ணெயைச் சொறி, சிரங் குக்கும் பூசி வரமாறும்.

**கோங்கு**

வேறு பெயர் கோங்கம், கொங்கு, கணிகாரம், தணக்கு காட்டிலவு, மஞ்சள் இலவு, கோங்கிலவு, கன்னிகாரம்.
குடும்பம்-Bixaceae (பிக்சோசியே)
சிங்களப் பெயர்- எல- இம்புல்கினிஹிரியா
சமஸ்கிருதப் பெயர்- கிரி சால்மலிக, சில கார்ப்பாச
ஆங்கிலப் பெயர் - Yellow silk cotton

"விரிபூங்கோங்கம்" என்று குறிஞ்சிப் பாட்டில் சிறப்பிக்கப்படும் கோங்கு சிலப்பதிகாரத்தில் கன்னிகாரம் எனப்படுகிறது. இது மரவகுப்புக்குரியது. தனியிலைகள் அங்கையுருவானவை பருத்தியிலை போன்றவை. தனிப் பூக்கள் பெரியவை,



பொன்னிறமானவை (மஞ்சள் நிறம்) தண்டிலிருந்து மஞ்சள் நிறப் பிசின் வடியும்.

இதன் பட்டையைக் குடிநீர் இட்டு வாய் கொப்பளித்து வரக் கடுமையான பல்வலி, பல்லீறுகளில் இரத்தம் வடிதல் என்பன மாறும்.

பட்டைக் குடிநீரை காலை, மாலை 15- 30 மி.லீ அளவில் பருகிவர சிறுநீர்க் கடுப்பு , வெள்ளைபடுதல் என்பன நீங்கும்.



**Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 186

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | 5 | |
| 6 | | | | 7 | 8 | | |
| | | 9 | 10 | | | | |
| 11 | 12 | | | | 13 | | |
| | | | 14 | 15 | | | 16 |
| 17 | | 18 | | | | 19 | |
| 20 | | | | | 21 | | |
| 22 | | | | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம்போட்டி - 186**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 09.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.186 இற்கான விடைகள் 13-11-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

### இடமிருந்து வலம்

01. இந்த வலயங்களால் தான் எப்போதும் பிரச்சினை
05. காயம்
06. வேகம்
07. ஐம்புலனகளையும் அடக்கி ஒரு மனதாக இரு
09. இல்லாமல் ஒழித்தல்/ உடைத்தல்
11. மகள்
13. ஓர் அசைச்சொல். தங்களை/ தங்களுடைய தைக் குறிக்கும்.
14. பெண்
17. கூடிய
19. கழித்தல் குறி
20. வயலின் எல்லையில் இருப்பது
21. கையில் பத்து - காலில் பத்து
22. பூட்டான் தலைநகர்
23. இது பிடித்த பிடியை இலேசில் நழுவவிடாது

### மேலிருந்து கீழ்

01. உபயோகிப்பு
02. பெரியவர், மேலானவர் என்று பொருள்
03. சுமத்துதல்
04. சுட்சுமமான வினா
05. தூய்மை/ பரிசுத்தம்
08. பாடல் புனைதல்
10. பாடல்
12. நரி இதில் தேர்ந்தது
15. தாளப் பிரமாணம்/ கைம்பெண்
16. தன்மை
17. அவசரதததுடன் கூடிய பதற்றம்/ சிரமப்படல்
18. தடி/ பொல்லு
19. மாலை வகைகளில் ஒன்று
21. பிடியைத் தளர்த்து

### பாராட்டுப் பெறுவோர்

**வி. அன்ரனிற்றா,**
இல.31, புதுவீதி, முதலாம் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

**சசிகலா குகதாஸ்,**
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.

**திருமதி ப.பொ.இராசதுரை,**
இல.27/17 புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 184 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) அமுதம் (4) தாமதி (7) திரளை (8) அகண்ட (9) கண் (10) பழம் (11) பாசாங்கு (14) அடுக்கு (15) முழுகு (17) கனிதல் (19) பகடை (21) விலைமாசி (23) விதி (24) இல். (25) வில்.

### மேலிருந்து கீழ்

(1) அதிக (2) முரண்பாடு (3) தளை (4) தாகம். (5) மண் (6) திடல் (8) அழகு (10) பங்குனி (12) சாக்கடை (13) குழு (14) அனுபவி (15) முல்லை (16) குரிசில் (18) தவில் (20) கதி (22) வாவி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 184 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **இ.திருநிமாரன்,** இல. 37/1 சிவநகர், பரந்தன்.

2 ஆம் பரிசு — **திருமதி வி.தவநேசன்,** யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை

3 ஆம் பரிசு — **த.டிலக்சனா,** மு/ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை, புத்துவெட்டுவான்.

4 ஆம் பரிசு — **சு.கதிர்காமதேவன்,** இல. 61, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு — **இ.அரிநயன்,** இல.19, புலவனார் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# விடிவுக்கான...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையைத்தான் உணரவைக்கின்றன. தன் அடி மனதில் எழுந்த உணர்வலைகளை எண்ணிப் பார்த்தாள் சுரேகா.

தன் நண்பனின் பிரிவை எண்ணிக் கலங்கிய சுந்தர் இப்படி எத்தனையோ செய்திகளை சிறுகச் சேகரித்து தன் பத்திரிகைக்காக நாளும் பொழுதும் தன்னையே அர்ப்பணித்து தன் பணிகளை அதன் பலாபலன்களைப் பத்திரிகையில் எண்ணக் கருவாக்கிய செய்திகள் தாம் எத்தனை? ஆனால் அதே பத்திரிகையில் அவனின் மரணச் செய்தியை அறிந்ததும் சுந்தர் அதிர்ந்து போனான் எப்படியிருந்தாலும் மக்களின் ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சிக்காக அதன் கண்ணைத் திறக்கும் திறவு கோலாக அமையும் பத்திரிகைச் சுதந்திரம் எவராலும் மதிக்கப்படல் வேண்டும்.

புத்திஜீவிகளால்தான் நாட்டில் சுபீட்சமேயுருவாகின்றது. ஜனநாயகத்தை மதியாத அராஜகங்களும் அட்டூழியங்களும் தலை தூக்கும் போது அங்கே தான் முடிவுக்கும் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன.

இன்று பரமசிவத்துடன் முடியப் போகும் மரணம் மட்டுமல்ல இது. தொடரும் அவன் பணிக்காக எத்தனையோ பரமசிவங்கள் காத்துக்கிடக்கின்றனர்.

தன்னை ஒருவாறு சுதாகரித்துக் கொண்ட சுந்தர் பரமசிவத்தின் இழப்பால் தன்னையே கணநேரம் மறந்துவிட்ட பீதியில் இலயித்திருந்தார். அலறும் தொலைபேசியைக் கூட அலட்சியம் செய்யும் அவர் முன்னிலையில் மனைவி தொலைபேசியை அணுகி கையிலெடுத்தாள். ''என்ன பாருங்கோ அருணாசலம் வாத்தியார் கதைக்கிறார். பரமசிவத்தின் நல்லடக்கம் பத்துமணிக்கு அவரது வீட்டிலை நடக்குதாம்.

அதுதான் வந்து உங்களையும் கூட்டிக் கொண்டு போக வாறாராம் என்றவளுக்கு சுந்தர் அதன் தாக்கத்தால் மீள முடியாத, ஈடுசெய்ய முடியாத இழப்பொன்றைச் சந்தித்துச் ஆற்ற இயலாத துயரத்தில் அமிழ்ந்து தவித்தான்.

தன் தேசத்தையும் ஊடகங்களையும் இரு கண்களாகக் காணும் சுந்தர் போன்ற உண்மையான விசுவாசிகள் இந்த மண்ணில் ஜீவிக்கும்வரை ஊடகங்களும் உண்மைகளும் ஒரு போதும் உறங்குவதில்லைத்தான். மீண்டும் ஒலித்த தொலைபேசி மணியைக் கேட்டு அதனைக் கையிலெடுத்த சுரேகா துடித்துப் போனாள்.

பரமசிவத்தாரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற சிவபாதத்தை இனந்தெரியாதோர் மறைந்திருந்து தாக்கினர். பலத்த காயத்துக்குள்ளாகிய சிவபாதம் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருக்கிறாராம்.

சுரேகா அந்தரப்பட்டாள் ''நீங்களும் எங்க? அங்க செத்த வீட்டுக்கே போகப் போறீங்க அங்க போன சிவபாதத்தாரையும் அடிச்சுப் போட்டாங்களாம்'' என்றாள் பரபரப்போடு.

அதனைக் கேட்ட சுந்தர் அதிர்ச்சியடைந்தார். உண்மையை அழிக்கப் பொய்யர்களின் கூட்டம் பெருகிவிட்டது.

பயந்து பயந்து நீதியையும் நியாயத்தையும் தொலைத்து அநியாயக் காரனையும் அக்கிரமக்காரரையும் வளர்வதற்கு வாய்ப்பளித்து விட்டோமே! என்றும் அங்கலாய்த்தார். சுரேகாவோ ''நீங்கள் அங்க போகத் தேவையில்லை. செத்த வீடுதானே பிறகு ஆறுதலாகப் பேசலாம்'' என்று கூறி பரமசிவத்தாரின் மரணச்சடங்கில் கலந்து கொள்ள எண்ணியிருந்த சுந்தரத்தாரைத் தடுத்து நிறுத்த முயன்றாள். அவளுக்கும் இனந்தெரியாதோர் பற்றிய பயம் பற்றிக் கொண்டது.

அனைத்தையும்கேட்டுச் சிறிது நேரம் எதுவுமே பேசாது அமைதியடைந்தவர் உணர்ச்சிகளின் உந்தல்களால் வேதனையுற்று வேறெதுவும் சிந்திக் காமல் இருக்கையை விட்டெழுந்தான். சந்தர்ப்பத்தைப் புரிந்து கொண்ட சுரேகா என்ன என்ன.. வந்து வந்து.. நீங்கள்.. புறப்பட ஆயத்தமா? என்றவளின் வார்த்தைக்குப் பதிலாக தன் நண்பனின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்வதற்காக சுந்தர் வீதியில் இறங் கினான்.

மிக விரைவாகவே அங்கு போய்ச் சேர்ந்தவரின் கண்களில் விரிந்த மலர்ச்சி! பரமசிவத்தாரின் மரணச் சடங்கில் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் ஊடக சுதந்திரத்தின் உண்மை ஒளியாகப் பிரகாசிக்க அஞ்சாது தீமையை எதிர்க்கும் பேனாக்களின் அணிவகுப்பாகத் தோன்றியது.

# நித்தியகல்யாணி

மணல் பாங்கான இடத்திலும், தரிசு நிலங்களிலும், தானாக வளரும் தாவரம் நித்திய கல்யாணி. இது எல்லாப் பருவங்களிலும் பூக்கும் தன்மையுடையது. அழகுத் தாவரமாக தோட்டங்களில் வளர்க்கப் படுகிறது.

நித்தியகல்யணியின் பிறப்பிடம் மடகாஸ்கர். மேலும் இந்தோனேசியா, இஸ்ரேல், தென் ஆபிரிக்கா மற்றும் அமெரிக்காவில் பரவியுள்ளன. இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, அஸ்ஸாம், மத்தியப் பிரதேசம், மேற்கு வங்காளம் குஜராத் ஆகிய மாநிலங்களில் பயிரிடப்படுகிறது. தமிழ் நாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, விருது நகர், இராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட் டங்களில் தரிசு நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

ஐந்து இதழ் களையுடைய வெண்மை அல்லது இளஞ்சிவப்பு நிற மலர்களையும் மாற்றடுக்கில் அமைந்த இலைகளையும் உடைய குறுஞ்செடியாகும். இதன் இலை கசப்பாக இருப்பதால் ஆடுமாடுகள் இதனை உட்கொள்வதில்லை. இதனை சுடுகாட்டுப் பூ, கல்லறைப் பூ, பெரிவீன்க்கில் மதுக்கரை, முதலிய பல பெயர்களில் அழைக்கின்றனர். நித்திய கல்யாணியின் இலைகள், பூ, தண்டு மற்றும் வேர்கள் மருத்துவ பயன் கொண்டவை.

இது இரத்த அழுத்தம், மனரீதியான நோய்களைக் குணப்படுத்தும். மாதவிடாயின் போது ஏற்படும் நோய்கள் குணமடையும். நித்தியக் கல்யாணி நாடி நடையைச் சமப்படுத்தவும், நீரிழிவைக் குறைக்கவும் மருந்தாகப் பயன்படுத்தலாம். மற்றும் அழகு சாதனப் பொருட்கள் தயாரிப்பில் பயன் படுத்தப்படுகிறது.

நித்யகல்யாணியின் ஐந்தாறு பூக்களை அரை லீற்றர் நீரில் போட்டுக் காய்ச்சி கால் லீற்றராக்கி ஒரு நாளைக்கு 4 வேளை கொடுக்க அதிக தாகம், அதிக சிறுநீர்போக்கு அதனால் ஏற்படும் உடல் பலவீனம் சரியாகும். அதிக பசி மற்றும் பசியின்மையும் தீரும். சித்த மருத்துவத்தில் நீரிழிவு நோய்க்கு மருந்தாக பயன்படுகிறது. நீரிழிவு நோயாளிகள் இதன் வேர்ச் சூரணத்தை ஒரு சிட்டிகை எடுத்து வெந்நீரில் கலந்து 2, 3 முறை உட்கொண்டால் சிறுநீர்ச் சர்க்கரை குறைந்து நோய் கட்டுப்படும்.

# நித்தியசுகத்தை நோக்கி...

உதயன் வைத்தியமலர் 42

## உயிர்ச்சத்து K

1. இது கொழுப்பில் கரையும் விற்றமின்களில் ஒன்று. ஆகவே இதன் அகத்துறிஞ்சலுக்கு பித்த உப்புக்கள் தேவை.
2. இதற்குக் குருதியைத் திரளச் செய்யும் சக்தி இருப்பதால் ''திரளும் விற்றமின்'' என அழைக்கப்படுகிறது.
3. மருத்துவத் தேவைகளுக்காக நீரில் கரையக்கூடிய வகை ஒன்று தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது.
4. இது குருதியுறையா நோயிலிருந்து பாதுகாக்கும், எலும்பு உருவாக்கத்துக்கும் சிறிதளவில் பயன்படுகிறது.
5. இதன் குறைபாட்டால் குருதி உறைய எடுக்கும் நேரம் அதிகரிக்கும். ஆகவே குருதியிழப்பு அதிகளவில் ஏற்படும்.
6. உடலில் கொழுப்பு அகத்துறிஞ்சல் பாதிக்கப்பட்டால் இதன் அகத்துறிஞ்சல் பாதிக்கப்படும்.
7. வயது வந்தவர்களில் ஈரல், சதையின் தொழிற்பாடு பாதிப்படைவதால் இவ்வுயிர்ச் சத்துக்குறைபாடு ஏற்படும்.
8. பெருங்குடலில் உள்ள நுண்ணங்கிகளால் இது தொகுக்கப்படுவதால் நுண்ணுயிர்க் கொல்லிகள் உட்கொள்வதால் இதன் குறைபாடு ஏற்படலாம்.
9. உயிர்ச் சத்து K யின் அளவு குறையும் போது புரோத்துரம்பின் மற்றும் சில குருதியைத் திரளச் செய்யும் காரணிகளின் தொழிற்பாடு குறைவதே குருதியுறைய அதிக நேரம் எடுப்பதற்குக் காரணமாகும்.
10. சில குழந்தைகளில் இவ்வுயிர்ச் சத்துக் குறைவால் குருதிப் பெருக்கு ஏற்படக்கூடும். ஆகவே கர்ப்பிணிகளுக்கும் உடன் பிறந்த குழந்தைகளுக்கும் உயிர்ச்சத்து K கொடுப்பது நன்மை தரும்.
11. சத்திரசிகிச்சைக்குப் பின்பும் நோயாளிக்குக் கொடுப்பது வழக்கம்.
12. செங்கண்மாரி, பெருங்குடலழற்சிப்புண், குழிக்குடல் நோய் போன்ற நோயாளிகளுக்கு நீரில் கரையக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட உயிர்ச்சத்து K அல்லது பித்த உப்புக்களுடன் உயிர்ச்சத்து K ஐ சேர்த்துக் கொடுத்தல் வேண்டும்.
13. உயிர்ச்சத்து K இன் முக்கிய மூலங்கள் தாவரப் பதார்த்தங்கள்

**உ+ம்:- பச்சை இலை வகை, தாவர எண்ணெய், பசளி, கோவா, இலைக்கோவா, பழங்கள், கிழங்குகள், வேர்கள்.**

**இறைச்சி,பால்,முட்டை போன்றவற்றில் குறைந்த அளவு காணப்படுகின்றது.**

**பன்றியீரலில் அதிகளவு உயிர்ச்சத்து K காணப்படுகின்றது.**

14. எமது உடலிலேயே தொகுக்கப்படுவதால் இதன் தேவைப்பாடு அதாவது ஒரு நாளில் உள்ளெடுக்க வேண்டிய அளவு மிகக்குறைவு.

**செல்வி என். சாகினி,**
மருத்துவபீட மாணவி.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

**கேள்வி:** 40 வயது நிரம்பிய நான் பேன் தொல்லையால் நீண்ட காலமாக சிரமப்பட்டு வருகிறேன். இதிலிருந்து முற்றாக விடுதலை பெறுவதற்கு உங்கள் ஆலோசனையை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**பதில்:**

1. மனிதரில் வாழும் இரு வகைப் பேன்களில் ஒன்று தலைப்பேன் மற்றையது உடற்பேன் (சீலைப்பேன்). அதாவது தலைப் பகுதியில் வாழும் பேன் தலைப்பேன், இது தலைமயிரின் அடிப் பகுதியில் வாழுகின்றன. மற்றையது உடற்பேன் இதனை சீலைப்பேன் எனவும் அழைக்கப்படும். இது மனிதர்கள் உடுக்கும் உடைகள், துணிகள், படுக்கை விரிப் புக்கள், தலையணை உறை போன்றவற்றில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக் கின்றன. எனினும் மனித உடலில் தோலைத் துளைத்து குருதியை உறிஞ் சுகின்றன. இவ் இருவகைப் பேன்களுக்கு உருவ அமைப்பில் அதிக வித்தியாசம் இல்லை.

2. தலைப்பேன் பெண்களுக்கு அதிக அசௌகரியத்தையும் தொல்லையையும் கொடுக்கின்றன. தலைமயிர் அதிகமாகவும் அடர்த்தியாகவும் இருக்கும் தலைப் பகுதியில் இவைகள் வாழ்வதற்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றது. அத்துடன் இப் பேன்களின் ஆறுகால்களிலும் கொக்கி போன்ற அமைப்பு காணப்படுவதால் தலைமயிரை இறுகப் பிடித்தவண்ணம் இருக்கின்றன.

3. ஒருவருக்கு இருக்கும் தலைப்பேன் சீப்பு, றிபன், உடைகள், தலையணை உறை, படுக்கை விரிப்புகள் போன்றவற்றை மற்றவர்கள் பாவிக்கும் போதும், நெருக்கமாக வாழும் போதும் இலகுவாக மற்றவருக்கு பரவி விடுகின்றது.

4. தலைப்பேன்கள் வேகமாக முட்டையிடும். ''ஈர்'' என்று சொல்லப்படும் மேற்படி முட்டைகளை தலைமயிரின் அடிப் பகுதியில் இடுகின்றன. பொதுவாக மனிதர்களின் காதுகளின் பின்புற தலைமயிர் மற்றும் பிடரி பகுதி தலைமயிர் பகுதிகளில் அதிகமாக இடுகின்றன. ஒருபேன் நாள் ஒன்றுக்கு 4-10 வரையிலான முட்டைகளை இடுகின்றன. ஒரு பேனின் வாழ்நாளான 30-50 நாள்களாகும் 300 இற்கு மேற்பட்ட முட்டைகளை இடுகின்றது.

5. இவ்வாறு இடப்பட்ட முட்டைகள் 4-9 நாள்களுக்குள் குஞ்சுகளாக மாறி அடுத்த 10-15 நாள்களுக்குள் வளர்ந்த பேன்களாக மாறுகின்றன. இவற்றின் வாய்ப்பகுதி மனிதர்களின் தோலைத் துளைத்து குருதியை குடிக்கக்கூடிய அமைப்பில் காணப்படுகின்றன.

6. தலைப்பேனை ஒழிப்பதற்கு குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒரே தடவையில் மருத்துவம் பெறுவது நல்லது. ஏனெனில் இலகுவில் ஒருவரில் இருந்து மற்றவருக்கு தொற்றிக்கொள்ளகூடியது. உடற்சுத்தம் பேணுவது மிக அவசியம். அடிக்கடி ஷாம்பு, சோப் பாவித்து தலை கழுவுபவர்களின் தலைப் பகுதியில் பேன்கள் தொடர்ச்சியாக வாழ்வது கடினம்.

7. தலைப்பேனுக்கு வைத்தியர் சிபார்சு செய்த மருந்தை (Lotion) இரவில் படுக்கைக்கு போகுமுன்னர் தலைக்கு எண்ணெய் பூசுவது போல் தலைமயிரின் அடிப்பகுதியில் இருந்து நுனிப்பகுதிவரை பூசி தலையை துப்புரவான துணி அல்லது வெள்ளை துப்புரவான துணியால் கண்களுக்கு மேல் உள்ள பகுதியை சுற்றிக் கட்டுதல் நல்லது. கண், முகப் பகுதிகளுக்கு மருந்து பரவுவதை தடுப்பதற்கு இது உதவும் பின் காலையில் ஷாம்பு போட்டு தலைப் பகுதியை கழுவுதல் வேண்டும். அல்லது காலையில் மருந்தை பூசிய பின்பு 3 மணித்தியாலயங்களின் பின் தலையை ஷாம்பு போட்டுக் கழுவலாம்.

8. இந்தச் செயல்முறையை ஒருமுறை மட்டும் செய்தால் போதாது. ஏனெனில் பேனின் முட்டைகள் 4-5 நாள்களின் பின் பொரிக்கத் தொடங்கும். எனவே வாரத்துக்கு இரு தடவைகள் வீதம் நான்கு தடவைகள் செய்வது நல்லது.

9. தலைப்பேன், சீலைப்பேன் போன்றவற்றை முற்றாக ஒழிக்க பாவித்த உடைகள், தலையணை உறைகள், படுக்கை விரிப்புக்கள் போன்றவற்றை சுடுநீரில் அவித்து, துவைத்து, பின்பு நன்றாக காயவிட்டு உபயோகித்தல் நலது. அத்துடன் தங்கும் அறைகள் துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும். மெத்தைகளை நன்றாக சூரிய வெளிச்சத்தில் இருபுறமும் காயவிட்டபின்பு பாவித்தல் வேண்டும்.

**ச.சுதாகரன்**
தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை.

# மண்ணெண்ணெய் அருந்துதல்: குழந்தைகளுக்கு ஏற்படும் அவலம்

*(சென்ற வாரத்தொடர்ச்சி)*

**குழந்தைகள் மண்ணெண்ணெய் அருந்துவதற்கான சூழ்நிலைகள்**

01. நிறம் மண்ணென்னை குழந்தைகளை கவரக்கூடிய சிவப்பு அல்லது நீல நிறமானவை. சாதாரண குளிர்பானங்களும் இதே நிறமானவை.

02. மண்ணெண்ணையை இலகுவாகக் கிடைக்கும் வெற்று குளிர்பான போத்தல்களில் சேமித்து வைப்பது.

இந்த இரு விடயங்களும் சேர்ந்து தற்செயலாகக் குழந்தைகள் மண்ணெண்ணையை அருந்துவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கின்றன.

எமது பிரதேசத்தில் அனேகமானவர்கள் தற்காலிக வீடுகளில் வசிப்பதால், மண்ணெண்ணெய்யைச் சேமித்து வைக்கும் போத்தலை அல்லது கலன்களை சிறுவர்களுக்கு எட்டக்கூடிய இடத்தில் வைத்து விடுவார்கள். சிறுவர்கள் எதையும் ஆராயும் தன்மையுள்ளவர்கள் என்பதால் மண்ணெண்ணெய்யைக் குடித்து விடுவார்கள்.

**மண்ணெண்ணெய்யை அருந்தும் சூழ்நிலையைத் தடுக்கும் முறைகள்**

01. எந்தவொரு நச்சுப்பதார்த்தத்தையும், மருந்துகளையும் குழந்தைகளுக்கு எட்டக்கூடிய இடத்தில் வைக்கக் கூடாது என்பது பொதுவான விதிமுறை. அதேபோல் மண்ணெண்ணெய்யும் நஞ்சு என்பதால் அதனைப் பாதுகாப்பாக சிறுவர்களின் அல்லது குழந்தைகளின் கண்ணில்படாத அவர்களால் எடுக்க முடியாத இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

02. இயன்ற வரை மண்ணெண்ணெய்யைக் குளிர்பான போத்தல்களில் சேமித்து வைக்காமல் அதற்கான எரிபொருள் கொள்கலன்களில் இறுக்கமாக மூடி வைக்க வேண்டும்.

03. அனேகமான சந்தர்ப்பங்களில் பெற்றோர் மண்ணெண்ணெய்யை விளக்குக்கு அல்லது இயந்திரங்களுக்கு பாவித்து விட்டு நிலத்தில் போத்தலை வைத்து விடுவார்கள் அவர்களுடைய வேலைப்பளுவால் அதை மீண்டும் பாதுகாப்பாக வைக்க மறந்து விடும் சமயத்தில்தான், குழந்தைகள் தற்செயலாக அதை அருந்தி விடுகிறார்கள். எனவே பெற்றோர் அல்லது வீட்டிலுள்ள பெரியவர்கள் மிகவும் அவதானத்துடன் மண்ணெண்ணெய்யை குழந்தைகளின் கையில் கிடைக்காமல் எப்பொழுதும் பார்க்க வேண்டும்.

**தற்செயலாக குழந்தைகள் மண்ணெண்ணெய்யை அருந்திவிட்டால் செய்ய வேண்டியவை.**

வரும் முன் காப்பதுதான் எப்பொழுதும் சிறந்தது. எனினும் தற்செயலாக குழந்தைகள் மண்ணெண்ணையை அருந்திவிட்டால் ஒருபோதும் வாந்தி எடுக்கச் செய்யக் கூடாது. ஏனெனில் வாந்தி எடுக்கும் போது மண்ணெண்ணெய் சுவாசப்பைக்குள் செல்லச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

வயிற்றுக்குள் மண்ணெண்ணெய் இருப்பதைவிட சுவாசப்பைக்குள் சென்றால்தான் மிகவும் ஆபத்தானது. அனேகமாக குழந்தைகள் சொற்ப அளவில்தான் மண்ணெண்ணெய்யை அருந்தக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. ஏனெனில் அதன் மணம், சுவை நன்றாக இருக்காது.

**ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
குழந்தை வைத்திய நிபுணர்,
மாவட்ட பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

பொதுவாக வீட்டிலுள்ள பாட்டிமார் தாத்தமார்தான் வாந்தி எடுக்கச் செய்ய உப்புத்தண்ணீர், தேங்காய்ப்பால் போன்றவற்றை பருக்குகிறார்கள். இது மிகவும் ஆபத்தானது. எனவே பெற்றோர் உடனடியாக் குழந்தைகளை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அல்லது வைத்தியரிடம் கொண்டு செல்வதுதான் செய்ய வேண்டியது முதற்கடமை.

ஒரு போதும் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டாம், அல்லது உடனடியாக குடிப்பதற்கு எதையும் கொடுக்க வேண்டாம் உடலில், வாய்ப் பகுதிகளில் மண்ணெண்ணை பட்டிருந்தால் உடைகளை மாற்றி உடலையும், வாய்ப்பகுதியையும் கழுவி விட வேண்டும். சில சமயங்களில் குழந்தைகள் சுய நினைவையும் இழக்கக் கூடும். இந்த சந்தர்ப்பத்தில் குழ்ந்தையின் தலையை ஒரு பக்கத்துக்கு சரித்து குப்புறப்படுக்க வைத்தபடி வைத்தியசாலைக்கு உடனடியாககொண்டு வரவேண்டும்.

இறுதியாக வீட்டிலுள்ள பெரியவர்கள், பெற்றோர் முழு அவதானத்துடன் இருப்பதன் மூலம் குழந்தைகளுக்கு மண்ணெண்ணெய் அருந்துவதால் ஏற்படும் விபத்தை தவிர்க்க முடியும் என்பது எல்லோர்க்கும் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் எல்லோருக்கும் தற்செயலாக ஒரு குழந்தை மண்ணெண்ணெய் அருந்தி விட்டால் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதும் தெரிந்திருக்க வேண்டும். (முற்றும்)

# யூனியன் அஷ்யூரன்ஸ் உன்னத நிலையை வலுப்படுத்துகிறது

இலங்கையின் காப்புறுதித் துறையில் நீண்ட காலமாக முன்னணி வகிக்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி. தனது இணையற்ற அனுபவம், சிறந்த நிபுணத்துவம், மட்டற்ற சக்தி, பெருமளவிலான மூலவளங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி இத் தொழிலின் இயல்பையும் எதிர்காலப் பாதையையும் சாதகமான முறையில் மாற்றிவருகிறது. தேசிய பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கான ஒரு கருவியாக காப்புறுதித்துறையை விருத்தி செய்வதே இந்த மாற்றத்தின்; நோக்கமாகும். யூனியன் அஷ்யூரன்ஸின் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகப் பொது முகாமையாளர் திரு.ருக்மன் வீரரத்ன இது பற்றித் தெரிவிக்கையில்,

எந்தவொரு துறையை எடுத்துக்கொண்டாலும், அதில் ஆதிக்கம் செலுத்தும் நிறுவனம் தனது தலைமைத்துவப் பணியை மிகுந்த பொறுப்புணர்வுடன் நிறைவேற்ற வேண்டிய கடமையைக் கொண்டுள்ளது. இக் கடமைப் பொறுப்பே யூனியன் அஷ்யூரன்ஸின் செயற்பாடுகளுக்கு அச்சாணியாக விளங்குகிறது என்று கூறினார்.

வர்த்தக அரங்கிலே தலைமைத்துவம் என்பது நிதி ரீதியான வெற்றியைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த வகையில், யூனியன் அஷ்யூரன்ஸ் தனது சாதனைகள் மூலம் தலைமைத்துவத்தை இயல்பாகவே பெறுகின்றது. 2010ஆம் ஆண்டில் காப்புறுதித் துறை பொதுவாகப் பின்னடைவு கண்ட போதிலும், யூனியன் அஷ்யூரன்ஸின் ஆயுட் காப்புறுதி 25 சதவீதமும் பொதுக் காப்புறுதி 14 சதவீதமும், வளர்ச்சியடைந்து கணிசமான இலாபத்தை ஈட்டிக் கொடுத்தன. மிகப் பெறுமதி வாய்ந்த இலங்கை வர்த்தகப் பெயர்களைத் தரவரிசைப்படுத்தும் Brand Finance's பட்டியலில் 2010ஆம் ஆண்டு 33 ஆவது இடத்தை வகித்த யூனியன் அஷ்யூரன்ஸ் 2011ஆம் ஆண்டில் 28ஆவது இடத்திற்கு முன்னேறியது. ரூ.1.22 பில்லியன் என்ற வர்த்தகப் பெயர் பெறுமதி மதிப்பீட்டையும் யுயூ என்ற வர்த்தகப் பெயர் தரப்படுத்தலையும் பெற்றுக்கொண்டதன் பலாபலன் இதுவாகும்.

இலங்கைப் பொருளாதாரத்தில் யூனியன் அஷ்யூரன்ஸ் வைத்துள்ள வலுவான நம்பிக்கை பற்றிக் குறிப்பிட்ட வீரரத்ன, நாம் எப்போதும் மற்றவர்களை விட சாதகமான கண்ணோட்டத்துடன் செயற்படுகிறோம் என்று கூறினார். இக் கொள்கையின் காரணமாகவே, யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதித் துறையின் ஊக்கியாகவும் பொருளாதார வளர்ச்சிக்கான உந்து சக்தியாகவும் விளங்குகின்றது. சந்தை நிலைமைகள், வாடிக்கையாளரின் தேவைகள் என்பவற்றைப் பற்றிய சிறந்த அறிவின் அடிப்படையில் நாம் எமது தன்னம்பிக்கை கட்டியெழுப்பியுள்ளோம். பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களின் தேவைகளை நாம் சிறந்த முறையில் நிறைவேற்றுவதால் எம்மீதான நம்பிக்கையும் அதிகரித்துள்ளது.

இந்த நம்பிக்கையும் இலங்கையின் மறுமலர்ச்சி பற்றிய எமது இலட்சியக் கனவுமே நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நாம் எமது செயற்பாடுகளிலும் காப்புறுதி வசதிகளிலும் பாரிய மாற்றங்களைச் செய்வதற்குத் தூண்டுதலாயிருந்தன. எமது வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும் தேசிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதுமே இந்த மாற்றங்களின் நோக்கமாகும்.

## இலங்கை வங்கியுடன் டிமோ நடத்திய இரண்டாவது 'றிய பொல'

இலங்கை வங்கியுடன் இணைந்து DIMO நிறுவனத்தினால் இரண்டாவது "றிய பொல" அண்மையில் கடவத்தை புதிய நகரவளாகத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. பெருமளவான தனிப்பட்ட வாடிக்கையாளர்களும், நிறுவனங்களும் இதில் பங்குபற்றியிருந்தன. TATA வர்த்தக நோக்க வாகனங்கள் மற்றும் TATA பணிகள் வாகனங்கள் "றிய பொல"வில் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன் இலங்கை வங்கியின் விசேட லீசிங் கொள்வனவு திட்டங்களின் அறிமுகம் இடம்பெற்றது.

லசந்த அழகியவன்ன (கட்டட நிர் மாண, பொறியியல் சேவைகள் மற்றும் வீடமைப்பு பொது வசதிகள் பிரதி அமைச்சர்), சன்ன வீரவர்தன (பணிப்பாளர்-DIMO) எச்.எம்.முடியான்சே (உதவி பொது முகாமையாளர் - இலங்கை வங்கி), டாக்டர்.சி.சமரசிங்க (மேலதிக பொது முகாமையாளர் - இலங்கை வங்கி), குலரத்ன (மேலதிக பொது முகாமையாளர் - இலங்கை வங்கி), விஜித பண்டார (பொது முகாமையாளர்- TATA வர்த்தக வாகனங்கள்) ஆகியோரினால் இந்நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவர்களுடன் ஜிகான் பெர்னாண்டோ (விற்பனை முகாமையாளர் TATA வர்த்தகவாகனங்கள்), நவிந்த குருகுலசூரிய (முகாமையாளர்- TATA கொழும்பு கிளை) ஆகியோரும் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் விலைகோரல்களையும் விலைப்பட்டியல்களையும் விநியோகிப்பதற்கு டிமோ ஏற்பாடு செய்திருந்த வேளையில் வாடிக்கையாளர்களுக்கு விரைவானதும், இலகுவானதுமான லீசிங் வசதிகளை இலங்கை வங்கி வழங்கியது. றிய பொல அன்று இடம்பெற்ற கண்காட்சியின்போது 170க்கு மேற்பட்ட வாகனங்களுக்கான கோரல்கள் உறுதிப்படுத்தப்பட்டமை DIMO- BOC கூட்டு முயற்சியின் குறிப்பிடத்தக்க பதிவாகும்.

## பார்த்தி எயார்ரெல் லங்காவுக்கு BS 25999 தராதர அங்கீகாரம்

ஆசிய; ஆபிரிக்க நாடுகள் உட்பட 19 நாடுகளின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உலகளாவிய பிரபல தொலைத்தொடர்பு நிறுவனமான பார்த்தி எயார்ரெல், பிரிட்டனின் தர நிர்ணய நிறுவனத்திடமிருந்து (BSI) பெறுமதிமிக்க BS25999 தராதர அங்கீகா ரத்தைப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. மிகக் கடுமையானதும், கண்டிப்பானதுமான மதிப்பீட்டு வழிமுறைகளை அடுத்து பெற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் தராதர மதிப்பீடு, எயார்ரெல்லின் தனித்துவமான உன்னத தர சேவை வழங்கலைப் பிரதிபலிப்பதோடு, நாடு முழுவதிலுமுள்ள கிளையமைப்பின் ஊடாக நிறுவனத்தின் தரவுச் சேவைகள் வழங்கப்படும் தகைமையை உறுதிப்படுத் துகிறது.

ஸ்ரீலங்கா பார்த்தி எயார்ரெல்லின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், முகாமைத்துவ பணிப்பாளருமான அமாலி நாணயக்கார இது பற்றிக் கருத்து வெளியிடுகையில்,

இன்றைய வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த உலகில் இடையீடற்ற தொலைத் தொடர்பாடல் சேவையின் முக்கியத்துவம், மின் விநியோகம் மற்றும் நீர் விநியோகம் போன்ற வசதிகளின் இடையீடற்ற வழங்கலின் முக்கியத்துவத்திற்கு சமமாகும் என்று கூறினார். இத்தகைய முக்கியத்துவத்தின் நிலைமைகருதி, இலங்கையில் தொடர்ந்து தேர்ச்சியான தொலைத்தொடர்பு இருப்பதை நிச்சயிக்கவும், எமது வாடிக்கையாளர்கள் இடையீடற்ற தொலைத் தொடர்பையும், நியாயமான வர்த்தகத் தீர்வுகளையும் பெறவும் விரிவான நடவடிக்கைகளை எயார்ரெல் மேற்கொண்டுள்ளது.



செலிங்கோ லைஃப் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளரான புலோலிதெற்கு, புற்றளையைச் சேர்ந்த ஆறுமுகம்- ஆனந்தராசன் (வயது 33) என்பவர் திடீர் மரணமடைந்ததையடுத்து அவருடைய இழப்பீட்டுத் தொகையான 5 இலட்சத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான காசோலையினை நெல்லியடி கிளை இரண்டின் முகாமையாளர் வே.பாஸ்கரன் இறந்தவரின் மனைவியான ஆ.பங்கயர்கரசியிடம் கையளிக்கிறார். அருகில் சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி க.குகனேசன், விற்பனை ஆலோசகர் சுஜந்தியா ஆகியோர் உள்ளனர். (சு)

# புத்தம் புதிய 2012 Mercedes - Benz CLS Coupe வாகன வரிசையில் புதிய அறிமுகம்

2003ஆம் ஆண்டில் CLS ஐ அறி முகப்படுத்தியதன் மூலம் புதிய வாகனப் பிரிவு ஒன்றை Mercedes - Benz உருவாக்கியிருந்தது. இதன் மூலம் Coupe ரக வாகனங்களில் காணப்படும் அம்சங்களையும் saloon ரக வாகனங்களில் காணப்படும் அதிக இடபரப்பையும் ஒருங்கிணைத்திருந்தது. தற்போதைய அறிமுகம் இதன் வாடிக்கையாளர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளது. பல வருடங்களாக CLS மட்டுமே நான்கு கதவுகளைக் கொண்ட வாகனமாக திகழ்ந்தது. ஒக்ரோபர் 2004 முதல் உலகம் முழுவதிலும் கிட்டத்தட்ட 1,70,000 வரையான கொள்வனவாளர்களின் முதன்மைத் தெரிவாக இது விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


இரண்டாவது தலைமுறை CLS class (C218) வாகனத்தை அறிமுகப்படுத்துவதில் Dimo மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. தனது உன்னத வடிவமைப்பு, உயர் தொழில்நுட்பம், புதியரக உபகரண தொகுதிகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நான்கு கதவுகளைக் கொண்ட பிரிவில் தொடர்ந்தும் முன்னிலை வகிப்பதற்கு இது எதிர்பார்த்துள்ளது. வெற்றியை, சிறந்த ரசனையை மற்றும் தனித்துவத்தை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களைப் புதிய CLS ரக வாகனம் பரவசத்தில் ஆழ்த்தக்கூடியது. புதிய CLS ரகம் எமது ரசனையைத் தூண்டுவதாகவும் தனித்துவம், இளமைத்தோற்றம் ஆகிய அம்சங்கள் ஒன்றிணைந்த கண்ணைக் கவரும் வடிவமைப்பையும் கொண்டு அமைந்துள்ளது. குறிப்பிட்டுக் கூறக்கூடிய இதன் வெளிப்புறத் தோற்றமானது மிகவும் நவீன வடிவமைப்பைக் கொண்டதாக உள்ளதுடன், அதன் நீண்ட முன்புறமானது தெளிவாகத் தெரியக்கூடிய radiator grille ஐ கொண்டுள்ளது. புதிய CLS classic Coupe ரக வாகனத்தில் sideline களும், பரந்த தோற்றம் கொண்ட பின்புறமானது அகன்ற Shoulder line களையும் கொண்டுள்ளது.

CLS class ரக வாகனத்தின் உட்புறமானது உயர்தரம் வாய்ந்த பிரத்தியேக வடிவத்தையும் இடப்பரப்பையும் கொண்டுள்ளது. உட்புறத்தில் காணப்படும் விசேட அம்சங்களில் ஒன்றான அதிகமான பாதுகாப்புணர்வைத் தரும் உயரமாக அமைந்த பட்டிகள் காணப்படுகின்றன. முந்திய ரகமான CLS மாதிரியுடன் ஒப்பிடுகையில் ஒருவர் வசதியாக உட்காரக்கூடிய இட வசதி (Shoulder room) அமைந்துள்ளது. (முன்புறம் 21மி.மீ., பின்புறம் 13.மி.மீ.). அத்துடன் கையை வசதியாக அசைத்துக் கொள்வதற்கான இடவசதியும் (Rear room) (முன்புறம் +8மி.மீ., பின்புறம் 21மி.மீ.) அதிகமாகக் காணப்படுகின்றது. இதைவிட உட்புறத்தில் காணப்படும் பிற விசேட அம்சங்களாக உயர்தரம் வாய்ந்த தொழில் நுட்ப உபகரணங்களாக முதன் முதலாக முழு வர்ண பிம்பங்களைக் காட்டும் Central 10.9 cm TFT display மூன்று white-backed dials மற்றும் Neutral, Solar, Polar எனப்படும் மூன்று வர்ணத் தெரிவுகளையும் கொண்டுள்ளது. விரும்பிய வர்ணத்தை பல செயற்பாடுகளைக் கொண்டமைந்த ஸ்ரீயரிங் வீல் மூலமாகவும் Centre console இல் அமைந்துள்ள three pointed Star analogue clock மூலமாகவும் தெரிவுசெய்ய முடியும்.

விளிம்புச் சட்டகம் அற்ற அனைத்தும் அலுமினியத்தால் அமைந்த முதலாவது Mercedes - Benz வாகனம் CLS ஆகும். முற்றிலும் அலுமினியத்தினாலான இந்தச் சட்டகங்கள் வெளித்தெரியும் பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், முன்னைய பாரம்பரிய உருக்கினாலான கதவுகளைவிட 24கி.கி. நிறை குறைந்தவையாய் உள்ளன. இந்தக் கதவுகளைவிட bonnet front wings, bootlid, parcel shelf மற்றும் பிற வசதியை வழங்கும் பாகங்களும், suspensios, engines போன்ற பாகங்களும் அலுமினியத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் ஏரோடைனமிக்ஸ், Mercedes - Benz CLS இன் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. 13 வீதமாக அதிகரித்துள்ள Cd value 0.26 ஆகும். உலகின் முதலாவது பயணிகள் வாகனமான CLS லெட் தொழில் நுட்பத்தில் இயங்கும் முன்புற விளக்குகளைக் கொண்டுள்ளது. லெட் தொழில்நுட்பத்தில் உள்ளடங்கியுள்ள வர்ணமூலங்களை இது ஒருங்கிணைத்துள்ளது. CLS ரக வாகனத்தில் Bi-xenon முன்புற விளக்குகள் சாதாரணமாகப் பொருத்தப்பட்டுள்ளன. வேண்டுமானால் லெட் தொழில்நுட்பத்தில் இயங்கும் உயர்ரக முன்புற விளக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# பெண்ணிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர ஊக்குவிப்பு அவசியம்



பெண்களைச் சாதாரணமானவர்கள் என்று எண்ணுவது தவறு.

எதையும் சமாளித்து முன் கொண்டு செல்லக் கூடிய திறமைகள் அவர்களிடம் அதிகமாகவே உள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக எல்லாத் துறைகளிலும் பெண் கள் பங்களிப்புச் செலுத்தி வருவதைக்குறிப்பிடலாம்.

எனினும் ஒரு சில பெண்கள் மட்டுமே சாதனையை நிலை நாட்டுகின்றார்கள். அதிகமானோர் தங்கள் திறமைகளைத் தங்களுக்குள் மறைத்து, புதைத்து இலைமறை காயாக இருந்து விடுகிறார்கள். அத்தகையவர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பு அளிக்க வேண்டும். சில பெண்கள் தம் திறமை மூலம் தங்களது இலட்சியத்தை அடைவதற்கு முயற்சிக்கிறார்கள். அந்த இலட்சியத்தையே வாழ்க்கையின் குறிக்கோளாகவும் கொள்கின்றார்கள். அதைச் சிலர் அடக்கி, முடக்கி பெண்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடக்கூடாது என்று தடை என்னும் வேலியைப் போடுகிறார்கள்.

ஆண்கள் சாதிக்கும் போது ஏன் பெண்களால் மட்டும் முடியாது? பெண்களாலும் நிச்சயம் முடியும்! ஆணும் பெண்ணும் சமன் என்று இறைவன் படைத்தான். ஆனால் மனித இனமோ பெண்களைப் பிரித்துப் பார்க்கிறது. இது எந்த விதத்தில் நியாயம் ஆகும்?

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்பதற்கு அர்த்தமே இல்லாமல் பெண்களை இப்படி நடத்தலாமா? நவீன யுகத்தில் காலடி வைத்திருக்கும் இந்தக் காலத்தில் திறமைகளைக்கொண்டிருக்கும் பெண்களை முயற்சிக்காமல் இருப்பது தகுமோ?

பெண்களும் மூடநம்பிக்கைகளை மூட்டைகட்டி ஓரப்படுத்திவிட்டு சாதனை படைத்து நிலை நிறுத்துங்கள்; நாளைய சாதனைகளின் சின்னங்கள் நீங்களே. பெண்களே! இனியாவது முன்நகர முயலுங்கள்

வ.வைஷ்ணவி,
வீமன்கல்லு.

## உதாசீனம் செய்துவிடு...



இந்த மௌனம்
இனியும் வேண்டாம்
பெண்ணினமே!
உள்ளத்தில் ஒன்றும்
உதட்டில் ஒன்றுமாக
உரையாடி
உத்தமர் போல் நடிப்பவர்கள்
உன்னைச் சுற்றி வருகின்றார்கள்!
உண்மையான காரணம்
உன் அழகேதான்!
உத்தமி நீயென்பதை உணர்த்திட
வேண்டுமானால்
ஊமை போல் இருந்துவிடாதே
உதாசீனம் செய்துவிடு உன்
உயர் குணத்தைக் காட்டிவிடு.

ச.விஸ்வமலர்,
துணவி.

# சகோதரத்துவத்துடன் பழகி சிறந்த பெண் சமுதாயத்தை உருவாக்குவோம்



சமையலில் மட்டும் நங்கையர்கள் முடங்கிக் கிடந்த காலம் மலையேறிப் போனாலும் வீணான சோம்பேறித்தனத்திலும் பொழுது போக்குகளிலும் பணத்தை விரயம்செய்து காலம் கழிக்கும் சகோதரிகள் பலர் எம்மிடையே உள்ளனர்.

அது மட்டுமின்றி காதல் என்ற போர்வையில் தமது தேவை நிறைவேறியவுடன் ''தாம் ஏற்கனே திருமணம் ஆனவர்'' என்ற முத்திரையைப் பதித்து கன்னிப் பெண்களை வலை விரிக்கும் ஆண்கள் விடயத்தில் இருந்து பெண்கள் விழிப்புணர்ச்சி அடைய வேண்டும்.

நாகரீகமென்ற நினைப்பில் அரைகுறை ஆடைகளை அணிந்து ஆண்களைக் கவரும் பெண்களால் பெண்களின் புனிதத்துவமும் மகத்துவமும் சீரழிகின்றன.

இந்தப் புனிதமற்ற பெண்களால் ஆண்கள் சமுதாயம் பெண்களைக் கேவலமாக நினைக்கிறது.

எனவே இந்த உலகத்தில் ஆண், பெண் என்ற வேறுபாடு பாராது நன்னடத்தை உள்ளவர்களுடன் சகோதரத்துவத்துடன் பழகி சிறந்ததொரு பெண்கள் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.

சுகுணா,
வாழைச்சேனை.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
[illegible]



## கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணிக்கு,

உன் கடிதம் கிடைத்தது நீயும் உன் குழந்தைகளும் தனியாக வாடகை வீடு ஒன்றில் வசிப்பதாகக் குறிப்பிட்டிருந்தாய். சந்தோஷம். ஆனாலும் கண்மணி நீ மிகவும் அவதானத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நீயோ இளம் வயதில் கணவனை இழந்தவள், தனியாக வேறு வசிக்கிறாய்! இந்த நிலைமையில் எங்கே உன் மீது வீண் பழி சுமத்தி உன் பேரைக் களங்கப்படுத்தலாம் என்று எம் சமூகத்தில் சிலபேர் கண்ணில் எண்ணெய் விட்டுக் காத்திருக்கின்றனர். ஆகையால் எந்தக் காரணம் கொண்டும் வீட்டுக்குள் எந்த ஆணையும் காரணமின்றி அனுமதிக்காதே. உன்னைப் போன்ற பெண்களுக்கு சில ஆண்கள் வலியவந்து உதவுவார்கள். அவர்களை நம்பாதே! அவர்களின் உதவிகளுக்குப் பின்னால் நிச்சயமாய் நல்ல எண்ணம் இருக்காது. வெளியிடங்களுக்குச் செல்லும் போது நீ விதவை என்று மற்றவர்களுக்குத் தெரியவேண்டியதில்லை. அதனால் நீ சிவப்பு ஸ்டிக்கர் பொட்டு வைத்துச்செல். அதில் ஒரு தப்பும் இல்லை. ஒரு வகையில் அது உனக்கு பாதுகாப்புத்தான். என்ன செய்வது கண்மணி எல்லோருக்கும் வாழ்க்கை பூக்களால் மட்டும் நிரப்படுவதில்லை. முட்களும் சேர்த்துத் தான் நிரப்பப்பட்டு இருக்கிறது. ஆகையால் மனதைச் சோர விடாதே! வாழ்வில் நம்பிக்கை வைத்து வாழக் கற்றுக்கொள்.

அன்புடன்....
கங்கா.

## பெண்ணே விழித்திரு...



அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு
என்ற முறைமையைக் கொளுத்துவோம்.
சிறப்பாய் பெய்தாலும் சிகரம் தொட்டாலும்
உன்னைப் பெற்றவள் பெண்தானே.
தெய்வம் பூமிக்கு வருவதில்லை. அதனால்தான்
தனக்குப் பதிலாக பெண்ணை
அனுப்பிவைத்தது தாயாக.
உலகத் தாயான திரேசாவும் பெண்.
விஞ்ஞான உலகை வியக்க வைத்தகல்பனாவும்
பெண்தான்; இந்த உலகில் பெண் இல்லாமல்
எந்த ஜீவராசியும் இல்லை.
எனவே மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்.

வீ.ஜெயபாரதி,
மட்டுவில் / சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்.

தேவை

Singaporc, UKபோன்ற
நாடுகளுக்கான கற்கையுடன்
கூடிய வேலைவாய்ப்பு.
தொ ரி 0779692434

மணப்பெண் தேவை

யாழ்ப்பாண இந்து உயர் கௌரவ குடும்பம் வயது 31 பொறியியலாளர் சிங்கப்பூரில் அரச பணியாளருக்கு மெல்லிய தோற்றமுடைய பட்டதாரி இந்து கௌரவ மணப்பெண் தேவை. விருப்பமுடையோர் ctmb2011@gmail.com இல் சாதகக் குறிப்பு, புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.30

சண்டிலிப்பாய் ஐடியல் அக்கடமியின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நிர்வாக இயக்குநர் வி.எம்.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி க.வேல்நம்பியும்திருமதி சஜீதா வேல்நம்பியும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு திரு முருகன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.விமலன், சண்டிலிப்பாய் பிரதேசசபை நிர்வாக உத்தியோகத் தர்ம முரளி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.ஏ.ஜேசுதாஸ் அடிகள் ஆகியோரும் கலந்து கொள்வர். (ம)

# மூன்று திரையரங்குகளில் வெளியான 7 ஆம் அறிவு

வடமராட்சி,ஒக்.30

உலகெங்கும் ஒரே தினத்தில் தீபாவளி வெளியீடாக திரையிடப்பட்டுள்ள ''7 ஆம் அறிவு'' என்னும் திரைப்படம் திரைப்பட வரலாற்றில் முதல் தடவையாக யாழ். மாவட்டத்தில் மூன்று திரை அரங்குகளில் ஒரே நாளில் திரையிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புதிய திரைப்படங்கள் வெளியிடப்படும்போது யாழ். நகரில் உள்ள திரை அரங்குகளிலேயே திரையிடப்படுவதுடன், ஒரு திரைப்படப் பிரதியை வைத்துக்கொண்டு ஒரு சில வாரங்கள் நகரில் இரு திரை அரங்குகளில் திரையிடப்படுவதுண்டு. சிலவேளைகளில் அதிக எண்ணிக்கையான புதிய திரைப்படங்கள் ஒரே நாளில் வெளியிடப்பட்டால் நகரில் திரை அரங்குகள் இன்மையால், யாழ்.நகரையடுத்துள்ள சுன்னாகம், இணுவில் போன்ற புறநகர்ப் பகுதிகளில் உள்ள திரை அரங்குகளிலும் திரையிடப்படுவதுண்டு.

ஆனால் இம்முறை யாழ்.நகரிலும், சாவகச்சேரியிலும் ஒரே நேரத்தில் திரையிடப்பட்டுள்ளதுடன் யாழ். நகரில் ஒரே இடத்தில் ஒரே நிர்வாகத்தில் அமைந்துள்ள இரு திரை அரங்கிலும் இந்தத் திரைப் படம் காண்பிக்கப்படுகின்றது.

எனினும் புறநகர் பகுதியான சாவகச்சேரியில் புதிய திரைப்படம் திரையிடப்படுவது இதுவே முதல் தடவைஎன்பது குறிப்பிடத்தக்கது.

யுத்தத்துக்கு முந்திய 1970, 1980 காலப் பகுதியில் யாழ்.நகரில் 11 திரையரங்குகள் இருந்தன. தற்போது 4 திரை அரங்குகள் இயங்கி வருகின்றன.

இவற்றில் ஒன்று அண்மைக் காலத்திலேயே கட்டப்பட்டது. தற்போது 4 திரை அரங்குகளிலும் தொடர்ச்சியாக புதிய திரைப்படங்கள் திரையிடப்பட்டுள வருகின்றன.

( ம- 236)




**நெல்லியடி, கல்முனை, வவுனியா மற்றும் கிளிநொச்சி**
ஆகிய பிரதேசங்களில் எமது புதிய கிளைகள் திறக்கப்படுவதையடுத்து, உன்னத நோக்கம் மற்றும் அனுபவம் மிக்க காப்புறுதி விற்பனையாளருக்கெனத் தோன்றியுள்ள ஊக்கமூட்டும் சந்தர்ப்பங்களை பயன்படுத்துங்கள்.

**கிளை முகாமையாளர்**
காப்புறுதித்துறையில் ஆகக் குறைந்தது ஐந்து வருடகால அனுபவமும் அதனுள் முகாமைத்துவ நிலையில் ஆகக் குறைந்தது மூன்று வருடகால அனுபவமும் தேவை. ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக உரையாடும் திறமை அவசியம். தலைமைத்துவம், நிர்வாகத் திறமை, மற்றும் வாடிக்கையாளருக்கு இடையிலான சிறந்தத் தொடர்பாடல் திறமை என்பனவற்றை விண்ணப்பதாரர்கள் கொண்டிருக்க வேண்டும்.

**வெல்த்பிளானர்ஸ் முகாமையாளர்**
சிறந்த தலைமைத்துவத்தை காண்பிக்கும் வகையிலான முகாமைத்துவ நிலையில் ஆயுள் காப்புறுதித்துறையில் ஆகக் குறைந்தது மூன்று வருடகால அனுபவம் தேவை. கணித பாடத்தில் சித்தியுடனான சாதாரண தர பரீட்சைத் தகைமையும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் தேர்ச்சியும் இந்தப் பதவிக்கான அடிப்படைத் தகைமைகளாகும்.

**வெல்த்பிளானர்ஸ்**
கணித பாடத்தில் சித்தியுடனான சாதாரண தரப் பரீட்சைத் தகைமையும், உன்னத சேவைக்கான முக்கிய தேவைகளான மக்களுக்கிடையிலான தொடர்பாடல் திறமையும், நம்பிக்கை, உயர்ந்த சேவைத்தரம், வாடிக்கையாளர்களின் தேவைகளை விளங்கி திறமையுடன் பூர்த்தி செய்யும் ஆற்றல் என்பனவற்றைக் கொண்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிறந்த சந்தர்ப்பம் காத்திருக்கிறது.

பல்தேசிய நிறுவனம் மாத்திரமே வழங்கக்கூடிய வளர்ச்சியுடனான எல்லையற்ற ஆற்றலுடன் கூடியதும், எழுச்சியையும் சொந்த முன்னேற்றத்தையும் கொண்டதுமான மன நிறைவைத் தரும் தொழிலை விண்ணப்பதாரர்கள் எதிர்பார்க்கலாம்.

உங்களது சுய விபரங்களையும் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் தொடர்பாடல் விபரங்களையும் 10 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Zonal Manager, Central North & East
AVIVA NDB Insurance
Commercial Bank Bldg,
90-92 Kotugodalla Veediya, Kandy

AVIVA NDB
காப்புறுதி நிறுவனம்

தொலைபேசி 231 0310 மின்னஞ்சல் info@avivandb.com இணையத்தளம் www.avivandb.com

TBWA\TAL

# படங்கள் தரும் பதிவுகள்



சித்தன்கேணி கணேசா வித்தியாலயத்தின் சிறுவர் தினமும் மரம் நடுகை நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. பாடசாலை அதிபர் செல்வி ஜெயராணி நாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு உரையாற்றுகிறார். சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி லயன் சி.சதாசிவம், பாடசாலை அதிபர் ஆகியோர் மேடையில் உள்ளனர். மாணவர்களும் உள்ளனர். (ம)



பாண்டவெட்டை, சுழிபுரம் திருநாவுக்கரசு முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் சனச அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் பொன். அச்சுதம்பிள்ளை மங்கள விளக்கேற்றுகிறார். (ம-29)



சங்கானை விக்கினேஸ்வரா வித்தியாசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவிகளுக்கு பரிசில் வழங்குகிறார். அருகில் பாடசாலை அதிபர் பொ.தயானந்தன் உள்ளார். (ம-29)



வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சிவை ப்பிரமணியம் அச்சுதன் மகாதேவா சைவச் சிறார் இல்லச் சிறுவர்களுக்கு இனிப்புப் பொதிகளை வழங்குகிறார். (ம-302)



மானிப்பாய் பிரதேச சபையில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் தரம் 4 மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. சபைத் தலைவர் க.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச சபையின் செயலாளர் திருமதி புஸ்பவதி சிவலிங்கம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம-100)



வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் - முதியோர் தின விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் சிறுவர்களால் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுகின்றனர். (ம-29)



தம்பசிட்டி கலைமகள் தேசிய பாடசாலையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வின் போது.

### மினி கூலர் கார் தேவை (Mini Cooler Car)

மினி கூலர் கார் தேவை. உரிமையாளர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொ.போ.இல.: 0773979388

### ஆசிரியை தேவை

தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவிக்கு வர்த்தகமும் கணக்கியலும் வீட்டில் வந்து கற்பிக்க ஆசிரியை தேவை. திருநெல்வேலி பகுதியில்.
தொடர்பு: 0213216536

### காணி விற்பனைக்கு

நவாலி தெற்கு அரசடியில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776571736

### வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் 3 அறைகள் கொண்ட தொடர் மாடி வீடு Deed உடன் விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு: 0718897897
www.property.lk

### மணமகள் தேவை

யாழ்ப்பாண கிறிஸ்தவ விவாகரத்தான 31 வயது சிங்கப்பூர் பட்டதாரி அரசாங்க ஊழியருக்கு தகுந்த மணப்பெண் தேவை.
விருப்பமுடையோர்
ctmb2011@gmail.com
இல் விண்ணப்பிக்கவும்.

### வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாக்களும் விடைகளும் 2011 உள்ளடங்கலாக. மேலதிக தொழில்நுட்ப குறிப்புகளுடன் சகானியா வெளியீடுகள்
* பூபாலசிங்கம் * அன்னை
* சிதம்பரப்பிள்ளை * துர்க்கா ஸ்ரேசனறிஸ்

## Vacancies at Northern Central Hospitals ( Pvt ) Ltd.

Northern Central Hospitals ( Pvt ) Ltd. is a newly established modern Private Multispecialty Hospital situated at Thirunelveli, Jaffna - First of its kind in Northern Sri Lanka.

Applications are invited from suitable candidates for the following vacancies .

1. Dietitian – Should have a Degree in Nutrition / Dietetics from a recognized university and registered with Sri Lanka Medical Council as Dietitian / Nutritionist.
2. Kitchen Assitant – Should be familiar with modern cookery , kitchen equipments and be able to prepare special meals for patients on the direction of the Hospital Dietitian.

Prospective candidates should send their self made applications accompanied by their Bio Data and a passport size photograph to reach the following address **on or before 15.11.2011**

**Chief Operating Officer**
**Northern Central Hospitals ( Pvt ) Ltd.**
**342, Palaly Road,**
**Jaffna.**

## திறமைவாய்ந்த உங்களுக்கு ஒரு வாய்ப்பு

நாடெங்கிலும் வியாபித்துள்ள முன்னணி கைப்பேசி நிறுவனத்தில் இணைந்துகொள்ளும் வாய்ப்பு இதோ உங்களுக்கு. எங்கள் வியாபார நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக மிகவும் திறமைவாய்ந்த. செயல்திறனாளர்களை தேடுகின்றோம். நீங்கள் எங்களுடன் இணைந்துகொள்வதன் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தை நோக்கி உங்கள் பயணத்தை ஆரம்பியுங்கள்.

### கைப்பேசி தொழில்நுட்பவியலாளர்கள் யாழ்ப்பாணம்

- 30 வயதிற்கும் குறைவான,
- க.பொ.த சாதாரண அல்லது உயர்தரத்தில் சித்தி பெற்ற.
- கைப்பேசி தொழில்நுட்பத்துறையில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்
- ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் உரையாடுதல் மேலதிக தகைமை
- கைப்பேசி சீர்திருத்தும் உபகரணங்களை கையாளுவதில் குறைந்தது ஒருவருட அனுபவம் கொண்டிருத்தல்.

மேற்குறித்த தகைமைகளை கொண்டிருப்பின் உறவினரல்லாத, உங்களை பரிந்துரைக்கக்கூடிய இருவரின் பெயர்களை குறிப்பிட்டு 7 தினங்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அஞ்சலிடவும்.

*HR Department*
**Office Automation (Pvt) Ltd**
498, Galle road,
Colombo - 03

தொலைபேசி: 011 2565251 - 60
தொலைநகல்: 011 2565693

**Abans**
Office Automation (Pvt) Ltd.
*Genuine Products. Genuine Service.*

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 11 - 04 - 1946

ஆண்டவன் அடியில் 09 - 11 - 2010

லயன் அமரர்

### சங்கரப்பிள்ளை இராசரத்தினம் (J.P)

திதி: சதுர்த்தி

அன்புக்கு இலக்கணம் தந்து - இதன்
வழி எம்மைச் செலுத்தி மிகு வாஞ்சையுடன்
எமை வளர்த்து நல்ல வாழ்வினில்
எம்மை அமர்த்தி சென்ற எமதருமை
அப்பாவே....!
நாங்கள் என்றும் தங்களுடன்
தாங்கள் எங்களுடன்....

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (சி-5129) குடும்பத்தினர்.

அவசர நிதித் தேவைகளுக்கு உடனடி சிநேகபூர்வ சேவை

செலான் தங்க நகை அடகுச் சேவை

அதிக பணம் குறைந்த வட்டி கூடுதலான பரிசுகள்



1.125% மட்டுமே

24k 42,000/-
22k 39,000/-

மேலதிக விபரங்களுக்கு
அழைக்கவும் 011 200 88 88

தொலைபேசி: +94 11 2456456, +94 11 4701000
தொலைநகல்: +94 11 2456456
Brand Finance Rating "A" Fitch Rating: 'A-(lka)'
கம்பனி பதிவிலக்கம் PQ 9

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

www.eseylan.com

## வாசிப்பதன் ஊடாகக் கிடைக்கும் அறிவு

# ஆற்றுகைத் துறையை அளவிட உதவுமா?

கருத்துரைப்பதில் பலனில்லை என்னும் தலைப்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த விளக்கங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் 16.10.2011 அன்றைய உதயனில் வெளியான பாடகனுக்குத் தனித்துவத்தைக் கொடுப்பது அவரது பாணியே என்னும் தலைப்பிலான சோ.பத்மநாதனின் கட்டுரை தோற்றுவித்திருக்கும் எண்ணப்பாடுகளை இங்கே குறிப்பட விரும்புகிறேன்.

உனக்கா எனக்கா இசையறிவு அதிகம் இருக்கிறது என்னும் பலப் பரீட்சையை நிறுத்திவிட்டு தேவையான விடயங்களைப் பற்றி மட்டும் ஆழமாகச் சிந்தித்தல் ஆரோக்கியமானதாக இருக்கும் என எண்ணுகிறேன்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக நடந்து வரும் நிகழ்வுகள் பல, கலைத்துறையின் வளர்ச்சியின்மைக்கு வித்திடுவனவாகவே அரங்கேறி வருகின்றன. அரங்கக் கலைஞர்கள் இல்லாமல் இறுவட்டுடன் நடனமாடும் கலாச்சார விழாக்கள், ஒலிப்பதிவுக்கு வாயாட்டும் இசைக் கச்சேரிகள், வர்த்தகர்களால் நடாத்தப்படும் வெறும் மண்டப இசை விழாக்கள், பணத்தைச் சுருட்டுவதற்கான கலைவிழாக்கள், சுருதி,லயம் இல்லாத நாடக விழாக்கள் போன்றன எமது கலைத்துறையின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மையைத் தந்து நிற்கின்றன.

இதன் வரிசையிலேயே புதுமை செய்ய முயற்சித்ததுண்டா என்னும் கட்டுரையையும் அதன் தொடர்ச்சியையும் நோக்க வேண்டியுள்ளது. இசை பற்றிப் பேசுவதிலும் எழுதுவதிலும் இசையாளர்களை நிர்வகிப்பதிலும் ஏனைய துறையினர் ஈடுபடுவதால் இத்துறையானது பலவீனமானதொரு நிலையை எய்துமோ எனப் பலரும் ஐயுறுகின்றனர்.

ஒப்பற்ற இசையாளரின் இசை நிகழ்வைப் பார்த்துவிட்டு கேள்வி ஞானத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தெளிவில்லாத கருத்துக்களைப் பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் முன்னே கொண்டு வந்தமையைச் சரியானதென்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

எனது கருத்துக்களில் சிலவற்றுக்கு மட்டும் எழுதப்பட்டிருந்த பதில்கள் கூட குழப்பமானவையாகவே இருந்தன. இவற்றுக்கான விளக்கங்களை மீண்டும் இங்கே கூறி சங்கீத வகுப்பு நடத்த நான் விரும்பவில்லை.

இசை என்பது புனிதமான கலை. கருவிலே திருவுடையோரால் மட்டுமே இசைக் கலைஞராக முடிகிறது. ஏழு கோடி தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டில் இருக்கும் கர்நாடக இசைக் கலைஞர்களின் எண்ணிக்கை சில நூறைத் தாண்டாது. ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் இசையாளர்களையும் இலகுவாகக் கணக்கிடலாம் தானே. இராமநாதன் நுண்கலைக் கழகமும் இதற்கு விதிவிலக்கல்ல. பட்டம் பெறுவோரில் சிலர் ஆற்றுகையாளர்கள் ஆகின்றனர். ஏனையோர் ஆசிரியர்கள் ஆகின்றனர்.

சங்கீதபூஷணம் பொன்.சுந்தர லிங்கம், சங்கீதபூஷணம் எஸ்.பத்மலிங்கம் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் மிகச் சிறப்பான இசை விழாக்கள் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வந்தமை யாவரும் அறிந்ததே.

நாங்கள் சந்தர்ப்பம் தருகின்றோம், இரசிகர்களை நீங்கள் அழைத்து வாருங்கள் என்று இவர்கள் கூறவில்லையே. நேர்த்தியான திட்டமிடலும் துறைசார்ந்த நிபுணத்துவமும் கொண்ட அக்கலைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இசை விழாக்கள் நல்லூர்த் தேர்த்திருவிழா போல் நடைபெற்ற காலங்களை எப்படி மறக்க முடியும்.

இளங் கலைஞர்களின் களமாகவும் முது கலைஞர்களின் தளமாகவும் அவர்களால் நிர்வகிக்கப்பட்ட மன்றமானது அக்காலத்தில் திகழ்ந்தது. இதையும் கூறி எனது கருத்தாடலை முடித்து வைக்கிறேன். நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற இசைபற்றிய நூல் வெளியீட்டு விழா ஒன்றில் பேராசிரியர் ஒருவர் பேசுகிறார். முத்துச்சுவாமி தீட்சிதர் சிறந்த இசையமைப்பாளர், பாடகர், பாடலாசிரியர், தெய்வ பக்தி கொண்டவர். வாதாப கணபதிம் பஜேஹம் என்னும் அழகிய கீர்த்தனையைச் சலநாட்டை இராகத்தில் மிக அற்புதமாக இயற்றியுள்ளார் என்றார்: சபையில் இருந்த அனைவரும் சிரித்தனர். அந்தக் கீர்த்தனையின் இராகம் ஹம் சத்வனி என்பது சபையோருக்குத் தெரிந்திருந்தது. வாசிப்பதன் ஊடாகக் கிடைக்கும் அறிவை மட்டும் துணையாகக் கொண்டு ஓர் துறை பற்றிப் பேசுவதோ எழுதுவதோ ஏற்புடையதல்ல என்பதற்கு இவ்வாறான பல உதாரணங்களை வரிசைப்படுத்த முடியும். ★

இசைமாணி ஏ.எஸ்.கரன்,
யாழ்ப்பாணம்

### புகையிலை நாற்று மேடை அமைக்கும் பணிகள் துரிதம்

வடமராட்சி, ஒக்.30

வடமராட்சிப்பிரதேசத்தில் இவ்வாண்டுக்கான புகையிலைச் செய்கையைமேற்கொள்வததற்காகப் புகையிலை நாற்று மேடைகள் அமைக்கும் பணிகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

மழை ஆரம்பித்ததை அடுத்து இந்த வேலைகளில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

புலோலிப்பகுதியில் நாற்று மேடைகள் மிக வேகமாக அமைக்கப்பட்டுவருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

ஏனைய இடங்களானபொலிகண்டி, கரணவாய், கம்பர்மலை ஆகிய இடங்களில் புகையிலை நாற்று மேடைகள் அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

(ம-236)


**வாழும் கலை பயிற்சி**

தியானம், மூச்சுப் பயிற்சி, சுதர்சன கிரியா, யோகா



இன்று (30.10.2011) அறிமுக உரை 4.30 மணிக்கு
பயிற்சி: 2.30 - 4.30 / 5.00 - 7.30
மகேஸ்வரன் மணி மண்டபம்
(நல்லூர் வடக்கு வீதி)
குறிப்பு: பயிற்சி பெற்ற அனைவருக்கும் சுதர்சன கிரியா பயிற்சி
இன்று
மு.பகல் 10.30 மணி
மகேஸ்வரன் மண்டபம், நல்லூர்.
தொ.பே: 0770474757
பி.பகல் 2.00 - 3.30
வடமராட்சி - கரணவாய்,
மூத்த விநாயகர் கோயில்.

**விழி நீர் அஞ்சலி**



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும்
திரு ச. ஹரிதாஸ் அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர் தம்பு சண்முகசுந்தரம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
திட்டப் பணிப்பாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும் - மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

**ISRA** It's we who make your dreams come true
City & Guilds Approved Centre
STUDY IN UK, USA, CANADA & NEWZEALAND
UK Border Agency யினால் அங்கீகரிக்கப்பட்ட CITY & GUILDS ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகிறது.
- Student Visa வுக்கான B1 & B2 பரீட்சைகள்
- Spouse/Partner/Dependent Visa க்களுக்கான A1 பரீட்சை
- மேலும் Students Books, Cd's கடந்தகால வினாத்தாள்கள் வழங்கப்படும்.

ISRA (PVT) LTD.
149 1/1, Galle Road, Dehiwala.
Tel : 0112 726869
Email : info-lk@israglobal.com
www.israglobal.com
Simply call us
0773 668588
0773 783546

**நளின் காட்சியறையில்**

சென்ற வாரத்தை விட மேலதிக விலைக்குறைப்புடன்
இந்த வாரம்.......
Compuater
Laptops
LED (16" to 24)
LCD
HDD (500 GB to 2TB
Ram



உங்கள் கணனிகளுக்கு மந்திரங்கள்
Nalin City Showroom
365, Lusaq Plaza, Kasthuriyar Road, Jaffna.
0212220838 / 0777667975
Nalin Information Technologies
195/4, parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1166, 0777667974
Toner House
195/2, parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121, Fax 021 222 4994

**கார் விற்பனைக்கு உண்டு**

நல்ல நிலையில் உள்ள HB14 கார் (வெள்ளை நிறம்) உடன் விற்பனைக்கு உண்டு. (300- XXXX)
தொடர்பு: 0779963186

**ஓட்டோ**

RE 205-WPYL- XXXX,தொடர் இலக்க முடைய Bajaj பச்சை நிற ஓட்டோ விற்பனைக் குண்டு.
தொடர்பு:
0775572453, 0758014934

**கார் விற்பனைக்கு**

Maruti Suzuki 800 AC (2006 Model) KB XXXX,தொடரிலக்க நீலநிறக் கார் விற்பனைக்குண்டு.
Central Lock, Allow Wheel வசதிகளுடன்.
தொடர்பு: 0777291874

**வேலையாள் தேவை**

கொழும்பில் வதியும் அரச உத்தியோகஸ்தரான யாழ்.தம்பதியினருக்கு கொழும்பில் தங்கியிருந்து இரு சிறு குழந்தைகளை பராமரிக்கவும் வீட்டு வேலைகளில் உதவி செய்யவும் 20-25 வயதில் நற்குணமுள்ள பெண் தேவை. சம்பளம் ரூ.10,000/=
தொடர்பு:0773819855, 0773456779

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான NO.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்படுகின்றன, பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
சிற்றிபாம் ரேடேர்ஸ்,
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
0212221158

**காணி விற்பனைக்கு/வாடகைக்கு**

குப்பிளான் வடக்கு, கேணியடி வைரவர் கோயிலடியில் உள்ள 4 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு
திருமதி Y. விஜய்
தொடர்புகளுக்கு:- 0776636469

**தேவை**

நோயாளிகளை வீட்டில் சென்று பராமரிப்பதற்கு பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத பெண் தாதியர்கள், அற்றெண்டன் (Attendant) தேவை. சம்பளம் 15,000/= மேல், தங்குமிடம் இலவசம், வயது 20-45, தகமை : க.பொ.சாதாரண தரம்.
Visicare Home Nursing
No. 22/4, Nelson Place, Wellawatta, Colombo - 06.
Tel - 0714405303/0755930708

**கார் விற்பனைக்கு** 3.Sri XXXX தொடர்
இலக்கமுடைய 1000 கறுப்பு மைவர் கார் விற்பனைக்குண்டு
தொடர்பு:
கோண்டாவில் டிப்போ சந்திக்கு அருகில்
0776015470, 0771794847

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி தபாற் கந்தோர் சந்திக்கு அருகில் (வர்த்தக வங்கியின் முன்) ஏ-9 வீதியில் 2¼ பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776147151

**நாய்க்குட்டிகள் விற்பனை**

இரண்டு மாதங்கள் நிரம்பிய பெல்ஜியம் செப்பேட் இன நாய்க்குட்டிகள் ஊசி போட்டு பூச்சி நீக்கிய நிலையில் விற்பனைக்குண்டு. (புத்தகம் உண்டு)
தொடர்பு:
மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி,கலட்டி.0775001763

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 6266
0777741750

**இறைச்சிக் கோழி விற்பனை**

நிறை கூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (விலை 30/= வால் குறைக்கப்பட்டுள்ளது)
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி,கலட்டி.021 221 9292

**வீடு வளவு விற்பனைக்குண்டு**

மானிப்பாய் - இணுவில் வீதியில் மானிப்பாயில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் இணுவில் வீதிக்கு அருகில் 2¼ பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0776569911

**காணி விற்பனை**

முல்லைத்தீவு, அளம்பிலில் உள்ள உடுப்புக் குளம் 5 ஆம் கட்டைப்பகுதியில் முல்லைத்தீவு புல்மோட்டை திருகோணமலை பிரதான காப்பெற் வீதியில் 10 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P 0778691666, 0777208729

**மணமகன் தேவை**

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 23, உயரம் 5'1" பெண் ஒருவருக்கு, மணமகன் டாக்டர், பொறியியலாளர், கணக்காளர் (Accountant) போன்ற தகைமையுடையவராக இருக்க வேண்டும்.
தொடர்புகொள்க:- P.S.விஸ்வலிசம்மர்,
077-3448863

# மின்னொளியில் கூடைப்பந்தாட்டம் சென்றலைட்ஸ், பமிலியன்ஸ் சம்பியன்



சென்ரலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், ஒக். 30

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி 1 ஆதரவுடன் யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொட்டும் மழையின் மத்தியில் யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம் பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ், பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுச் சம்பியனாகின.

முதலில் இடம் பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துப் பட்டபிளை விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 29:04 புள்ளி என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

கொட்டும் மழையின் மத்தியில் இடம் பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தத்தமது அணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்குடன் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டனர்.

ஆட்ட முடிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி 35: 30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

ஆண்கள் பிரிவில் சிறந்த ஆட்டநாயகனாகச் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரன் என்.திவாகர் தெரிவு செய்யப்பட்டார்.

பெண்கள் பிரிவில் சிறந்த ஆட்ட நாயகியாக பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரங்கனை எஸ்.துஷ்யந்தி தெரிவு செய்யப்பட்டார்.

பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகம் 306 பி 1 மாவட்ட ஆளுனர் லயன் பிரியந்த பெர்னாண்டோ கலந்து கொண்டார். (த-23)

# மட்டக்களப்பு சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 30

மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் தேசிய இளைஞர் விழாவில் இடம் பெற்ற குழுப் போட்டிகளில் ஆண்களுக்கான கபடிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும், பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் குருநாகல் மாவட்ட அணியும் சம்பியன் ஆகின.

ஆண்களுக்கான கபடிப் போட்டியில் மட்டகளப்பு மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் மட்டக்களப்பு மாவட்ட அணி 29:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் குருநாகல் மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது. இதில் குருநாகல் மாவட்ட அணி 15:9 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)

# பற்றிக்ஸ்- ஹென்றிஸ் ஆட்டம் சம நிலையில்

வலி-வடக்கு,ஒக்.30

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேக பூர்வ உதைப்பந்தாட்டப் போட்டியில் இரு கல்லூரிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

14 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 04:00 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியை வென்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இரு கல்லூரிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி 05:00 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்றது.

20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் பெற வேண்டும் என்ற துடிப்புடன் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் இரு அணிகளும் கோல் எதையும் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. (த-86)

# ஸ்கந்தாவை வென்று ஸ்ரீ முருகன் சம்பியன்

வலி-வடக்கு, ஒக்.30

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளின் ஆதரவாளர்கள் கோஷத்தினால் மைதானம் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டதுடன் வீரர்களும் சளைக்காமல் மோதிக் கொண்டார்கள்.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணி வீரர்களும் உற்சாகமாகக் களமிறங்கி விளையாடினார்கள்.

ஆட்டம் முடிவடைய இறுதி இரு நிமிடங்கள் இருக்கையில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 01:00 என்ற கோல் கணக்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வென்று சம்பியனாகியது. (த-86)

# வீராங்கனை அனுஷாவின் முறைப்பாடு மூவர் கொண்ட குழுவினால் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக்.30

வடக்கு மாகாண விளையாட்டு வீராங்கனை அனுஷாவின் முறைப்பாடு தொடர்பாக வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் தலைமையிலான குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 'வர்ண இரவு' நிகழ்வில் வடமாகாண வீராங்கனை அனுஷா மேடையில் ஏறித் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து வெளிப்படுத்த முயன்றார். எனினும் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சபையில் இருந்த விருந்தினர்கள், உயர் அதிகாரிகள் மத்தியில் ஏற்பட்ட சலசலப்பு நிலையைத் தொடர்ந்து வடமாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இதற்கு உரிய தீர்வை வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

இதனடிப்படையில் வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன், வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, வடமாகாண விளையாட்டுத் திணைக்களத் தொழில்நுட்ப ஆலோசகர் ஆகியோர் கொண்ட குழுவினர் குறிப் பிட்ட விடயங்கள் தொடர்பாக வீராங்கனை அனுஷாவுடன் கலந்துரையாடித் தீர்வு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீராங்கனையின் கோரிக்கைகள் ஆராயப்பட்டு தீர்வுகள் எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (த-68)

# தீவக மாணவரை உள்ளடக்கி புதிய உதைபந்தாட்ட அணி

காரைநகர், ஒக்.30

வட பிராந்தியக் கடற்படை கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் விஜேகுணவர்த்தனவின் ஏற்பாட்டில் நெடுந்தீவு, அனலைதீவு, காரைநகர் பகுதி பாடசாலைகளில் இருந்து 15 வயதிற்குத்திற்பட்ட மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு திறமை வாய்ந்த புதிய உதை பந்தாட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் 60 மாணவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் காரைநகர் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



முதற்கட்டமாக காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, சுந்தர மூர்த்தி, நாயனார் வித்தியாலயம், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம் மற்றும் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு கடந்த 25 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை காரைநகர் கடற்படை முகாமில் வைத்து மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் 40 மாணவர்களுக்கு விற்றிமின் மாத்திரைகள் மற்றும் சத்துணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் காரைநகர் கடற்படைக் கட்டளைத்தளபதி டி.சில்வா, பிரதிக் கட்டளைத் தளபதி டி.பெர்னான்டோ மற்றும் கடற்படை மருத்துவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு விற்றமின் மாத்திரைகள், சத்துணவுப் பொதிகள் என்பவற்றினை வழங்கினர்.

தொடர்ந்து இந்த மாணவர்களுக்குக் கடற்படையினரின் விளையாட்டு வீரர்களினால் உதைபந்தாட்டப் பயிற்சி வழங்கப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் சிறந்த உதைபந்தாட்ட அணி ஒன்றினை உருவாக்குவதே எமது நோக்கம் எனவும் இதன் மூலம் யாழ் பிரதேச மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே புரிந்துணர்வையும், ஒற்றுமையும் வளர்த்துக் கொள்ள முடியும் என கடற்படையினர் மேலும் தெரிவித்தனர். (த-250)

# 14 வயதுக்கான உதைபந்து செவ்வாயன்று



யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். கல்வி வலயப்பாடசாலைகளுக்கு இடையிலான 14வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

# தொடரும் இலங்கையின் சோகம்




## பாகிஸ்தான் இலகு வெற்றி

இலங்கை அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 9 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வெற்றி கொண்டது. இதன் மூலம் மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் டுபாயில் கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் டில்ஷான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சங்கக்கார 78 ஓட்டங்களையும், வெலகெதர 48 ஓட்டங்களையும், ஹேரத் 29 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் உமர்குல், சயிட் அஜ்மல் தலா 3 இலக்குகளையும், யுனைட் கான், அப்துர் ரெஹ்மான் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை பாகிஸ்தான் அணி தொடங்கியது. பாகிஸ்தான் அணி சகல இலக்குகளையும் இழந்து 403 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அஷார் அலி 100, அஷார் சபிக் 59, யுனிஸ்கான் 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் தம்மிக்க பிரசாத், டில்ஷான் தலா 3 இலக்குகளையும், ஹேரத், வெலகெதர தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

164 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியது இலங்கை அணி. நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 88 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தது. பரணவிதாரன 42, சங்கக்கார 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

நேற்று நான்காவது நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே சங்கக்கார 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த மஹேல ஜெயவர்தன 5, அணித் தலைவர் டில்ஷான் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இருப்பினும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய பரணவிதாரன சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். பரணவிதாரனவும் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 141 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது.

மத்தியவரிசையில் களமிறங்கிய மத்தியூஸ் மட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். கௌசல்ய சில்வா 8, தம்மிக்க பிரசாத் 33, ஹேரத் 15, வெலகெதர 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கையின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. மத்தியூஸ் இறுதிவரை ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். இறுதியில் இலங்கை அணி சகல இலக்குகளையும் பறி கொடுத்து 257 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணியின் சார்பில் அஜ்மல் 5 இலக்குகளையும், யுனைட் கான், அப்துர் ரெஹ்மான் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் பாகிஸ்தான் அணியைவிட 93 ஓட்டங்கள் இலங்கை அணி மேலதிகமாகப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு 94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஹபீஸ் 59, அஷார் அலி 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர். தௌபீக் உமர் ஒரு ஓட்டத்துடன் ஹேரத்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதன் மூலம் 9 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கை அணியை பாகிஸ்தான் வெற்றி கொண்டது. ஆட்ட நாயகனாக சயிட் அஜ்மல் தெரிவு செய்யப்பட்டார். (15)


## பதிலடி கொடுத்தது இங்கிலாந்து

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ரி-20 ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது. ஸ்ரீவன்பின் பந்து வீச்சில் அசத்த, பீற்றர்ஸன் துடுப்பாட்டத்தில் ஜொலிக்க இங்கிலாந்து இந்த வெற்றியைப் பதிவு செய்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது இங்கிலாந்து அணி. முதலில் இடம்பெற்ற 5 ஒரு நாள் ஆட்டங்களில் இந்திய அணி 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் ஒரே ஒரு ரி-20 ஆட்டத்திலும் இந்தியா வெற்றிபெறும் என்ற நிலையிலேயே களமிறங்கியது. கொல்கத்தாவில் நேற்று இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணிமுதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, இங்கிலாந்தின் களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் 9 இலக்குகளை இழந்து 120 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இந்தியாவின் சார்பில் சுரேஷ் ரெய்னா 39, டோனி 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பில் ஸ்ரீவன்பின் 3 இலக்குகளையும், பிறஸ்னன், போப்ரா தலா 2 இலக்குகளையும் சரித்தனர்.

மிக இலகுவான இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணி 18.4 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்தின் சார்பில் பீற்றர்ஸன் 39 பந்துகளில் 53 ஓட்டங்களையும், சமிட் பட்டேல் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ஆட்டநாயகனாக பீற்றர்ஸன் தெரிவானார். (15)


டோனியின் ஆட்டமிழப்பு

## சொந்த மண்ணில் மண் கவ்வியது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவுக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 3 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டுள்ளது. இதன் மூலம் 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்க மண்ணில் ஆஸ்திரேலிய அணி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

டேர்பனில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கலிஸ் 54, அம்லா 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ஜோன்ஷன், டொஹெட்டி தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 15 பந்துகள் மீதமிருக்கையில் 7 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. வொட்ஸனின் அதிரடியில் பெறப்பட்ட 49, ஹஸியின் நிதானமான ஆட்டத்தின் மூலம் 45 ஓட்டங்களும் பெறப்பட ஆஸி. இந்த வெற்றியை பெற்றது. பந்து வீச்சில் கலிஸ், டுமினி தலா 2 இலக்குகள் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஆஸ்திரேலியாவின் வொட்ஸனும் தொடர்நாயகனாக மைக்கல் ஹஸியும் தெரிவானார்கள். (15)

உதயன்
30 ஒக்ரோபர் 2011 ஞாயிற்றுக்கிழமை

16 லட்சம் ரூபா பெறுமதிமிக்க உடைமைகளை

# யாழ். அத்தியடி உட்பட 6 வீடுகளில் திருடிய ஐவர் பொலிஸாரிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஒக்.30

நகைகள், மோட்டார் சைக்கிள், வீடியோ கமரா. கையடக்கத் தொலைபேசி, பணம் உட்பட மொத்தம் 15 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதிமிக்க உடைமைகளைத் திருடிய ஐந்து பேரைப் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த ஐவரில் பிரதான சூத்திரதாரியாக வவுனியாவைச் சேர்ந்த சி. செந்தூரன் என்பவர் செயற்பட்டு வந்துள்ளார். இவருக்கு ஏற்கனவே திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக 9 வழக்குகள், நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன. மற்றைய நால்வரும் சண்டிலிப்பாய், கந்தரோடை, யாழ்.முலவைச் சந்தி, சாவற்கட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஐவரும் கடந்த ஒகஸ்ட் மாதம் வெவ்வேறு நாள்களில் திருட்டில் ஈடுபட்டுள்ளனர். நாயன்மார்கட்டு, அத்தியடி, கொக்குவில், யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் ஆகிய இடங்களிலுள்ள 6 வீடுகளில் இவர்கள் திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தியடியிலுள்ள வீடொன்றில் 14 பவுண் நகைகள் மோட்டார் சைக்கிள், வீடியோ கமரா, பணம் உட்பட மொத்தம் 9 இலட்சத்து 88 ஆயிரத்து 50 ரூபா பெறுமதியான உடைமைகளையும், கொக்குவில் பகுதி வீடொன்றில் கையடக்கத்தொலைபேசி, பணம் என 21 ஆயிரத்து 700 ரூபா பெறுமதியிலும், இராசாவின் தோட்டப் பகுதியில் நகை மற்றும் பிறபொருள்கள், பணம் என்பன மொத்தம் 2 இலட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபா பெறுமதி கொண்ட உடைமைகளும் வீடுகளில் மேலும் சில பொருள்களையும் இவர்கள் திருடியுள்ளனர்.

இவர்கள் ஐவரும் யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுமார் 30-35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

# சிக்கனம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சுன்னாகம், ஒக். 30

நாளை 31ஆம் திகதி சர்வதேச சிக்கன தினமும், இதனை முன்னிட்டு இலங்கை வங்கி, சுன்னாகம் மேற்தரக் கிளையினால் இணுவில் மத்திய கல்லூரி சிக்கனம் சேமிப்பு தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் பொ.பாலகுமார் கருத்துரை வழங்குவார்.

நிகழ்வில் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையினால் வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# வடக்கு அபிவிருத்திக்கான கண்காட்சி வவுனியாவில் இன்று முதல் செவ்வாய் வரை

தேசத்தின் மகுடம் கண்காட்சிக்கு இணையாக வவுனியாவில் வடக்கு அபிவிருத்திக்கான முன்னோடிக் கண்காட்சி இன்று முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

வவுனியா வடக்கு நகரசபை மண்டபம் - மைதானம், பொது இடம், பூங்கா என பல இடங்களும் இதற்கென தயாராகியுள்ளன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களின் கீழ்வரும் 34 உள்ளூராட்சி சபைகளும் இதில் முழுமையாக பங்கேற்கவுள்ளன.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் தனித்தனியான பிரமாண்டமான கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் அபிவிருத்தி ஊடாக தேசிய அபிவிருத்தி எனும் தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறும்.

நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையிலான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் வருகை தரவுள்ளனர்.

விசேட போக்குவரத்து, வீதி ஒழுங்கு, குடி தண்ணீர், சுகாதாரம் மற்றும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி, நகர அபிவிருத்தி, பொது சுகாதார சேவைகள், ஆயுள்வேதம், திண்மக்கழிவுப் பொறிமுறை, வீதி பயன்பாட்டு சேவை, மூலிகைப்பொருள் உற்பத்தி என பல வழிகளிலும் மேற்கொள்ளப்படும் சேவைகள் ஊடாக வருமானத்தை பெருக்குவதும் அதன் மூலமாக தேசிய அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதையும் இலக்காக கொண்டே இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

2009 இல் முதல்முதலாக யாழ். மத்திய கல்லூரியில் உள்ளூராட்சி மாநாடும் -கண்காட்சியும் நடைபெற்றன. இரண்டாவது தடவையாக இவ்வருடம் தேசத்தின்மையமான வவுனியாவில் இடம்பெறுகின்றது.

இதில் புத்திஜீவிகள், கல்விமான்கள், நிபுணர்களின் விவாதங்கள், கருத்துக்களங்களும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ, பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்குமாகாண ஆளுநர். ஜீ.ஏ. சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி. ரமேஷ் விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-302)

# இலங்கையில் கொமன்வெல்த் மாநாடு பங்களாதேஷ் ஜனாதிபதி முழு ஆதரவு

பேர்த், ஒக். 30

கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் மாநாட்டின் அடுத்த அமர்வை இலங்கையில் நடத்த பங்களாதேஷ் முழு ஆதரவு வழங்கும் என்று பங்களாதேஷ் ஜனாதிபதி ஷேக்ஹசினா இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்று வருகின்ற பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பங்களாதேஷ் தலைவர் ஷேக் ஹசினாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அதன் போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பு இடம்பெற்ற போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உடனிருந்துள்ளார். பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்துவதற்கு மனித உரிமை அமைப்புக்கள், பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. போர்க்குற்றச் சாட்டுக்கள் குறித்து பொறுப்புக் கூற இலங்கை அரசு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்காமையினாலேயே எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-15)

## பார்மஸிக்கு ஆள் தேவை

நெல்லியடியில் உள்ள பார்மஸி ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலை ஆள் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு- 0771267222

## மரண அறிவித்தல்

### திருமதி கருணாநிதி விஜயராணி



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் முழங்காவில் இளநிலா குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணாநிதி விஜயராணி நேற்று (29.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் நாகபூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசையா தம்பதியரின் மருமகளும் கருணாநிதியின் அன்பு மனைவியும் லிங்கரூபன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கர்சினி மற்றும் சர்மினி (பிரான்ஸ்), தர்மினி (வவுனியா), கஜரூபன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் சுகந்தினி (இந்தியா), சுரேஷ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் சதுர்ஷன், பிரவின், கயல்விழி, மதுமிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சந்திரலிங்கம் மற்றும் சந்திராதேவி, சண்முகலிங்கம், வில்வராணி, விமலாதேவி, நாகேஸ்வரி, சொர்ணலிங்கம், நாகராணி, காலஞ்சென்றவர்களான கிருபானந்தலிங்கம், சந்திரராணி மற்றும் சந்திரலிங்கம், நிமால் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகராசா, தனிநாயகம், இராஜேஸ்வரி, ஜெகநாதன், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் சூரியகுமார், விஜயகுமாரி, குமுதினி, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழங்காவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 2, இளநிலா குடியிருப்பு,*
*முழங்காவில்.*

*தகவல்:*
*கருணாநிதி (கணவர்).*

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் அழைக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பிரதேச செயலர் அழைப்பு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார்.

இல்லை, இல்லை அழைப்பு அனுப்பப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய சிவசக்தி ஆனந்தனும் வினோநோதராதலிங்கமும் எமக்குக் கூட போதிய கால அவகாசம் இன்றியே அழைப்பு விடுக்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டினர்.

சற்றுக் கடுப்புடன் பதிலளித்த அமைச்சர் றிசாத் பதியுதீன், இந்தக் கூட்டம் எனது தலைமையில் தான் நடத்தப்பட வேண்டும். கூட்டமைப்பினரை அழைக்க வேண்டிய தேவையும் இல்லை. திணைக்களத் தலைவர்களை மட்டும் அழைத்தால் போதும் - என்றார்.

கூட்டமைப்பினர் கூட்டங்களைக் குழப்பத்தான் வருகின்றனர். உங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் கூட்டத்தை விட்டு வெளியேறலாம் என்றார் மீண்டும் அமைச்சர் பதியுதீன்.

அதற்கு சூடாகப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ''எம்மை வெளியேற்றிவிட்டு கூட்டத்தை நடத்த முடியாது. நாங்கள் மக்களின் பிரதிநிதிகள். எம் மக்களின் பிரச்சினைகளை நாங்கள்தான் சொல்ல வேண்டும்.'' என்றார். அதன்பின்னர் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

பின்னர் உரையாற்றிய அமைச்சர் றிஷாத் பதியுதீன், அரசியலுக்கு அப்பால் மனித நேயத்துக்கு முன்னுரிமையளித்து இந்த மாவட்டத்தின் ஒற்றுமைக்கும் அபிவிருத்துக்கும் தேவையான அடித்தளத்தை நாம் இட்டு வருகின்றோம். இந்தப் பயணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதய சுத்தியுடன் இணைந்து செயற்பட முன்வருவார்களா என்றால், அவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். (ஒ-15)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் மகாலிங்கம் நர்மதன்



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகராசா மகாலிங்கம் (மகேந்திரன்) நர்மதன் கடந்த 26.10.2011 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மகாலிங்கம் லிங்காவதி(றூபா) தம்பதியரின் ஏக புதல்வனும், சாளினி, சிந்துஜா, சங்கீதா, சோபிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகராசா - சின்னம்மா (மண்கும்பான்) மற்றும் இந்திரலிங்கம் - புவனேஸ்வரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புங்குடுதீவு,*
*3ஆம் வட்டாரம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

### ஜெகநாதன் லபிக்கா



52/4, உக்குளாங்குளம், வவுனியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகநாதன் லபிக்கா நேற்று (29.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு. ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தச்சாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.01, பாலி நகர்,**
**வவுனிக்குளம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

## மகனை ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்திருக்கிறார் என்று அவர் கூறினார்.

"2007ஆம் ஆண்டு எனது மகனை இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றனர். இன்று வரை எந்தத் தகவலும் இல்லை. ஜனாதிபதி செயலகம், 4ஆம் மாடி, பூஸா தடுப்பு முகாம் என்று அனைத்து இடங்களுக்கும் அலைந்து விட்டேன் ஆனால் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அண்மையில் பத்திரிகை ஒன்றில் எனது மகன் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் படம் பிரசுரமாகி இருந்தது. எனவே எனது மகன் இன்னும் உயிருடன் தான் இருக்கிறார். அவரைக் கண்டுபிடித்துத் தரவேண்டும். ஒரு மாத காலத்துக்குள் எனது மகனைக் கண்டுபிடித்துத் தராவிட்டால் நான் தற்கொலை செய்துகொள்வேன்" என்றார் அந்தத் தாயார்.

"1996ஆம் ஆண்டு எனது மகனைப் பட்டப்பகலில் இராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றார்கள். யாழ். நகர் சின்னக் கடை பாடிச் சந்தியில் இருந்த படையினரே எனது மகனைக் கைது செய்தார்கள். ஆனால் பின்னர் எனது மகனைக் கைது செய்ய வில்லை என்று மறுத்துவிட்டார்கள். எனவே எனது மகனைக் கண்டுபிடித்துத் தாருங்கள்'" என்று நிகழ்வில் கலந்து கொண்ட மற்றொரு தாயார் கூறினார்.

வடக்கு கிழக்கில் போர் உக்கிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் இலங்கையில் பல ஆயிரக்கணக்கானோர் காணாமற் போயிருக்கிறார்கள் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூறுகின்றன. 1998-99 காலப் பகுதியில் மட்டும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 800 பேர் காணாமற்போனார்கள் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட பல இடங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் இவர்களுக்கு என்ன ஆனது என்பது பற்றி இன்னமும் தெரியவரவில்லை.

இவர்களில் ஒரு தொகுதியினர் கொலை செய்யப்பட்டு செம்மணி வெளியில் புதைக்கப்பட்டனர் என்று, கிருசாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் 'செம்மணிப் புதைகுழி' எனப் புகழ்பெற்ற இந்த வழக்கில் காணாமற்போனவர்களின் சில உடல்களின் எச்சங்கள் செம்மணி வயல்வெளிகளில் இருந்து மீட்கப்பட்டன. எஞ்சியவர்களுக்கு என்ன ஆனது என்று இதுவரையில் தெரியவில்லை.

இதன் பின்னர் 2005-2009ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் காணாமற்போனார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்தும் இதுவரை தகவல்கள் இல்லை.

இறுதிப் போரின் போது இராணுவத்தினரிடம் தமது கண்முன்னால் சரணடைந்த போராளிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் காணாமற்போயுள்ளனர் என்று, ஜனாதிபதி நியமித்த நல்லிணக்கத்துக்காகக் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவிடம் பல நூற்றுக்கணக்கானவர்கள் முறையிட்டுள்ளனர். அவர்களைத் தேடிக் கண்டறியும் முயற்சிகள் நடவடிக்கைகள் எவையும் அரசால் இதுவரை மேற்கொள்ளப்படவும் இல்லை.

1999ஆம் ஆண்டு ஐ.நா. மேற்கொண்ட ஆய்வில், காணாமற்போனவர்களின் எண்ணிக்கையில் உலகில் இரண்டாவது இடத்தில் இலங்கை இருப்பது தெரியவந்தது. இலங்கைப் படைகளால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 12,000 என்று அது பட்டியலிட்டது. காணாமற்போனோர் குறித்துத் தனக்குக் கிடைத்த 20,000 முறைப்பாடுகளில் 11,000 பேரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று 2003இல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்திருந்தது. அதன் பின்னர் காணாமற்போனவர்கள் குறித்த புள்ளி விவரங்கள் இன்னமும் திரட்டப்பட்டு வருகின்றன. (உ-15)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் மணிக்கு 20-30 கிலோமீற்றர் வேகத்தில் வீசும்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் நேற்றுக்காலை 8.30 மணிவரை யாழ்ப்பாணத்தில் 64.1 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. திருகோணமலையில் 53 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் அம்பாறையில் 74.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. (ஒ-4)

## இன நல்லிணக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை வென்றெடுப்பதென்பது இலங்கையின் வரலாற்றையே புரட்டிப்போடும் நிகழ்வாக அமையும்" என்றார் மஹிந்த.

பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு ஆஸ்திரேலியப் பிரதமர் கில்லார்ட் நேற்று வழங்கிய காலை உணவில் பங்கெடுத்து சுமார் 20 நிமிடங்கள் பேசிய போது மஹிந்த இதனைக் கூறினார்.

1998இல் மலேசியா, பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை நடத்தியதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த வருடங்களில் அது பெரும் பொருளாதார வளர்ச்சியை ஈட்டியதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறே இலங்கையின் வளர்ச்சியிலும் 2018 விளையாட்டுப் போட்டி முக்கிய பங்கை வகிக்க முடியும் என்று கூறினார்.

2018 பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு இலங்கையின் அம்பாந்தோட்டை நகரமும் ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரமும் போட்டி போடுகின்றன. எனினும் ஆஸ்திரேலியா ஏற்கனவே பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி விட்டதால் இந்த வாய்ப்பை இலங்கைக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார் மஹிந்த.

போட்டியை நடத்தும் வாய்ப்புக் கிடைத்தால் இலங்கை அரசு அதற்குத் தனது மொத்த ஆதரவையும் வழங்கும் என்றும் அவர் கூறினார். (உ)

## பான் கீ-மூன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமெரிக்கப் பயணம் மற்றும் ஐ.நா. செயலரை கூட்டமைப்பினர் சந்திப்பது குறித்து உதயனின் சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு தொலைபேசி மூலம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். கூட்டமைப்பினரின் அமெரிக்கப் பயணம் தொடர்பில் அரசு அலட்டிக்கொள்ளவில்லை என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா. செயலரைச் சந்திக்கமாட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஐ.நாவில் அவர்கள் செயலாளர் நாயகத்தை சந்திப்பதாக இருந்தால் அது தொடர்பான தகவல் எமக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அப்படி எந்தத் தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை.

நாடாளுமன்றத்தைப் பார்க்கச் செல்லும் ஒருவர் நாடாளுமன்றத்தை வேண்டுமானால் பார்த்துவிட்டு வரலாம். ஆனால் சபாநாயகரை பார்த்தேன் என்று சொல்ல முடியுமா? அதுபோல, கூட்டமைப்பினர் ஐ.நாவின் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்துபேசக் கூடும். ஆனால் செயலாளரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் கிடையாது.

இன்னொன்றையும் கூறவிரும்புகின்றேன். தமிழ்க் கூட்டமைப்பினர் எவரைச் சந்தித்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை. ஐ.நாவில் அங்கம் வகிக்கும் ஒரு நாடு இலங்கை. எனவே இப்படியான கட்சிகளின் செயற்பாடுகள் அல்லது முயற்சிகள் எந்த விதத்திலும் எம்மைப் பாதிக்கப் போவதில்லை.

இவ்வாறு தெரிவித்தார் சவேந்திர சில்வா. (சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தார்கள் என்றும் அவர் கூறினார். இந்தியாவின் தேசிய ரீதியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பேசப்பட வேண்டும் என்பதற்காகவே தான் அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார் என்றும் அவர் கூறினார்.

அந்தக் கூட்டத்தின் தீர்மானத்தில் தமிழர் தாயகம் தன்னாட்சியுரிமை என்பவற்றைப் பயன்படுத்த நீங்கள் எதிர்த்தீர்களாமே என்று கேட்டதற்கு, "அந்தக் கூட்டத்துக்கு இரண்டாம் நாள் சென்றபோது, தமிழ்த் தேசியம் என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென நாங்கள் கூறியிருக்கிறோம் என்றனர். அங்கு நான் சொன்ன விடயம் என்னவெனில் இந்த மாதிரியான பிரச்சினைக்குரிய விடயங்கள் நாம் முதலில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. லட்சக்கணக்கான மக்கள் துன்பப்படுகின்றனர். அவர்கள் தொடர்பான பிரச்சினையில் இந்திய மத்திய மாநில அரசுகள் என்ன பார்வையுடன் இருக்க வேண்டும் என்பதை மட்டும் எடுத்துச் சொன்னீர்களானால் நன்றாய் இருக்குமே என்றுதான் எடுத்துச் சொன்னேன்" என்று கூறினார் நாச்சியப்பன்.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டும் என்று உலக நாடுகள் வலியுறுத்திவரும் நிலையில், இந்தியா மட்டும் மௌனம் காப்பதாகக் கூறப்படுவதை அவர் மறுத்தார். "மௌனமாக இல்லை. தன்னால் முடிந்ததை இந்தியா செய்கிறது" என்றார் அவர். (ஏ)

## போர்க்குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை உறுதிப்படுத்தும் வகையில் அமையும் என்று நம்புகிறேன். இது மிகவும் முக்கியமானது. இலங்கை அரசின் மனிதஉரிமை நிலைமை மிகவும் உன்னிப்பாக ஆராயப்பட்டு வருகிறது.

ஏனென்றால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அங்கு கொமன்வெல்த் மாநாடு நடக்கப் போகிறது. தமிழ்ப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கையின் ஆயுதப்படைகளால் போர்க்குற்றங்கள் புரிந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

என்ன நடந்தது- என்னென்ன போர்க்குற்றங்கள் இடம்பெற்றன- யார் பொறுப்பு என்று கண்டறிய பொருத்தமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### குழந்தைவேலு விஜேந்திரா



புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணி குழந்தைவேலு விஜேந்திரா நேற்றுமுன்தினம் (28.10.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு- முத்தம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், மேரிடிலுக்சியின் பாசமிகு தந்தையும், ஜோசனின் அருமை மாமனும், கமலாதேவி, இராஜகுலேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்வரட்ணம் (சட்டத்தரணி) தம்பதியரின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற சட்டத்தரணி இராமநாதன் மற்றும் சட்டத்தரணி சுகந்தி, மொகாந்தி, பீரிஸ், சாளினி, றம்லா, டேவிட், டொமினிக் ஆகியோரின் மைத்துனரும், நிலானி, செந்தில்நாதன், பூம்பாவை, வாசுதேவன், அச்சுதராமன், அருள்மொழிராமன், சிறிராஜாராமன் ஆகியோரின் மாமனும், எழில்மொழி, சுபாங்கி ஆகியோரின் பெரிய தகப்பனும், வர்ணன், நிலக்சன், லாவண்யா, ஆரண்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (02.11.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லமான திசிரி, புலோலி கிழக்கு, பருத்தித்துறையில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
சகோதரர் சட்டத்தரணி,
G.இராஜகுலேந்திரா.

### சிதம்பரப்பிள்ளை நல்லையா

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மருதடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நல்லையா நேற்று (29.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பென்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா (ஆசிரியை), சோமசுந்தரம், நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற (சிதம்பரநாதன் - மின்சாரசபை) மற்றும் நகுலநாதன் (பிரதி அதிபர் நாவாந்துறை றோ.க.வி), தாரணி, காலஞ்சென்ற தயாபரி மற்றும் பூங்கூந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணமணி, வசந்தா (ஆசிரியை கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), காலஞ்சென்ற அருளானந்தசிவம் (ஆசிரியர், கொழும்பு டி.எஸ் சேனநாயக்கா கல்லூரி), பாலசுப்பிரமணியம் (மின்சாரசபை), சங்கமித்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், குலேந்திரன், கிருபைரூபன், சுமுதினி, கௌசிகா, லவலோஜன், அருள்தரன், தனரூபி, சுகந்தன், கிருபாளினி, பாலச்சந்திரன், அருள்பாளினி, யதுர்ஷன், சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும், சங்கவி, புரட்சிகன், ராகவி ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதடி,*
*காரைநகர்.*

*தகவல்:*
நகுல்நாதன் (மகன்)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
29.03.1945



விண்ணில்
30.10.2007

திருமதி
**மேரிபிலோமினா ஸ்ரீபன்**

குடும்பத்தின் ஒளி விளக்கே
கூடு விட்டுப் போனதுவோ
எண்ணியே ஏங்குகிறோம் என்றுமே இதயமாக
கண்ணிலே நிறுங்கூர்க் கலங்கியே
கருத்தினோடு மண்ணிலே வாழும் காலம் மறவா
எப்போதென்று மண்ணுமோர் பணியும் விட்டுப்
பதைக்கிறோம் வாராயோ?

இல.20 கிருஷ்ணபுரம்,
கிளிநொச்சி.

கணவர்,
பிள்ளைகள்.

**காணி விற்பனைக்கு**

கைதடி வீட்டுத்திட்ட நம்பிக்கை நிதியத்தின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட (அளவீட்டுப் படத்துடன்) ஒவ்வொன்றும் நான்கு பரப்புடைய காணித்துண்டுகள் இரண்டு விற்பனைக்குண்டு எண் (131, 114)

தொடர்புகொள்க:
021 3002268, 0773090580

# காற்றில் பறந்தன குடிசைத் தகரங்கள்

வடமராட்சி, ஒக்.30

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீசிய மழையுடன் கூடிய கடுங்காற்றினால் அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களின் குடிசையில் போடப்பட்ட கூரைத் தகரங்கள் காற்றில் பறந்தன.

மருதங்கேணி, வத்திராயன், தாளையடி, செம்பியன்பற்றுப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களே இந்தப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். எனினும் இந்த மக்களுக்கு எந்தவித உதவியும் கிடைக்காத நிலையில் தூக்கி வீசப்பட்ட தகரங்களைத் தேடியெடுத்து குடிசைகளைச் சீரமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-323-236)

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

**ரூபா 50,000/-க்கு**
மேல் மாத வருமானம் பெற
இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிரீம் இயந்திரம்**




கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

Price Rs.99,000/- upwards

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 077 391 8870, 077 1066902

**பணியாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் Trans Port நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணிநிலைக்கு பணியாளர்கள் தேவை.
1. சாரதி
2. உதவியாளர்
முன்னனுபவம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.4182
மே/பா உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்ப U.K.பிரஜாவுரிமை பூரன் தொழில் புரியும் மீன ராசி 36 வயது செவ்வாய் தோஷம் அற்ற 39 கிரகபாவமுடைய நல்ல சமூக அந்தஸ்தான குடும்பப் பின்னணியுடைய மகனுக்கு ஆங்கில அறிவாற்றலுள்ள பெண்ணை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்புகள் யாவும் மிகவும் கண்ணியமாகப் பேணப்படும்

தொடர்பு: 0754164589

**கணக்கீடு**
A/L 2012& Day | A/L 2013
திரு.பாலகஜன்
H.N.Dip in ACC
Paper Class
EPF @ ETF

| New Economics College மணிக்கூட்டு வீதி | NEC ஆனைப்பந்தி | |
|---|---|---|
| Sat, Sun 12 - 1 pm | பிரிவு I | பிரிவு II |
| | Tue, Thu 4 - 5 pm | Mon, Wed 6 - 7 am |
| ஆரம்பம்: 05.11.2011 சனி 12 noon | Tue 4 pm | நாளை 6am |

**காணி விற்பனைக்கு**

உடுப்பிட்டி தொண்டைமானாறு வீதியில் 10 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 3218172

**விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு, இராச வீதியில் 5 பரப்பிலமைந்த வீடும், காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0773101371

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் தொடங்கவிருக்கும் கணினி விற்பனை நிலையத்துக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
1. அலுவலக பணியாளர் (பெண்கள்)
(அடிப்படை கணினி அறிவு மற்றும் கணக்கியல் அறிவு விரும்பத்தக்கது)
2. சந்தைப்படுத்தல் அலுவலர் (ஆண்கள்)
(சந்தைப்படுத்தல் துறையில் முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு: 0770555855
antonyuthayakumar@gmail.com

**உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக
உங்கள் உறவுகளின்
இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள். மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS



**திருமுருகன் கொம் நெற்**
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

**உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...**

City & Guilds
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
**Engineering** Qualifications



Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



**City & Guilds Progression Path**
- Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
- Professional Engineer (Equivalent to BEng-UK)
- Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
- NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
- A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
- O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

**BENEFITS**
- வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான தேவைப்படும் அதிகூடிய தகமையுள்ள சான்றிதழ்.
- ஆஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகளில் நிரந்தர வதிவுரிமை பெற்றுக்கொள்ளக் கூடிய விசேட தகமைகள்.
- விரைவாகவும், மிகக் குறைந்த செலவில் பூர்த்தி செய்யக் கூடிய சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்.
- உங்களுடைய பொறியியல் பட்டப்படிப்பை இலங்கை அல்லது இங்கிலாந்தில் பூர்த்தி செய்யக் கூடிய வாய்ப்பு.
- IIESL நிறுவனத்தின் அங்கத்துவத்தை பெறக்கூடிய வாய்ப்பு.

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

அனுமதிகள் ஆரம்பம்!

0214 66 66 99 / 0771 067 394

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

**SKILLS INTERNATIONAL (PVT) LTD.**
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.